ஓம்

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

அத்வைத சம்பாஷணைகள்

ஸ்ரீ சுப்பிரமண்ய சிவம்,

ஸ்ரீ பாரதாச்ரமம், பாரதாபுரம்,

பாப்பாரப்பட்டி (P. O.), சேலம் ஜில்லா.

(மொழிபெயர்ப்பு ஆசிரியரும், [illegible])

இந்நூல் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை,

பார்க் டவுன் (P. O.), சென்னை.

இந்நூல் மொழி பெயர்ப்பாசிரியர்

ஸ்ரீ சுப்பிரமண்ய சிவம்,

மொழி பெயர்த்த வேறு தமிழ் நூல்கள்.

		ரூ.	அ.
1	ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் விரிவான சரித்திரம் 41 அத்தியாயம், 703 பக்கங்கள் ...	2	0
2	ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் வைபவம் ...	1	4
3	ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பிரஹ்மானந்த சம்பாஷணை ...	3	0
4	ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் வேதாந்த ரஹஸ்யம்...	2	0
5	ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் விரிவான சரித்திரம் 27 அத்தியாயங்கள், 520 பக்கங்கள் ...	2	0
6	,, அருள்மொழிகள் (அமெரிகா உபதேசம்)	1	8
7	,, ஆத்மஞான ரத்னம் (1004 உபதேச மொழிகள்) ...	2	0
8	ஸ்ரீ ராமாநுஜவிஜயம் (விரிவான சரித்திர)ம் ...	2	0

சிறைச்சாலைக்குள் இயற்றிய தமிழ் நூல்கள்.

9	சச்சிதானந்த சிவம்—குரு சிஷ்ய சம்பாஷணை மூலமாக தமது அநுபவத்தை 40 அதிகாரங்களாக வேதாந்தத்தின் அநுபவ விஷயங்களை விளக்கியது	1	2
10	மோக்ஷசாரதன ரகசியம் (நான்குவித யோக ரஹஸ்யங்கள் அநுபவ பூர்வமாக விளக்கப்பட்டுள்ளன) ...	4	0

இந்நூல் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை,

4/34, நயினியப்ப நாயக்கன் வீதி, பார்க் டவுன், சென்னை.

முகவுரை

தியாக புத்தியும் தேசபக்தியும் அங்கங்களாகக்கொண்டு, தைரியமும் தளராத ஊக்கமும் ஆபரணங்களாகப் பூண்டு, மனுஷ்யவர்க்கத்தின் லக்ஷியம் மகத்தான மோக்ஷபதவி யடைவதே யென்னும் கொள்கையை இவ் வுலகில் எங்கெங்கும் சென்று விண்டு இணையிலாக் கீர்த்தியையும் ஈறிலா இன்பத்தையும் அடைந்து, புவிராஜர்களாலும் கவிராஜர்களாலும் போற்றப் பெற்று, பொன்னாடாம் இப் புநித நாட்டுக்கு மாத்திரமல்ல, உலகமுழுதுக்குமே ஒரு புத்துயிர் அளித்துச் சென்ற ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளுடைய பல பக்ஷங்களைப்பற்றி நான் பல புத்தகங்கள் எழுதியிருக்கிறேனாயினும் அவருடைய சாதாரண சம்பாஷணைகளைப்பற்றி நான் மொழிபெயர்த்து எழுதும் நூல் இதுவே முதலாவதாம். சாதாரண சம்பாஷணைகளிலிருந்துதான் மனிதனுடைய உண்மையான ஸ்வபாவமும் குணமும் தானே வெளிப்படும்; ஏனென்றால், மனிதன் முன் கூட்டியே தீர்மானித்து ஏற்படுத்திக்கொள்கின்ற பிரசங்கங்களிலும் மற்றும், அதற்கென்று தயார் செய்துகொண்டோ அல்லது யோசனையுடனே ஜாக்கிரதையாகப் பேசலாம்; இதனால் அவன் செயற்கையினாலே பெயர் பெற்றுப் பெரிய மனிதனாய்விடலாம். ஆனால், சாதாரண சம்பாஷணைகளிலே அவனுடைய இயற்கைக் குணம்தான் வெளிப்படும். ஆகையினால், குன்றின் மீது வைத்த விளக்குப்போல, என்றும் குறையாது பிரகாசிக்கும் இயல்பினராம் ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தருடைய இந்த சாதாரண சம்பாஷணைகள் அவருக்கு ஏற்கனவேயிருக்கும் பெருமையை ஒன்றுக்கு நூறுமடங்கு அதிகமாகப் பிரகாசிக்கச் செய்யுமென்பதில் சந்தேகமில்லை. அவருடைய வாயிலிருந்து வந்ததெல்லாம் வேதங்களுக்கு வியாக்கியா

னம் போன்று அவ்வளவு ஆழ்ந்த கருத்துக்களும் ருசியும் பொருந்தியிருந்தன. லௌகிக விஷயங்களைப்பற்றியும் வைதிக விஷயங்களைப்பற்றியும் பலர் அவரிடத்துப் பல விதமான கேள்விகள் கேட்டுத் தெளிவடைந்திருக்கிறார்கள். அவருடைய ஆணித்தரமான மறுமொழிகளும் அவற்றி லடங்கிக் கிடந்த அதியற்புதமான, ஆநந்த ஹேதுவான ஆராய்ச்சிகளும் எவருடைய மனத்திலும் இன்பத்தையும் நியாயத்தையும் எளிதில் ஊட்டவல்ல இனிய வார்த்தைக் கோர்வைகளும் நிகரற்றனவாய் இச் சம்பாஷணைகளில் விளங்குகின்றன. எனது மற்ற 'ஸ்ரீவிவேகாநந்தர்' நூல்களைத் தமிழ் நாட்டினர் எவ்வளவு ஆவலுடன் ஆதரித்தார்களோ, அவ்வளவு ஆவலுடன் இதையும் ஆதரிப்பார்களென்று மனப்பூர்வமாக நம்பி, இந்நூலை வெளியிடுகின்றேன்.

ஸ்ரீ விவேகாநந்தர் தமது பெயருக்கேற்பத்தாமும் விவேகத்தில் ஆநந்த முற்றிருந்தது மன்றியில், பிறருக்கும் விவேகத்திலேயே ஆநந்தம் விளையுமாறு எழுதியும் பேசியும் இடைவிடாது ஊட்டி வந்த இன்பப் பெருக்கை, இச் சம்பாஷணைகளில், எல்லையிலாது, எங்கெங்கும் பரந்து ஓடக் காணலாம். "ஸ்ரீ விவேகாநந்தரை" மாத்திரம் தமிழ் நாட்டினர் தங்கள் புத்தியிலும் ஹிருதயத்திலும் நிலைநாட்டிக் கொள்வார்களானால். தயங்கி விழுந்து கிடக்கும் இந் நிலைமையினின்றும் விடுபட்டு, துக்க நிவிர்த்தியும் ஆநந்தப் பிராப்தியும் எய்தி, க்ஷேமமுறுவார்கள் என்பது திண்ணம். மஹா சக்தி அருள் புரிவாளாக.

ஸ்ரீ பாரதாச்ரமம்,
இராயப்பேட்டை,
சென்னை,
1—11—22.

சுப்பிரமணிய சிவம்.

ஓம்

ஸ்ரீ ராமகிருஷ்ணாயநம:

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

அத்வைத சம்பாஷணைகள்

I

சிஷ்யன்:—ஏகமாயுள்ள பிரஹ்ம வஸ்து ஒன்றே உண்மைப் பொருளானால், உலகிலேயுள்ள இவ் வேற்றுமையெல்லாம் ஏன் உள்ளன? ஸ்வாமி! தயவு செய்து சொல்லுங்கள்!

ஸ்வாமி:—தோற்றல் மாத்திரமாயுள்ள இந்தக் காக்ஷியாகிற நிலைமையிலிருந்து நீ கவனிக்கிறதில்லையா? பிரபஞ்ச திருஷ்டி பக்ஷமாகப் பார்த்தால், மனிதன் யுக்தியினாலும் விவேகத்தினாலும் மெல்ல மெல்ல ஏகத்துவத்துக்கே வந்து சேர முடியும். ஆனால், நீ அந்த ஏகத்துவத்திலே ஸ்திரமாயிருப்பதானால், அந்த நிலைமையிலிருந்துகொண்டு நீ எப்படி இந்த வேற்றுமையைப் பார்க்க முடியும்?

சிஷ்யன்:—உண்மைதான். நான் அந்த ஏகத்துவத்திலே இருந்தால், "ஏன்?" என்ற இந்தக்கேள்வியை நான் எப்படிக் கேட்க முடியும்? நான் இந்தக் கேள்வி கேட்கிறபொழுதே, நான் இந்த வேற்றுமையைப் பார்த்துத்தான் கேள்வி கேட்கிறேன் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுவிடுகிறது.

ஸ்வாமி:—நல்லது. தோற்றல் மாத்திரமாயுள்ள ஜகத்தினுடைய வேற்றுமையின் மூலமாக, ஒற்றுமையின்

மூலத்தை விசாரிப்பது வியதிரேக வாதம் என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது, இல்லாத ஒன்றை உள்ளதாகப் பாவித்துக்கொண்டு, பின்னர் யுக்தியினலே 'அது உள்ளதன்று' என்று நிரூபிப்பதாம். உண்மை யல்லாததை உண்மைபோலப் பாவிக்கும் உபாயத்தினுல் உண்மையை யடையும் முறையை நீ பேசுகிருய்,—அல்லவா?

சிஷ்யன்:—எனது மனத்துக்கு, உள்ளதின் ஸ்திதி, அல்லது பார்க்கப்பட்டதின் ஸ்திதி தானே பிரத்தியட்சமாகத் தோன்றுகிறது; ஆகையினுல், உண்மையாயிருக்கிறது: ஆனல், அதற்கு எதிரிடையாயுள்ள ஸ்திதி உண்மை யல்லாததாகத் தோன்றுகிறது.

ஸ்வாமி:—ஆனல், வேதங்கள் "ஏகமே வாத்விதீயம்", என்று கூறுகின்றன. உண்மையில் உள்ளது ஒன்றே—பிரஹ்ம வஸ்துவே—யானல், உனது வேற்றுமைப்பாடு பொய்யாம். நீ வேதங்களை நம்புகிருய் என்று நான் நினைக்கிறேன்!

சிஷ்யன்:—ஆம்; நான் வேதத்தை மிகமிகச் சிறந்த பிரமாண முடையதாக ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல், நியாயம் பேசுகையில், மனிதன் அதை அப்படியொப்புக் கொள்ளாவிட்டால், வேறு நியாயங்களினலே அவனை ருசுப்படுத்தவேண்டும்.

ஸ்வாமி.—அப்படியும் செய்யலாம். இங்குப் பார்! நீ வேற்றுமை யென்று கூறுவது மறைந்து, நாம் அதைப்

பாராமலே யிருக்கும்படியான ஒரு காலம் உண்டாகிறது. எனது சொந்த ஜீவிதத்திலேயே நான் அந்த நிலைமையை அனுபவத்தில் அடைந்திருக்கிறேன்.

சிஷ்யன்:—தாங்கள் எப்பொழுது அத்தகைய அனுபவமடைந்தீர்கள்?

ஸ்வாமி:—ஒருநாள் தக்ஷிணேச்வரத்திலேயுள்ள ஆலயத்தின் நந்தவனத்திலே ஸ்ரீராமகிருஷ்ணர் என்னை ஹிருதயத்தில் ஸ்பர்சித்தார்; எல்லாவற்றுக்கும் முதலில், வீடுகள்—அறைகள், கதவுகள், ஜன்னல்கள், தாழ்வாரங்கள்—மரங்கள், சூரியன், சந்திரன்—எல்லாம் பறந்துகொண்டிருக்க, துண்டுதுண்டாகச் சிதறிக்கொண்டிருக்க—துகள் துகளாக நொறுங்கிக்கொண்டிருக்க—நான் பார்க்க ஆரம்பித்தேன். கடைசியிலே ஆகாசத்திலே லயிக்கவும் காண ஆரம்பித்தேன். மெல்ல மெல்ல ஆகாசமும் மறைந்தது, அதன் பின்னர், எனது அகங்கார ஞானமும் அதனுடன் கூடவே மறைந்தது. அதன் பின்னர் என்ன நடந்ததென்பது எனக்கு ஞாபகமில்லை. முதலில் நான் பயந்துவிட்டேன். அந்த நிலைமையிலிருந்து திரும்பி வந்து, நான் மறுபடியும் வீடுகளையும், அறைகளையும், ஜன்னல்களையும், தாழ்வாரங்களையும், மற்றப் பொருள்களையும் பார்க்க ஆரம்பித்தேன். இன்னொரு சமயத்திலே அமெரிக்காவில் ஒரு ஏரியின் பக்கத்திலே, நான் அதே மாதிரியான அநுபவம் அடைந்தேன்.

ஸ்வாமிகள் மேலும் கூறியதாவது:—'மூளையின் குழப்பமாயிருக்கலாமோ?' என்று சொல்கிறாய்! ஏதேனும் வியாதியினு லுண்டான ஜன்னியின் பயனாகவோ, அல்லது குடியினால் உண்டான வெறியினாலோ, அல்லது வெவ்வேறு விதமான விநோதமான சுவாசாப்யாசங்களினால் உண்டான பிரமையினாலோ அது ஏற்படாமலிருக்கிறபொழுது, நீ மூளைக் குழப்பமென்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால், ஆரோக்யமும் அறிவும் நிரம்பியுள்ள ஒரு சாதாரண மனித னுக்கு அது உண்டானால், அதை எப்படி மூளைக் குழப்ப மென்று சொல்வது? இன்னும், இந்த அநுபவமானது வேதங்களுடன் பரிபூர்ணமாய் ஒத்திருக்கிறது. இன்னும், பூர்வீக காலத்து, அருளாளர்களான ரிஷிகளுடையவும் ஆசார்யர்களுடையவும் அநுபவ வசனங்களுக்கும் ஒத் திருக்கிறது. வேண்டுமானால், என்னை நீ யொரு பைத்தியக் காரனென்று கருதிக்கொள்ளலாம்.

சிஷ்யன்:—ஆ, இல்லை. நான் அப்படிக் கருதவில்லை. அத்தகைய ஏகத்துவ அநுபூதியைப்பற்றி சாஸ்திரங்களிலே நூற்றுக்கணக்கான திருஷ்டாந்தங்கள் காணப்படுகிற பொழுது, உள்ளங்கை நெல்லிக்கனிபோல அது பிரத்தியட் சானுபவத்தில் அடையப்படுமென்று நீங்கள் சொல்கிற பொழுது, வேதங்களினுடையவும் இதர சாஸ்திரங்களி னுடையவும் வசனங்கட்கு அது பரிபூர்ணமாய் ஒத்து நின்று, தங்களுடைய சொந்த ஜீவதத்தில் அநுபவமாயும்

இருக்கிறபொழுது—அது பொய்யென்று நான் எப்படிக் கூறத்துணிவேன்? ஸ்ரீ சங்கராசார்யரும் அந்த நிலைமையை அடைந்து "ஜகத் எங்கே மறைந்துவிட்டது ?" என்றும், மற்றும் கூறியிருக்கிறார்.

ஸ்வாமி :—இந்த ஏகத்துவ ஞானத்தைத்தான் சாஸ்திரங்கள் பிரஹ்மானுபூதி யென்று கூறுகின்றன வென்று தெரிந்துகொள் ; அதை யறிந்துகொள்வதினால் மனிதன் பயத்தினின்றும் நீங்குகிறான் ; ஜனன மரண விலங்குகள் என்றென்றைக்கும் தறிபட்டு விடுகின்றன. ஒருதரம் அந்தப் பரமாநந்தத்தை யநுபவத்தில் அடைந்துவிட்டால், மனிதன் இவ்வுலகத்தினுடைய சுகதுக்கங்களால் பாதிக்கப்படுகிறதேயில்லை. மனிதன் இழிந்த காமினி—காஞ்சனத்தினால் கட்டப்பட்டவனாகி, பிரஹ்மாநந்தத்தை யநுபவிக்க முடிகிறதில்லை.

சிஷ்யன் :—அப்படியானால், நாம் உண்மையில் பரப்பிரஹ்மத்தினுடைய அம்சமேயானால், அந்த ஆநந்தத்தை யடைவதற்கு நாம் என் முயற்சி செய்கிறதில்லை ? நாம் இந்த, உபயோகமற்ற காமினி—காஞ்சன மாயையினால் மயக்கப் பெற்று, என் மறுபடியும் மரணத்தினுடைய வாய்களிலே போய் விழுகிறோம் ?

ஸ்வாமி :—அந்த ஆநந்தத்தை யடைவதற்கு மனிதனுக்கு இச்சை யில்லை யென்பது போல நீ பேசுகிறாய் ! யோசித்துப் பார்; எவன் எது செய்தாலும், அதைப்பற்றி

அவன் அந்தப் பரமானந்தத்தையடையலாமென்றநம்பிக்கையுடனேயே செய்கிறானென்பதை நீ பார்ப்பாய். அவர்களெல்லோருக்கும் அது தெரியாது; ஆகையினால், அவர்கள் அறிந்துகொள்கிறதில்லை. அவ்வளவுதான்! அந்தப் பரமானந்தமானது எல்லோரிடத்தும் பரிபூர்ணமாயுள்ளது, பிரஹ்மா முதல் பிபீலிகாதி பர்யந்தம் உள்ளது. நீயும் அந்தப் பாகுபாடற்ற பிரஹ்ம வஸ்துவேயாம். நீ அது தான் என்று உண்மையாயும் நிச்சயமாயும் நினைத்துக்கொள்வாயானால், அந்த நிமிஷத்திலேயே நீ அநுபவம் அடைந்துவிடலாம். பிரத்தியட்ச தர்சனம் இன்மையே காரணமாம். நீ வேலைக்கமர்ந்து நீ அவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்வதும்கூட, அப்படி வேலை செய்வதினுடைய உத்தேசம் கடைசியாக, அந்த பரப்பிரஹ்மானந்தத்தை அடையவேண்டியதே என்பதை நிரூபிக்கின்றது. மறுபடியும் மறுபடியும், குழப்பம் மிகுந்த மாயையாகிற கலக்கத்திலே அகப்பட்டு, துக்கங்களினாலும் துன்பங்களினாலும் கடினமாக அடிக்கப்பட்டு, திருஷ்டி தனது சொந்த, உண்மையான லக்ஷணத்தை நோக்கி, அந்தராத்மாவை நோக்கித்திரும்பும். ஹிருதயத்திலே ஆநந்தம் அடையவேண்டுமென்ற இந்த இச்சை யிருப்பதினாலேயே, மனிதன் ஒன்றன்பின் ஒன்றாகப் பலமான அடிகள் அடைந்து தனது திருஷ்டியை உள்முகமாக—தனது அந்தராத்மாவை நோக்கித் திரும்புகிறான். (ஒருவர் தவிர்எல்லோரும் அப்படிச்செய்யும்படியான ஒரு காலம் ஒவ்வொருவருக்கும் வரும் என்பது நிச்சயம்—ஒருவருக்கு

அது இந்த ஜீவிதத்திலாயிருக்கலாம்; இன்னொருவருக்கு ஆயிரக்கணக்கான பிறப்புக்களுக் கப்புறமாயிருக்கலாம்.

சிஷ்யன்:—அதெல்லாம் குருவினுடைய ஆசிர்வாதத்தினுலும், ஈஸ்வர கிருபையிலும் சார்ந்திருக்கின்றன.

ஸ்வாமி:—ஈஸ்வர கிருபையாகிற காற்று என்றென்றும் அடித்துக்கொண்டே யிருக்கிறது. நீ உனது பாய்மரத்தை விரித்துவிடுவாய். நீ எதையாவது செய்தால், உனது முழு ஹிருதயத்தையும் அதன்மீது ஏகாக்ரப்படுத்தி அப்படிச் செய்வாய். "நான் அந்தப் பரம சச்சிதானந்தப் பொருளின் அம்சமேயாம்,—எனக்கு என்ன கவலேயும் பயமும் இருக்கிறது? இந்தச் சரீரமும் மனமும் புத்தியும் எல்லாம் அநித்தியமானவை; இவற்றுக்கு அதீதமான அது நானே" என்று இரவும் பகலும் சிந்திப்பாய்.

சிஷ்யன்:—இவை போன்ற நினைப்புக்கள் அடிக்கடி கொஞ்சநேரத்துக்கே யுண்டாகின்றன; ஆனுல், சீக்கிரம் மறைந்துவிடுகின்றன; நான் எல்லாவிதமான அற்பத்தனத்தையும் முட்டாள்தனத்தையும் நினைக்கிறேன்.

ஸ்வாமி:—ஆரம்பகாலத்திலே அப்படி நேரிடுகின்றது; ஆனுல், மெல்லமெல்ல அது ஜெயித்துவிடப்படுகிறது. ஆனுல், ஆரம்பத்திலிருந்தே, மனத்திலே தீவிரதரமான இச்சை அவசியம். "நான் என்றும் பரிசுத்தமாயுள்ளவன், சர்வஞ்ஞன்; சர்வ ஸ்வதந்திரன்; நான் தீமையான எதையும் எப்படிச் செய்யக்கூடும்? காமினி—காஞ்சனமாகிற அற்பமாயை

களினாலே சாதாரண மனிதர்கள் போன்று என்னையும் எப்பொழுதேனும் ஏமாற்ற முடியுமா?" என்று எப்பொழுதும் சிந்தித்துக்கொள். அத்தகைய நினைப்புக்களினால் மனத்தைப் பலப்படுத்துவாய். இப்படிச் செய்வதனால் நிச்சயமாக உண்மையான நன்மையே உண்டாகும்.

சிஷ்யன்:—எப்பொழுதேனும் ஒரு சமயத்தில் மனோ பலம் உண்டாகிறது! ஆனால், அப்பொழுது, மறுபடியும் நான் டிப்டி மாஜிஸ்டிரேட் பரீட்சைக்குப் போவேனென்றும், ஐச்வர்யமும் பெயரும் கீர்த்தியும் உண்டாகுமென்றும், நான் நன்றாயும் சந்தோஷமாயும் வாழ்வேனென்றும் நினைக்கிறேன்.

ஸ்வாமி:—அத்தகைய நினைப்புக்கள் மனத்திலே உண்டாகிறபொழுதெல்லாம்—'இது நித்தியமானது, இது அநித்தியமானது' என்று உன்னுள்ளேயே பகுத்தறிந்து பார். நீ வேதாந்தம் வாசித்ததில்லையா? நீ உறங்குகிறபொழுதும் கூட, உனது படுக்கையின் தலைமாட்டிலே விவேகமாகிற வாளை வைத்துக்கொள்; அப்படியானால் ஆசையானது உன்னை ஸ்வப்பனத்திலும்கூட அணுகாது. அத்தகைய பலத்தை யநுஷ்டிப்பதனால், தியாகமானது மெல்ல மெல்ல உண்டாகும்; அப்பொழுது மோட்ச வாசல்கள் உனக்குத் திறந்து கிடக்கின்றனவென்பதை நீ பார்ப்பாய்.

சிஷ்யன்:—ஸ்வாமி! அப்படியானால், பக்தியைப்பற்றிக் கூறும் நூல்கள், "அளவுக்குமிஞ்சிய தியாகமானது இரக்கத்துக்

குக் காரணமாயுள்ள உணர்ச்சிகளைக் கொன்றுவிடுகின்றது என்று ஏன் கூறுகின்றன?

ஸ்வாமி:—அது போன்ற விஷயங்களைப் போதிக்கின்ற கிரந்தங்களைத் தூர எறிந்துவிடு என்று நான் கூறுகின்றேன். தியாகமில்லாமல், ஐம்புலன் விஷயங்களிடத்துச் செல்லும் ஆசையைத் தகிக்காமல், காமினி—காஞ்சனத்திலிருந்து, மலத்தினின்றும் ஒதுங்குவது போல, ஒதுங்கிச் செல்லாமல் "பிரஹ்ம கற்பங்கள் நூறு" ஆனாலும் கூட எவரும் மோக்ஷம் அடையவே முடியாது. ஈச்வர நாமங்களை ஜபித்தல், தியானம், உபாசனை, ஓமாக்கினியில் ஆகுதி யளித்தல், தவம்—இவையெல்லாம் தியாகம் உண்டு பண்ணுவதற்கேயாம். எவனுக்குத் தியாகம் உண்டாகவில்லையோ, அவனுடைய முயற்சிகள் படகு நங்கூரம் போட்டிருக்கிறபொழுது துடுப்புப் போடுகின்ற மனிதனுடைய முயற்சிகள் போன்றதே யென்று தெரிந்துகொள்! "சந்ததியினாலன்று, சம்பத்தினாலன்று; ஆனால், தியாகம் ஒன்றினாலேயே சிலர் அமரத்தன்மையடைந்தார்கள்!"

சிஷ்யன்:—காமினி—காஞ்சனத்தைத் தியஜித்தலினாலேயே எல்லாவற்றையும் அடைந்துவிடலாமா?

ஸ்வாமி:—அவ்விரண்டையும் தியஜித்த பின்னர்கூட, பாதையிலே வேறு இடையூறுகள் உண்டு. அப்பொழுது திருஷ்டாந்தத்துக்குப் பெயரும் கீர்த்தியும் உண்டாகின்றன. மிகவும் சிலரே, அசாதாரணமான பல முடையவர்களா

யிருந்தாலொழிய, அப்பொழுது சமபுத்தியுட னிருக்க முடியும். ஜனங்கள் அவர்கள்மீது கௌரவங்களைப் பொழிகிறார்கள்; பலவித போகங்கள் மெல்ல மெல்ல அவர்களுக்கு உண்டாகின்றன. இதனாலேதான், தியாகிகளில் நான்கில் மூன்று பங்கினர் மேலே அபிவிருத்தியடைய முடியாமல் தடைபெற்று விடுகிறார்கள்! இந்த மடத்தையும் இதர விஷயங்களையும் ஸ்திரமாக ஏற்படுத்தும்பொருட்டு, நான் மறுபடியும் வரவேண்டியிராது என்பதை எவர் அறிவார்?

சிஷ்யன்:—தாங்கள் அது போன்ற விஷயங்களைச் சொன்னால், எங்களுக்கு அதோகதிதான்!

ஸ்வாமி:—என்ன பயம்? "பயமற்றிரு! பயமற்றிரு! பயமற்றிரு!" நாக மஹாஷயரை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா? அவர் எப்படிக் கிருகஸ்த வாழ்க்கையிலிருந்தும்கூட, சந்நியாசியைப் பார்க்கிலும் சிரேஷ்டரா யிருக்கின்றார்! இப்படி யிருப்பது மிகவும் அசாதாரணமானது. நான் அவர் போன்று ஒருவரைப் பார்த்ததே யில்லை. எவராவது கிருகஸ்தராயிருக்க விரும்பினால், அவர் நாக மஹாஷயர் போன் றிருக்கட்டும். அவர், கீழ் வங்காளத்தின் ஞானாகாயத்திலே ஒளியுள்ள ஒரு நக்ஷத்திரம் போன்று பிரகாசிக்கிறார். தேசத்தின் அந்தப் பாகத்திலுள்ள ஜனங்களை அவரை அடிக்கடி போய்ப் பார்க்கும்படி சொல்வாய். அவரை அடிக்கடி பார்ப்பதனால், அவர்கள் மிகுந்த நன்மையை அடைவார்கள்.

சிஷ்யன்:—பூமியிலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திவ்ய நாடக லீலையிலே நாக மஹாஷயர் தாழ்மையே உருவாக வந்தவர் போலத் தோன்றுகிறது.

ஸ்வாமி:—அது உண்மைதான்; கொஞ்சம் கூடச்சந்தேக மில்லை. நான் அவரை ஒருதரம் போய்ப் பார்க்க விரும்புகின்றேன். நீ என்னுடன் கூட வரப் பிரியப்படுகிறாயா? மழைக்காலத்திலே வயல்களெல்லாம் தண்ணீர் நிரம்பப் பெற்றிருப்பதைக் காண ஆசைப்படு கிறேன். நீ அவருக்குக் கடிதம் எழுதுகிறாயா?

சிஷ்யன்:—நிச்சயமாக நான் எழுதுவேன். அவர் தங் களைப்பற்றிக் கேள்விப்பட்டால், எப்பொழுதும் ஆநந்தத் தினால் பைத்தியம் பிடித்துவிடுகிறார்; கீழ் வங்காளமானது தங்களுடைய பாத தூளியினால் பரிசுத்தமாகி ஒரு யாத் திரா க்ஷேத்ரமாய்விடுமென்று கூறுகிறார்.

ஸ்வாமி:—ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்ரீ நாகமஹாஷயரை, "கொழுந்து விட்டு எரியும் நெருப்பு" என்று கூறுவது வழக்கமென்பது உனக்குத் தெரியுமா?

சிஷ்யன்:—ஆம், நான் அதைக் கேள்விப்பட்டிருக் கிறேன்.

ஒருநாள் ஸ்வாமிகள் இருந்த இடத்திலே அநேகர் வந்திருந்தனர். ஸ்ரீ நாக மஹாஷயர், ஸ்வாமி துர்யாநந்தர், ஸ்வாமி யோகாநந்தர், ஸ்வாமி பிரேமாநந்தர் முதலியவர்கள் வந்திருந்தார்கள். ஸ்வாமிகள் அதிரம்யமாகப் பாடுவாராதலினால், அவர் பாடுவதைக் கேட்கவிரும்பி, ஸ்ரீநாக மஹாஷயர் அருகிலிருந்த சிலரிடத்தில் ஸ்வாமிகளைப் பாடச் சொல்லும்படி மெல்லச் சொன்னார். ஸ்வாமிகளும் அருகிலிருந்ததினால், அவர்களுடைய கருத்தை யறிந்துகொண்டு, விளையாட்டாக "மஹாஷயரே! நீங்கள் உங்களுக்குள்ளே என்னமெதுவாகப் பேசிக்கொள்கிறீர்கள்?" என்று கேட்டார். மஹாஷயர் வேண்டிக்கொண்டதின் மேல், ஸ்வாமிகள் தமது அதிரம்யமான குரலில் பாட ஆரம்பித்தார். அது வீணை வாசிப்பதுபோ லிருந்தது. பாடி முடிந்தவுடன் இவர் மஹாஷயரைப் பார்த்து "நல்லது, இப்பொழுது உங்களுக்குத் திருப்தியாயிற்றா? ஆனால், பாட்டு போதும். இல்லையேல், நான் அதிலே அகப்பட்டு, அதன் வெறியினால் மெய்மறந்துவிடுவேன். இன்னும், எனது குரல் மேனாடுகளிலே அடிக்கடி பிரசங்கம் செய்ததினால் கெட்டுப்போயிருக்கிறது; எனது குரல் மிகவும் அதிகமாக ஆடுகிறது" என்று கூறினார்.

பின்னர் ஸ்வாமிகள் தமது பிரஹ்மச்சாரி சிஷ்யர்களுள் ஒருவரை "பக்தி"யைப்பற்றிப் பிரசங்கம் செய்யச்

சொன்னார். "பக்தி பெரிதா? ஞானம் பெரிதா?" என்று வாதம் ஆரம்பித்தது. வாதமானது உக்ரமாகி, அளவுக்கு மிஞ்சிய சத்தச் சச்சரவு ஏற்பட்டுவிடவே, ஸ்வாமிகள்:— "நியாயம் பேசுகையில் நீங்கள் ஏன் ஆத்திரம் மிகுந்தவர்களாய், எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறீர்கள்? கேளுங்கள்! 'பரிசுத்த ஞானமும், பரிசுத்த பக்தியும் ஒன்றே' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம். பக்திக் கோட்பாட்டின்படி ஈச்வரன் அன்பே யுருவா யிருக்கிறார். அவர் அன்பே யுருவாயிருந்தலினால், நான் அவரிடத்து அன்பு செலுத்துகிறேன் என்று கூடச் சொல்ல முடியாது. அவருக்குப் புறம்பே அன்பு கிடையாது. ஹிருதயத்திலே யுள்ள நீ அவரிடத்துச் செலுத்துகின்ற அன்புகூட அவரேதான். அதே மாதிரி, மனிதன் ஆகருஷிக்கப்படுகின்ற ஆகருஷணங்களும் பற்றுதல்களும்கூட அவரேதான். திருடன் திருடுகிறான்; வேசை தனது சரீரத்தை விபசாரத்துக்காக விற்கிறாள்; தாய் தனது குழந்தையினிடத்து அன்பு செலுத்துகிறாள்; இவை யொவ்வொன்றிலும் அவரே யிருக்கிறார். ஒரு அண்டம் இன்னொரு அண்டத்தை ஆகருஷிக்கிறது—அங்கும் அவரே இருக்கிறார். எங்கும் அவரே யிருக்கிறார். ஞானக்கோட்பாட்டின்படிகூட அவர் எங்கும் மனிதனால் அநுபவத்தில் அடையப்படுகிறார். இங்கும் ஞானமும் பக்தியும் ஒற்றுமைப்படுகின்றது. மனிதன் திவ்ய பாவத்தின் மிகமிக உத்கிருஷ்டமான ஆநந்தத்திலே, அல்லது சமாதியவஸ்தையிலே ஆழ்ந்துவிடுவானானால், அப்பொழுது

துவைதசிந்தனை நின்றுவிடுகிறது. பக்தனுக்கும் அவனுடைய ஈச்வரனுக்கும் உள்ள வித்யாசம் மறைந்துவிடுகிறது. பக்தியைப்பற்றிய சாஸ்திரங்களிலே ஐந்து வெவ்வேறு மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன; இவற்றுள் எதனாலும் மனிதன் ஈச்வரனை யடைய முடியும்; ஆனால், அவற்றுடன் இன்னொன்று நன்றாகச் சேர்க்கப்படலாம்; அதாவது, அத்வைதத்தை, அல்லது ஈச்வரனுடன் ஏகத்துவத்தைத் தியானம் செய்யும் மார்க்கம். இவ்விதமாகப் பக்தர்கள் அத்வைதிகளைப் பக்தர்களென்றும், ஆனால் பேதரகித பக்தர்களென்றும் அழைக்க முடியும். மாயையாம் பிரதேசத்தினுள் மனிதன் உள்ளவரையில், துவைத பாவனை யிருக்கத்தான் செய்யும். தேச, கால, நிமித்தம் அல்லது நாம—ரூபம், இதுதான் மாயை யெனப்படுகிறது. மனிதன் இந்த மாயையைக் கடந்து செல்வானானால், அப்பொழுதுதான் ஏகத்துவம் அடையப்படுகிறது; அப்பொழுது மனிதன் துவைதியுமல்லன், அத்வைதியுமல்லன்—அவனுக்கு எல்லோரும் ஒன்றே. பக்தனுக்கும் ஞானிக்கும் நீ பார்க்கின்ற இந்த வித்தியாச மெல்லாம் ஆரம்ப காலத்திலேயே உள்ளது. ஒருவன் ஈஸ்வரனை வெளியே பார்க்கிறான்; மற்றவன் அவரை உள்ளே பார்க்கிறான். ஆனால், இன்னொரு விஷயம் உள்ளது. “பரபக்தி யென்று இன்னொருவித பக்தி யுள்ளது” என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம்; அதாவது, அத்வைத ஞானத்திலே ஸ்திரமாக நிலைத்த பின்னரும், முக்தியடைந்த பின்னரும்

அவரிடத்து பக்தி செலுத்துவது. இது ஆச்சர்யமாகத் தோன்றலாம். "முன்னமேயே முத்தி யடைந்துவிட்ட ஒருவன் தன்னிடத்தில் பக்தித் தன்மையை வைத்துக்கொள்வதில் ஏன் இச்சைப்பட வேண்டும்?" என்று இங்குக் கேள்வி கேட்கப்படலாம். இதற்கு மறுமொழியாவது,—முக்தன், எல்லா நியதிகளுக்கும் அதீதமானவன்; அவனுடைய விஷயத்திலே எந்த நியதியும் செல்கிறதில்லை; ஆகையால், அவனைப்பற்றிக் கேள்வியே கேட்கப்பட முடியாது. முக்தர்களாயும்கூட, சிலர், தங்களுடைய சொந்த ஸ்வதந்திர சித்தத்தினாலே, அதனுடைய இனிமையை ருசிப்பதற்காக, பக்தியை வைத்துக்கொள்கிறார்கள்.

கேள்வி:—ஈச்வரன், தாய் தனது குழந்தையினிடத்துச் செலுத்துகிற அன்பி விருக்கலாம்; ஆனால், ஸ்வாமி! 'ஈச்வரன் திருடர்களிடத்தும் வியபசாரிகளிடத்தும்கூட, அவர்களுக்குப் பாபத்தினிடத்தே இயற்கையிலுள்ள பற்றுதல் வடிவமாக இருக்கிறார்' என்ற இந்தஎண்ணமானது உண்மையில் குழப்பத்தைக் கொடுக்கக்கூடியதாகவே யிருக்கிறது. அப்படியானால், ஈச்வரன் இவ் வுலகிலுள்ள பாபத்துக்குப் போலவே, புண்ணியத்துக் கெல்லாம் உத்தரவாத முள்ளவர் போல ஏற்படுகிறது.

ஸ்வாமி:—அந்த ஞாயமானது அன்பு அல்லதுஆகருஷண இயற்கையைப்பற்றிய தெல்லாம் ஈச்வரனே யென்று மனிதன் பார்க்கிறபொழுது மிகமிக உத்கிருஷ்டமான

அநுபூதி நிலைமையிலே உண்டாகிறது. ஆனால், மனிதன் தனது அநுபவ வாழ்க்கையிலே அந்த எண்ணத்தைக் கண்டு அடைவதற்கு அந்த நிலைமையைப் பெறவேண்டும்.

கேள்வி:—ஆயினும், ஈச்வரனும் பாபத்தி லிருக்கிறா ரென்பதை மனிதன் ஒப்புக்கொள்ளவேண்டி யிருக்கிறது.

ஸ்வாமி:—நன்மை யென்றும், தீமை யென்றும் வெவ் வேறு விஷயங்கள் உலகிலில்லை என்பதை நீ பார்க்கிறாய். அவை வெறும் உடன்பாட்டுப் பதங்களே. ஒரே வஸ்து வை நாம் தீயதென்கிறோம்; இன்னொரு சமயத்தில் நாம் அதை நல்லதென்கிறோம்; எல்லாம் நாம் அதை உபயோகிக் கின்ற வழியைப் பொறுத்திருக்கிறது. திருஷ்டாந்தத் துக்கு இந்த விளக்கு வெளிச்சத்தை எடுத்துக்கொள்வோம்; அது எரிவதனால், நாம் கண்ணால் பார்த்து, பிரயோசன கரமான பல வேலைகளைச் செய்ய வல்லவர்களா யிருக்கிறோம். இன்னும், நீ உன்னுடைய விரல்களை அதன்மீது வைத்தால், அவை எரிக்கப்பட்டுவிடும்; அது அதே வெளிச்சத்தை உபயோகிக்கின்ற இன்னொரு விதமாகும். ஆகையால், ஒரு வஸ்து, நாம் அதை உபயோகிக்கிற விதத்துக்குத் தகுந்த படி நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ ஆகிறது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அப்படித்தான் புண்யமும் பாபமும். விரிவாகப் பேசினால், நமது மனத்தி னுடையவும் சரீரத்தினுடைய சக்திகளில் எதையேனும் சரியாக உபயோகப்படுத்தினால் அது புண்ணியமென்றும்,

அதைத்தப்பிதமாக உபயோகப்படுத்தினாலும், அல்லது வீண்செலவு பண்ணினாலும் அது பாபமென்றும் சொல்லப் படுகிறது.

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில், ஒரு தேவ சரீரம் இன்னொன்றை ஆகருஷிக்கின்ற இடத்தில் கூட ஈச்வரன் இருக்கிறார் என்ற கொள்கை உண்மையாயுமிருக்க லாம்; ஆனால், அந்த எண்ணத்தில் அடங்கியுள்ள அழகிய காவ்யாலங்காரத்தை மறுக்க முடியாது" என்று ஒருவர் கூறினார்.

ஸ்வாமி:—எனது அரிய நண்பரே! இல்லை. அது காவ்யாலங்காரமன்று. மனிதன் ஞானம் அடைகிற பொழுது, அவன் தானாகவே உண்மையைக் கண்டுகொள்ள முடியும்.

கேள்வி:—தனிப்பட்டவர்களுடைய உபயோகம் சம் பந்தப்பட்டுள்ள இந்த வித்யாசம்கூட ஏன் இருக்கவேண் டும்? மனிதன் தன்னுடைய சக்திகளில் எதையேனும் தீய, அல்லது தகுந்ததல்லாத வழியில் உபயோகித்துக்கொள் ளும்படியான இந்த வாசனைகூட ஏன் இருந்திருக்கவேண் டும்?

ஸ்வாமி:—அந்த வாசனையானது மனிதனுடைய சொந்த, முந்திய செய்கைகளின் பயனாகவே உண்டாகிறது; மனிதனிடமுள்ள ஒவ்வொன்றும் அவன் தானாகவே

செய்துகொண்டதாம். ஆகையினால், ஒவ்வொரு மனிதனும் தனது வாசனைகளை யடக்கி அவற்றைச் சரியான வழியில் நடத்துவதற்கு அவனாலேயே முடியும் என்று ஏற்படுகிறது.

கேள்வி:—ஒவ்வொன்றும் நமது காமத்தினுடைய பலனேயாயிருந்தாலும்கூட, அதற்கும் ஆதி யிருந்திருக்க வேண்டும்; நமது வாசனைகள் ஆதியில் ஏன் நல்லவையாக வோ, அல்லது கெட்டவையாகவோ இருந்திருக்க வேண்டும்?

ஸ்வாமி:—ஆதி உண்டு என்று உனக்கு எப்படித் தெரியும்? சிருஷ்டி ஆதியற்றது—இதுதான் வேதங்களின் கோட்பாடு. ஈச்வரன் உள்ளவரையில், சிருஷ்டியும் உண்டு.

கேள்வி:—நல்லது, ஸ்வாமி! ஏன் இந்த மாயை இங்கு இருக்கிறது? அது எங்கிருந்து வந்திருக்கிறது?

ஸ்வாமி:—ஈச்வரன் சம்பந்தமாக "ஏன்" என்று கேட்டது தப்பிதம்; தேவைகள் அல்லது குறைகள் சம்பந்தப்பட்டவர் விஷயத்தில்தான் நாம் அப்படிச் செய்ய முடியும். குறைகளற்றவரும் ஒரே முழுமையா யிருக்கிறவருமானவர் விஷயத்திலே "ஏன்" என்பது எப்படி யிருக்க முடியும்? 'மாயை எங்கிருந்து வந்தது?' என்றது போன்ற கேள்வி கேட்கப்பட முடியாது. கால தேச நிமித்தமே மாயை யெனப்படுவது. நீயும் நானும் ஒவ்வொருவரும் இந்தமாயைக்குள்ளேயே யிருக்கிறோம்; மாயைக்குஅப்பால்

யாது உள்ளது என்பதைப்பற்றி நீ கேட்கிறாய். மாயைக்குள்ளே யிருந்துகொண்டு நீ எப்படி அப்படிச் செய்ய முடியும்?

III

சிஷ்யன்:—ஸ்வாமி! ஞானத்தையும் பக்தியையும் எப்படிச் சமரசப்படுத்த முடியும்? தயவுசெய்து சொல்லுங்கள். பக்தி மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் *சங்கரனுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்திலே தங்களுடைய செவிகளை யடைத்துக்கொள்வதையும், ஞான மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள், பக்தர் நாமத்தைக் கேட்ட மாத்திரத்திலே, ஈச்வர வெள்ளப் பெருக்கெடுத்தோட அழுவதை அல்லது ஆநந்த மிகுதியினால் ஆடிப் பாடுவதைக் கண்டு அவர்களை 'வெறி பிடித்தவர்கள்' என்று கூறுகிறார்கள்.

ஸ்வாமி:—விஷயம் என்னவென்றால், இந்தப் போராட்டமெல்லாம் ஆரம்பப் படிகளிலேதான். சிவனுடைய பைசாசங்களையும் இராமனுடைய குரங்குகளையும்பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர் கூறும் கதையை நீ கேட்டதில்லையா?

சிஷ்யன்:—ஆம், ஸ்வாமி! நான் கேட்டிருக்கிறேன்.

ஸ்வாமி:—ஆனால், பரம பக்திக்கும் பரம ஞானத்துக்கும் வித்யாசமில்லை. பரம பக்தியாவது, ஈச்வரனைப் பிரேமை வடிவமாக அறிந்து அடைவதாம். ஈச்வரனுடைய

* சங்கர பகவத் பாதர்

அன்பு வடிவம் எங்கும் எல்லாவற்றிலும் வெளிப்படுவதை நீ பார்ப்பாயானால், நீ பிறரை எப்படிப் பகைக்கவோ அல்லது துன்புறுத்தவோ முடியும்? ஹிருதயத்திலே அணுவளவேனும் இச்சை, அல்லது ஸ்ரீராமகிருஷ்ணர் அடிக்கடி கூறும் காம—காஞ்சனம் உள்ள வரையில், அந்த அன்பு அநுபூதி யொருகாலும் உண்டாகாது. அன்பின் பரிபூரண அநுபூதியிலே, மனிதனுடைய சொந்த சரீரப் பிரக்ஞைகூட இருக்கிறதில்லை. இன்னும், பரம ஞானமாவது எங்கும் ஏகத்துவத்தை யறிந்து அடைவதாம். தனது ஆத்மாவை ஒவ்வொன்றிலும் உள்ள ஆத்மாவாகப் பார்ப்பதாம். அதுவும்கூட, அணுவளவேனும் அகங்காரப் பிரக்ஞை யுள்ளவரையில் உண்டாகாது.

சிஷ்யன்:—அப்படியானால், தாங்கள் பக்தியென்று கூறுவதும் பரமஞானமும் ஒன்றுதானோ?

ஸ்வாமி:—ஆம். பரிபூர்ண ஞானியான மனிதனுக்குத் தவிர மற்றெவருக்கும் பக்தியநுபவம் உண்டாகிறதில்லை. 'பிரஹ்மவஸ்து சச்சிதாநந்தம்' என்று வேதாந்தம் கூறுகிறதில்லையா?

சிஷ்யன்:—ஆம், ஸ்வாமி!

ஸ்வாமி:—சச்சிதாநந்தம் என்ற பதத்துக்குப்பொருள் யாதெனில், சத் என்றால் அறிவு; ஆநந்தம் என்றால் திரிகாலத்திலும் உள்ளது; சித் என்றால் அன்புடன்

ஒன்றாகிய ஆநந்தம். பிரஹ்ம வஸ்துவினுடைய சத் தன்மையைப்பற்றிப் பக்தனுக்கும் ஞானிக்கும் தர்க்கமே யில்லை. ஞானிகள் அந்தப் பிரஹ்ம வஸ்துவினுடைய சித் தன்மையை அதிகம் வற்புறுத்துகிறார்கள்; பக்தர்களோ பிரஹ்ம வஸ்துவினுடைய ஆநந்தம் தன்மையைத் தங்கள் முன்னே வைத்துக்கொள்ளுகிறார்கள்; அவ்வளவுதான். ஆனால், சித் அம்சம் அநுபூதியில் வந்துவிட்டவுடனே, ஆநந்தம் அம்சமும் அநுபூதியில் அடையப்பட்டுவிடும். ஏனென்றால், சித் என்பது எதுவோ அதுவே ஆநந்தமாம்.

சிஷ்யன்:— அப்படியானால், இந்தியாவிலே இவ்வளவு வகுப்புப் பேதங்கள் இருப்பது ஏன்? பக்தியைப்பற்றியும் ஞானத்தைப்பற்றியும் உள்ள சாஸ்திரங்களிலே அவ்வளவு வாதம் இருப்பது ஏன்?

ஸ்வாமி:—விஷயம் என்னவென்றால், இந்தப் போராட்டமும் விவாதமும் எல்லாம் ஆரம்பக் கொள்கைகளைப்பற்றியேயாம், அதாவது, மனிதன் உண்மையான ஞானத்தை, அல்லது உண்மையான பத்தியை அடைவதற்கு எடுத்துக் கொள்ளும் கொள்கைகளாம். ஆனால், எது சிரேஷ்டமானதென்று நீ நினைக்கிறாய்,—பலனா? உபாயமா? உபாயமானது பலனைவிட ஒருபொழுதும் சிரேஷ்டமானதாயிருக்க முடியாது என்பது நிச்சயம். ஏனென்றால், தனிப்பட்ட மனிதர்களின் குணத்துக்கும் மனப் பான்மைக்கும் ஏற்ற

வாறு உபாயங்கள் வேறுபடலா மாகையினாலே, ஒரே பலனை யடைவதற்கு உள்ள உபாயங்கள் எண்ணற்றவையா யிருக்கவேண்டும். மணிகளை யெண்ணுதல், தியானம், உபாசனை, ஓம குண்டத்திலே எக்ஞம் செய்தல் ஆகிய இவை யெல்லாமும் இவை போன்ற இதர விஷயங்களும் மதத்தினுடைய அங்கங்களேயாம்; அவை யெல்லாம் உபாயங்களே யாம்; பரபக்தியை அல்லது பரமோத்கிருஷ்டமான பிரஹ்மானுபூதியையடைவதே மிக முக்கியமான பலனும். நீ சிறிது ஆழ்ந்து பார்ப்பாயானால், அவர்கள் எதைப்பற்றிச் சண்டை போடுகிறார்கள் என்பதை நீ தெரிந்துகொள்வாய். ஒருவன் கூறுகிறான்: "நீ கிழக்கு நோக்கி ஈச்வரனைப் பிரார்த்தனை பண்ணினால், நீ அவரை யடைவாய்." "அப்படியன்று; நீ மேற்கு நோக்கி யுட்காரவேண்டும்; அப்பொழுதுதான் நீ அவரைப் பார்ப்பாய்" என்று இன்னொருவன் கூறுகின்றான். வெகு காலத்துக்கு முன்னே எவரோ ஒருவர் கிழக்கு நோக்கி யுட்கார்ந்துகொண்டு தியானம் செய்து ஒரு வேளை ஈச்வரனை யடைந்திருக்கலாம்; உடனே அவருடைய சிஷ்யர்கள், 'இம்மாதிரி யுட்கார்ந்தாலொழிய எவரும் ஈச்வரனைப் பார்க்க முடியாது' என்று இந்தத் தன்மையைப் பிரசாரகம் பண்ணத் தொடங்கினார்கள். இன்னொரு கட்சியார் முன்னே வந்து, 'அது எப்படி ? இன்னார் மேற்கு முகமாக உட்கார்ந்துகொண்டு, ஈச்வரனை யடைந்தார்; நாங்கள் இதைப் பிரத்தியட்சத்தில் பார்த்திருக்கிறோம்,' என்றும் சொல்

கிறார்கள். இவ்விதமாகத்தான் இந்த வகுப்புக்களெல்லாம் ஆரம்பித்திருக்கின்றன. எவரேனும் ஒருவர் ஈச்வரனுடைய நாமத்தை ஹரியென்று ஜபித்துப் பரபக்தியை அடைந்திருக்கலாம்; உடனே அது பின் வரும் சாஸ்திரமாக இயற்றப்பட்டுவிட்டது:—

"ஹரி நாமமே சிறந்தது; ஹரியே பெரியவர்; கலியுகத்திலே வேறு மார்க்க மில்லை."

இன்னும் எவரேனும் ஒருவர் அல்லாவென்ற நாமத்தினால் பரிபூர்ணத்துவ மடைந்திருக்கலாமென்று வைத்துக்கொள்; உடனே அவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வகுப்பு வியாபிக்க ஆரம்பித்தது; இப்படியேதான் எல்லாம். ஆனால், இந்த உபாசனைகளும் இதர மதானுஷ்டானங்களுமெல்லாம் எந்தப் பலனை நோக்கி இட்டுச் செல்கின்றன வென்று நாம் பார்க்கவேண்டும். பலன் சிரத்தையேயாம். சிரத்தையென்ற சம்ஸ்கிருத பதத்தைக் குறிப்பதற்கு நமது வங்காளி பாஷையிலே தகுந்த பதமில்லை. 'சிரத்தை நாசிகேதனுடைய ஹிருதயத்தினுள்ளே நுழைந்தது' என்று உபநிஷத்து கூறுகின்றது. ஏகாக்ரதை யென்ற வார்த்தையினால்கூட நாம் சிரத்தை யென்ற பதத்தின் முழுப்பொருளையும் விளக்க முடியாது. நீ எந்த உண்மையையும் உறுதியான பக்தியுடனும் ஏகாக்ரதையுடனும் தியானம் செய்வாயானால், மனமானது மேலும் மேலும் ஏகத்துவத்தை நோக்கி, அதாவது, சச்சிதாநந்தாநுபூதிமுகமாக உன்னை இட்டுச் செல்கின்ற

தென்பதை நீ காண்பாய். பக்தியை அல்லது ஞானத்தைப் பற்றிய சாஸ்திரங்கள் மனிதர் வாழ்நாளிலே அத்தகைய நிஷ்டையில் ஏதேனும் ஒன்றையெடுத்துக்கொண்டு அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்று விசேஷமாகப் போதிக்கின்றன. காலம் ஆகஆக, இப்பெரும் உண்மைகள் தலைகீழாக்கப்பட்டு, மெல்லமெல்ல தேசாசாரங்களாக உருமாறிவிடுகின்றன. இந்தியாவில் மாத்திரம் அப்படி நடக்கவில்லை. ஆனால், உலகிலேயுள்ள ஒவ்வொருஜனசமூகத்திலும், ஒவ்வொரு சமுதாயத்திலும அப்படி நடந்திருக்கிறது. சாதாரண ஜனங்கள் விவேகத்தில் குறைந்தவர்களாயுள்ளதினால் இவற்றை விவாதத்துக்குரிய எலும்பாக ஆக்கிக்கொண்டு, தங்களுக்குள்ளேயே போராடுகிறார்கள். அவர்கள் பலனை மறந்துவிட்டார்கள்; ஆகையால்தான் வகுப்புப்பேதங்களும், சச்சரவுகளும், சண்டைகளும் நடைபெறுகின்றன.

சிஷ்யன்:—ஸ்வாமி! அப்படியாயின், ரக்ஷைப்படுவதற்கு உபாயம்தான் என்ன?

ஸ்வாமி:—பூர்வீககாலத்தில்போல, அந்த உண்மையான சிரத்தை மறுபடியும் கொண்டுவரப்படவேண்டும். களைகள் வேருடன் பிடுங்கி யெறியப்படவேண்டும். ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு மார்க்கத்திலும் காலத்தையும் தேசத்தையும் கடந்துள்ள உண்மைகள் உள்ளனவென்பதில் சந்தேகமில்லை. ஆனால், ஏராளமான குப்பை அவற்றின்மீது

குவிந்து கிடக்கின்றது. இது சுத்தம் செய்யப்படவேண்டும்; உண்மையான, நித்யமான கொள்கைகள் ஜனங்களின் முன்னே வைக்கப்படவேண்டும்; அப்பொழுதுதான், நமது மதமும் நமது தேசமும் உண்மையில் நன்மை யடையும்.

சிஷ்யன்:—அப்படிச் செய்வது எவ்விதம்?

ஸ்வாமி:—என்? எல்லாவற்றுக்கும் முதலில், நாம் மகாத்மாக்களுடைய உபாசனையை ஆரம்பிக்கவேண்டும். நித்திய உண்மைகளை யநுபவத்தில் அறிந்தடைந்த அப் பெரியோர்கள், ஜனங்கள் பின்பற்றுவதற்கு லக்ஷியங்களாக ஜனங்களின் முன்னே வைக்கப்படவேண்டும்; இந்தியா விஷயத்தில், எல்லோரிலும் ஸ்ரீராமச்சந்திரன், ஸ்ரீகிருஷ்ணன், மகாவீரர், ஸ்ரீராமகிருஷ்ணர் இவர்கள் வைக்கப்படவேண்டும். இந்தத் தேசத்திலே ஸ்ரீராமச்சந்திரனையும் மகா வீரரையும் உபாசிக்கும்படி நீ செய்ய முடியுமா? தற்காலத்துக்கு ஸ்ரீ கிருஷ்ணனுடைய பிருந்தாவன லீலையை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, சிம்ஹநாதத்துடனே கீதையைக் கர்ஜிக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணனுடைய உபாசனையை எங்குப் பார்த்தாலும் பரப்புவாய். இன்னும் சர்வ சக்திக்கும் உற்பத்தி ஸ்தானமாகிய ஜகன்மாதாவாம் சக்தி யுபாசனை தினசரி யநுஷ்டானத்திலே கொண்டுவருவாய்.

சிஷ்யன்:—அப்படியானால், பிருந்தாவனத்திலே ஸ்ரீ கிருஷ்ணன் கோபிகைகளுடன் திவ்ய லீலை புரிந்தது நல்லதன்று?

ஸ்வாமி:—இப்பொழுதிய சந்தர்ப்பங்களிலே, அவ்வுபாசனை உனக்கு நல்லதன்று; புல்லாங்குழல் வாசித்தலும் மற்றும் தேசத்தைப் புநர் உத்தாரணம் செய்யாது. நாம் இப்பொழுது மிகமிக அதிகமாக, உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையிலும் அபாரமான ரஜோகுணசக்தி துடித்துக் கொண்டிருக்கும் ஒரு வீரனை—சத்தியத்தை யறிவதற்குத் துணியவும் மரிக்கவும் தயாராயுள்ள வீரனை—தியாகத்தைக் கவசமாகவும் ஞானத்தை வாளாகவும் கொண்டுள்ள வீரனை—விரும்புகிறோம். ஜீவிதமான யுத்தகளத்திலே போராட வல்ல யுத்த வீரனுடைய தன்மையை நாம் இப்பொழுது விரும்புகிறோம். ஜீவிதத்தை யொரு உத்தியானவனமாகக் கருதுகின்ற, மணம் விரும்பும் காதலனுடைய தன்மை நமக்கு வேண்டாம்.

சிஷ்யன்:—அப்படியானால், கோபிகைகளின் லக்ஷியத்திலே வர்ணிக்கப்பட்டுள்ளபடியுள்ள பக்தி மார்க்கமானது பொய்யானதா?

ஸ்வாமி:—யார் அப்படிச் சொல்கிறது? நான் அப்படிச் சொல்லவில்லை! அது மிகவும் உயர்ந்ததொரு சாதனமாம். புலனாகிய போகத்தினிடத்தும் தனத்தினிடத்தும் அபாரமான பற்றுதல் உள்ள இந்தக்காலத்தில், அவ்வுயர்ந்த லக்ஷியங்களை யறிவதற்குக்கூட மிகவும் சிலராலேயே முடியும்.

சிஷ்யன்:—அப்படியானால், ஈச்வரனைப் புருஷனாக அல்லது காதலனாகக் கருதி உபாசிப்பவர் சரியான மார்க்கத்தைப் பின்பற்றுகிறதில்லையா?

ஸ்வாமி:—இல்லையென்று நான் சொல்லத் துணிகின்றேன். அவர்களுக்குள்ளே கௌரவம் பொருந்திய சிலர் உண்மையானவர்களாயிருக்கலாம். ஆனால், அவர்களுள் பெரும்பான்மையோர் இருண்ட தாமசத் தன்மையுள்ளவர்களா யிருக்கிறார்களென்று அறிந்துகொள்வாய். அவர்களில் பெரும்பான்மையோர் மந்தகுணம் நிறைந்தவர்களாய், மிகுந்தபலஹீனமுள்ளவர்களாயிருக்கிறார்கள். தேசம் உயர்த்தப்படவேண்டும்! மகா வீரோபாசனை ஆரம்பிக்கப்படவேண்டும்; 'சக்தி பூஜையானது நமது தினசரியநுஷ்டானத்தின் ஒரு பாக மாகவேண்டும். ஸ்ரீராமச்சந்திரன் ஒவ்வொரு வீட்டிலும் பூஜிக்கப்படவேண்டும். அதிலேதான் உங்களுடைய நன்மை யுள்ளது, வேறு மார்க்க மில்லை.

சிஷ்யன்:—ஆனால், 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஈச்வர நாமத்தை மிகவும் அதிகமாக சங்கீர்த்தனம் செய்வது வழக்கம்' என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனே?

ஸ்வாமி:—அப்படித்தான். ஆனால், அவருடையது வேறு விஷயம். அவருக்கும் சாதாரண மனிதர்களுக்கும் என்ன உவமை இருக்கமுடியும்? மதத்தின் வெவ்வேறு லக்ஷியங்களையெல்லாம், அவற்றுள் ஒவ்வொன்றும் ஏகசத்தி

யத்தினிடமே இட்டுச் செல்கின்றது என்பதை நிரூபித்துக் காண்பிப்பதற்கு அவர் தமது ஜீவிதத்திலே அநுஷ்டித்தார். அவர் செய்துள்ள எல்லாவற்றையும் செய்வதற்கு உன்னுலாவது என்னுலாவது எப்பொழுதேனும் முடியுமா? நம்மில் எவரும் அவரைப் பரிபூர்ணமாக அறிந்ததில்லை. ஆகையால், நான் அவரைப் பற்றி எங்கும பேசுவ்தற்குத் துணிகிறதில்லை. அவருடைய உண்மைத் தன்மை அவருக்கேதான் தெரியும்; அவருடைய சரீரம் மனுஷ்ய சரீரமாகத்தான் இருந்தது; ஆனுல், அவரைச் சுற்றியிருந்த மற்ருெவ்வொன்றும் பிறருடையவையிலிருந்து முழுதும் வேரு யிருந்தன.

சிஷ்யன்:—அவரை யவதார புருஷரென்று தாங்கள் நம்புகிறீர்களாவென்று நான் கேட்கலாமா?

ஸ்வாமி:—அவதாரம் என்ருல் நீ என்ன அர்த்தம் பண்ணிக்கொண்டிருக்கிரு யென்று முதலில் எனக்குச் சொல்லு.

சிஷ்யன்:—என்? ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ கௌராங்கர், புத்தர் அல்லது இயேசு முதலியவர்களைப் போல ஒருவர் என்று நான் கருதுகிறேன்.

ஸ்வாமி:—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் நீ இப்பொழுது கூறியவர்களைப் பார்க்கிலும்கூட பெரியவர் என்

பது எனக்குத் தெரியும். நம்புவதைப்பற்றி என்ன ! அது ஒரு அழகிய விஷயமென்பது எனக்குத் தெரியும் !

சிறிது நேரம் கழித்து ஸ்வாமிகள் மறுபடியும் கூறியதாவது :—தர்மத்தை மறுபடியும் ஸ்தாபிப்பதற்காக, காலத்தினுடையவும் சமுதாயத்தினுடையவும் ஆவசியகங்களுக் கேற்றவாறு மகா புருஷர்கள் உண்டாகிறார்கள். நீ அவர்களை மகா புருஷர்களென்றோ, எப்படிக்கூப்பிட்டாலும் சரி; அதனால் பாதக மில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில், லக்ஷியத்தை வெளிப்படுத்துகிறார்கள். பின்னர், மெல்ல மெல்ல, அவர்களுடைய ஆடையிலிருந்து வடிவங்கள் உண்டு பண்ணப்படுகின்றன ! புருஷர்கள் ஆக்கப்படுகின்றார்கள்,—மெல்ல மெல்ல வகுப்புக்கள் கிளம்பி வியாபிக்கின்றன. காலம் செல்லச் செல்ல இந்த வகுப்புகள் தாழ்மை யடைகின்றன; மறுபடியும் முன்னவர்கள் போன்ற சீர்திருத்தக்காரர்கள் வருகின்றார்கள். எத்தனையோ காலமாக ஒரு நீரோட்டம் போல இடைவிடாத தொடர்பில் ஓடிக்கொண்டிருக்கும் நியதியா யிருக்கிறதுஇது.

சிஷ்யன் :—தாங்கள் ஏன் ஸ்ரீராமகிருஷ்ணரை ஒரு அவதாரமாகப் போதிக்கிறதில்லை ? உண்மையில், அப்படிச், செய்வதற்கு அவசியமான சக்தியும் வாசாலகமும் மற்ற ஒவ்வொன்றும் தங்களுக்கிருக்கிறது.

ஸ்வாமி :—நான் உன்னிடம் உண்மையில் சொல்கிறேன். நான் அவரை மிகச் சொற்பமே அறிந்திருக்

கிறேன். நான் அதைப்பற்றி ஏதேனும் பேச வேண்டியிருக்கிறபொழுதெல்லாம், நான் எங்கே உண்மையை விட்டு விடுவேனோ, அல்லது பொய்யான நியாயங்களால் விவரிப்பேனோ வென்று, எனது அற்ப சக்தி போதாதென்று, அவரைப்பற்றிப் புகழ முயற்சி செய்து அவரை எனது அறிவுக்கு ஏற்றவாறு வர்ணித்து எங்கே அவரைச் சிறுமைப் படுத்திக் கூறிவிடுவேனோ! என்று நான் பயப்படும்படி அவர் எனக்கு அவ்வளவு பெரியவராகத் தோன்றுகிறார்!

சிஷ்யன் :—ஆனால், அநேகர் இப்பொழுது அவரை ஒரு அவதார புருஷராகப் போதிக்கிறார்கள்.

ஸ்வாமி :— அவர்கள் இஷ்டப்பட்டால், அப்படிச் செய்யட்டும். அவர்கள் அவரை யறிந்துள்ள அறிவின்படி செய்கிறார்கள். நீ அவரை யறிந்திருந்தால், நீயும் சென்று அப்படிச் செய்யலாம்.

சிஷ்யன்:—என்னால் தங்களையே கிரகிக்க முடிகிறதில்லை; ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி என்ன சொல்வது! தங்களுடைய கிருபை கொஞ்சம் எனக்குக் கிடைக்குமானால், நான் இந்த ஜன்மத்திலே பாக்கியம் பெற்றவனாகக் கருதிக் கொள்வேன்.

VI

கேள்வி :—இந்தியாவிலே தத்துவ ஆராய்ச்சி சம்பந்தமாக இப்பொழுது என்ன நடக்கிறதென்பதை யறிய நான் விரும்புகிறேன்.

ஸ்வாமி :—நான் கூறியபடி, இந்திய ஜனங்களிற் பெரும்பான்மையோர் அநுபவத்தில் துவைதிகளே யாவார். சிறுபான்மையோர் அத்வைதிகளாவார். விவாதத்தில் முக்கிய விஷயம் மாயையும் ஜீவனுமாம். நான் இந்தத் தேசத்துக்கு வந்தபொழுது, தொழிலாளர்கள் ராஜீய விஷயத்தின் தற்கால நிலைமையைப்பற்றி அறிந்துகொண்டிருக்கக் கண்டேன்; ஆனால், நான் அவர்களை "மதம் என்றால் என்ன?" என்றும், "இந்த வகுப்பினுடையவும் அந்த வகுப்பினுடையவும் கோட்பாடுகள் என்னவென்று நான் அவர்களைக் கேட்ட பொழுது, அவர்கள் "எங்களுக்குத் தெரியாது; நாங்கள் கோயிலுக்குப் போகிறோம்" என்று சொன்னார்கள். இந்தியாவிலே நான் ஒரு குடியானவனிடம் சென்று "உன்னை யார் ஆள்கிறார்கள்?" என்று கேட்டால், அவன் "எனக்குத் தெரியாது; நான் எனது வரியைச் செலுத்துகிறேன்" என்று கூறுகிறான். ஆனால், அவனுடைய மதம் என்னவென்று நான் அவனைக் கேட்டால், அவன், "நான் துவைதி" என்று கூறி, மாயையையும் ஜீவனையும்பற்றி விவரமாய்க் கூறத் தயாராயிருக்கிறான். அவனுக்கு வாசிக்க அல்லது எழுதத் தெரியாது; ஆனால், அவன் இதை யெல்லாம் சந்யாசிகளிடமிருந்து

கற்றுக்கொண்டிருக்கிறான். அதைப்பற்றி விவாதிப்பதில் அவனுக்கு மிகவும் பிரியம். பகல் வேலையான பிற்பாடு, குடியானவன் மரத்தின்கீழே யுட்கார்ந்து இந்தக் கேள்வி களை விவாதிக்கிறான்.

கேள்வி :—ஹிந்துக்களுக்கு வைதீகம் என்றால் என்ன?

ஸ்வாமி:—இக்காலத்திலே அது உண்ணுதல், குடித்தல், விவாகம் இவற்றைப்பற்றியுள்ள சில ஜாதிச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் என்று பொருள் படுகின்றது. அதன் பின்னர், ஹிந்துவானவன் தான் பிரியப்படுகின்ற எந்தக் கோட்பாட்டிலும் நம்பிக்கை வைக்கலாம். இந்தியா விலே ஒழுங்கா யமைக்கப்பெற்ற ஒரு வைதீக ஏற்பாடு இல்லவே யில்லை. ஆகையால், வைதீகக் கோட்பாடுகளை யொழுங்குபடுத்துவதற்கு ஒரு வகுப்பு மனிதர்கள் இருந்ததே யில்லை. பொதுவாக வேதங்களை நம்புகிறவர்கள் வைதீகர்க ளென்று நாங்கள் கூறுகிறோம். ஆனால், உண்மை யில் துவைத வகுப்புக்களில் பல வேதங்களில் மாத்திரம் வைக்கும் நம்பிக்கையைப் பார்க்கிலும் அதிக நம்பிக்கை யைப் புராணங்களிலே வைத்திருக்கின்றன.

கேள்வி :—கிரேக்கர்களுடைய தத்துவ சாஸ்திரத் தின்மீது உங்களுடைய ஹிந்து தத்துவ சாஸ்திரம் எத் தகைய செல்வாக்கைச் செலுத்திற்று ?

ஸ்வாமி:—அலெக்ஸாந்திரியர்கள் மூலமாக அதன் மீது கொஞ்சம் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம். சாங்கி

யக் கோட்பாட்டினாலே பித்தகோராஸ் என்பவர் வசப்படுத்தப்பட்டார் என்று கொஞ்சம் சந்தேகமிருக்கிறது. எப்படியானாலும் சரி, சாங்கிய சாஸ்திரமானது வேதங்களிலேயுள்ள தத்துவஞானத்தை யுக்திவாயிலாகச் சமரசப்படுத்தச்செய்த முதலாவது முயற்சியென்று நாங்கள் நினைக்கிறோம். "முதல் பிறந்த ரிஷி கபிலராமவர்" என்று வேதங்களிலேகூட கபிலருடைய பெயர் கூறப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம்.

கேள்வி:—மேனாட்டுச் சாஸ்திரத்துக்கும் இந்தக் கொள்கைக்கும் என்ன விரோதம்?

ஸ்வாமி:—விரோதமே யில்லை. நாங்கள் அதை யொப்புக் கொள்கிறோம். வளர்ச்சியைப்பற்றியும் ஆகாசத்தைப் பற்றியும் பிராணனைப்பற்றியுமுள்ள எங்களுடைய கொள்கைதான் உங்களுடைய தற்கால தத்துவ சாஸ்திரிகளிடம் உள்ளது. வளர்ச்சியில் உங்களுக்குள்ள நம்பிக்கை எங்கள் யோகிகளுக்குள்ளும் சாங்கிய சாஸ்திரத்திலும் உள்ளது. திருஷ்டாந்தமாக, பிரகிருதியை நிரப்புதலினாலே ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கமாக மாற்றப்படுவதைப்பற்றிப் பதஞ்சலி கூறுகிறார்; அவர் உங்களிடமிருந்து விவரித்துக் கூறுவதிலேதான் வித்யாசப்படுகிறார். இந்த வளர்ச்சியைப் பற்றி அவர் கூறும் நியாயம் ஆத்ம சம்பந்தமானது. ஒரு குடியானவன் அருகிலுள்ள வாய்க்கால்களிலிருந்து தனது வயலுக்குத் தண்ணீர் இறைக்க விரும்புகிற பொழுது அவன் தனது வாசலைத் தூக்கிவிட வேண்டியதுதான். அதுபோல

ஒவ்வொரு மனிதனும் அகண்டமேயாயிருக்கிறான்; இந்தத் தகடுகளும் தாழ்ப்பாள்களும் வெவ்வேறு சந்தர்ப்பங்களும் அவனை யுள்ளே அடைத்துவைத்திருக்கின்றன. ஆனால், அவை நீக்கப்பட்டவுடன், அவன் வெளியே ஓடி, தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறான். மிருகத்தினிடத்தில் மனிதன் அடங்கிக் கிடந்தான்; ஆனால், நல்ல சந்தர்ப்பங்கள் நேரிட்டவுடனே, அவன் மனிதனாக வெளிப்படுத்தப்பட்டான். இன்னும், தகுந்த சந்தர்ப்பங்கள் நேரிட்டவுடனே, மனிதனிலுள்ள ஈச்வரன் தானே வெளிப்பட்டான். ஆகையால், நாங்கள் புதிய கொள்கைகளுடன் போராடுவதற்கு ஒன்று மில்லை. திருஷ்டாந்தமாக, தர்சனத்தைப்பற்றிச் சாங்கியர் கொண்டிருக்கும் கோட்பாடு தற்கால சரீரதர்ம சாஸ்திரத்திலிருந்து வேறுபட்டதன்று.

கேள்வி:—ஆனால், தங்களுடைய மார்க்கம் வேறு?

ஸ்வாமி:—ஆம். மனத்தின் சக்திகளை யெல்லாம் ஏகாக்ரப்படுத்துதல் ஒன்றே ஞானம் அடைய மார்க்கம் என்று நாங்கள் கூறுகிறோம்: பகிர்முக சாஸ்திரத்திலே மனத்தின் ஏகாக்ரமாவது, வெளியே யுள்ள ஏதோ ஒன்றின்மீது அதை வைத்தலாம்; அந்தர்முக சாஸ்திரத்திலே அது—ஆத்மாவை நோக்கி இழுத்துக்கொள்ளுதலாம். நாங்கள் மனத்தின் இந்த ஏகாக்ரதையை யோகம் என்கிறோம்.

கேள்வி:—ஏகாக்ர அவஸ்தையிலே, இந்தக் கோட்பாடுகளின் உண்மை தெளிவாக விளங்குகின்றதா?

ஸ்வாமி:—யோகிகள் அதிகமாக உரிமை பாராட்டு கிறார்கள். மனத்தை ஏகாக்ரப்படுத்துவதினால் ஜகத்திலே யுள்ள ஒவ்வொரு உண்மையும், பகிர்முக உண்மை, அந்தர் முக உண்மை இரண்டும் தெளிவாக விளங்கி விடுகிற தென்று அவர்கள் கூறுகிறார்கள்.

கேள்வி.—அத்வைதிகள் அண்டத்தைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் ?

ஸ்வாமி:—இந்த அண்டமும் மற்றெவ்வொன்றும் மாயையிலேயே, காட்சியுலகிலேயே உள்ளனவென்று அத்வைதி கூறுவான். உண்மையில் அவை யில்லவேயில்லை. ஆனால், நாம் பந்தப்பட்டிருக்கும் வரையில் நாம் இந்தத் தோற்றங்களைப் பார்க்கவேண்டியிருக்கிறது. இந்தத்தோற் றங்களுக்குள், விஷயங்கள் ஒரு வித ஒழுங்கான அமைப்பில் நேரிடுகின்றன. அவற்றுக்கப்பால் நியதியு மில்லை, ஒழுங்கு மில்லை; ஆனால் முக்தியேதான்.

கேள்வி:—அத்வைதம் துவைதத்துக்கு விரோத மானதா ?

ஸ்வாமி:—உபநிஷத்துக்கள் ஒழுங்கா யமைக்கப்பட்ட முறையி லில்லாததினால், தத்துவ சாஸ்திரிகள் ஒருவித சாஸ் திரத்தை யுண்டுபண்ண விரும்பியபொழுது, மூல கிரந்தங் களை யெடுத்துக்கொள்வது சுலபமா யிருந்தது. ஆகையால், உபநிஷத்துக்கள் எப்பொழுதும் எடுத்துக்கொள்ளப்பட

வேண்டி வந்தன; இல்லையேல், அஸ்திவாரம் இருந்திராது. ஆயினும், வெவ்வேறு வித சாஸ்திரங்களெல்லாவற்றையும் நாம் உபநிஷத்துக்களிலே காண்கிறோம். அத்வைதமானது துவைதத்துக்கு விரோதமானதன்று என்பதே எங்களுடைய முடிபு. துவைதம், மூன்று படிகளில் ஒன்றேயென்று நாங்கள் கூறுகிறோம். மதமானது எப்பொழுதும் மூன்று படிகளையெடுத்துக்கொள்கிறது. முதலாவது, துவைதம். பின்னர் மனிதன் இன்னும் உயர்ந்த நிலைமையை அடைகிறான், இது விசிஷ்டாத்வைதம். கடைசியாக அவன் ஜகத்துடன் ஒன்றாயிருக்கக் காண்கிறான். ஆகையால், மூன்றும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக இருக்கவில்லை. ஆனால் நிறைவேற்றுகின்றன.

கேள்வி:—மாயை அல்லது அஞ்ஞானம் ஏன் உள்ளது?

ஸ்வாமி:—ஏன் என்பது காரண காரிய வரம்புக்கப்பால் கேட்கப்படக்கூடாதது. அது மாயைக்குள்ளேயே கேட்கப்படலாம். அந்தக் கேள்வி தர்க்க வாயிலாக ஒழுங்குபடுத்திக் கேட்கப்பட்டால் நாம் அதற்கு மறுமொழியளிப்போம் என்று யாங்கள் கூறுகிறோம். அதற்கு முன், நாங்கள் மறுமொழியளிக்க வேண்டிய அவசியமில்லை.

கேள்வி:—சகுணக் கடவுள் மாயையைச் சேர்ந்தவரா?

ஸ்வாமி:—ஆம். ஆனால் சகுணக் கடவுள் மாயையினால் பார்க்கப்பட்ட அகண்ட வஸ்துதான். அகண்ட வஸ்துவே

வே பிரகிருதிக் குட்பட்டு, மனுஷ்ய ஜீவன் எனப்படுகிறது; பிரகிருதியை அடக்கி யாண்டுகொண்டிருப்பது ஈச்வரன் அல்லது சகுணக் கடவுள் எனப்படுகிறது. ஒரு மனிதன் இங்கிருந்து சூர்யனைப் பார்ப்பதற்காகப் புறப்படுவானுனல், அவன் முதலில் ஒரு சிறிய சூர்யனைப் பார்ப்பான்; ஆனல், அவன் மேலே செல்லச் செல்ல, அவன் உண்மையான சூர்யனை யடைகிற வரையில் அது மேன்மேலும் பெரிதாகக் கண்டுகொண்டே போவான். அவனுடைய அபிவிருத்தியின் ஒவ்வொரு படியிலும் அவன் ஒரு வேறுன சூர்யனையே பார்த்துக்கொண்டு வந்தான்; ஆயினும், அவன் பார்த்துக்கொண்டிருந்தது ஒரே சூர்யன்தான் என்பது நமக்கு நிச்சயம். ஆகையால், இவ்விஷயங்களெல்லாம் அகண்டத்தின் தோற்றங்களேயாம்; ஆகையால், அவை உண்மையே. ஒன்றும் பொய்த் தோற்றமன்று. ஆனுல், அவை தாழ்ந்த படிகளென்று மாத்திரம் நாம் சொல்லக்கூடும்.

கேள்வி:— மனிதன் அகண்ட வஸ்துவை யறிவதற்குள்ள விசேஷ முறை யென்ன?

ஸ்வாமி:— இரண்டு முறைகள் உண்டென்று நாம் கூறுகிறோம். ஒன்று உடன்பாடானது, மற்றது எதிர்பாடானது. ஜகத் முழுதும் சென்றுகொண்டிருக்கின்றதே —அன்பு முறையே—உடன் பாடானது. இந்த அன்பு வட்டம் எல்லை யில்லாமல் விரிக்கப்பட்டுக்கொண்டே போகுமானல் நாம் சமஷ்டியன்பை யடைகிறோம். மற்றது

"நேதி", "நேதி",—"இது அன்று," "இது அன்று",—மனத்திலிருந்து கிளம்பி மனத்தை வெளியே இழுக்க முயற்சிக்கின்ற ஒவ்வொரு அலையையும் தடுத்துவிடுதலாம். கடைசியாக, மனம் மரித்துவிடுகின்றது, சத்தில் வஸ்து தானே வெளிப்படுகின்றது. நாம் அதைச் சமாதியென்கிறோம்.

கேள்வி:— அப்படியானால், அது தன்மையை முன்னிலையில் லயப்படுத்துவதாகும்!

ஸ்வாமி:— முன்னிலையைத் தன்மையில் லயப்படுத்துவதாம்; தன்மையை முன்னிலையில் லயப்படுத்துவதன்று. உண்மையில் இந்த உலகம் மரித்துவிடுகின்றது; நான் எஞ்சியிருக்கிறேன்; நான் ஒருவனே எஞ்சியுள்ளேன்.

கேள்வி :— இந்தியாவிலுள்ள பக்திக் கொள்கை முழுதும் மேனாட்டுச் சம்பந்தத்தின் பயனென்று ஜெர்மனியிலுள்ள (நமது) எங்கள் தத்துவ சாஸ்திரிகளிற் சிலர் நினைத்திருக்கிறார்கள்.

ஸ்வாமி :— நான் அதைப்பற்றிக் கவலைப் படுகிறதில்லை —அப்படி நினைத்துக்கொண்டது வெறும் பிரமையே. இந்தியா தேசத்து பக்தி மேனாட்டாருடைய பக்தி போன்றதன்று. எங்களிடம் மத்திய கொள்கை யாதெனில், பயத்தைப்பற்றிய நினைப்பே கிடையாது. அது எப்பொழுதும், ஈச்வரனிடம் பக்தி செலுத்து, என்பதே. பயத்தினால் உபாசிப்பது கிடையாது; ஆனால், எப்பொழுதும் பக்தியின்

மூலமாகவே உபாசிக்கவேண்டும். ஆதிமுதல் அந்தம் வரையில் பக்தியே பிரதானம். கிறிஸ்தவ வேத புத்தகத்தைப்பார்க்கிலும் மிகவும் பழமையானதான உபநிஷத்துக்களில் மிகமிகப் புராதனமானவற்றில் பக்தி கூறப்பட்டிருக்கிறது. பக்தியின் வித்துக்கள் ஸம்ஹிதையிலும் கூட இருக்கின்றன. பக்தி யென்னும் வார்த்தை மேனாட்டு வார்த்தையன்று. சிரத்தை யென்னும் பதத்தினால் அது குறிப்பிடப் பட்டது.

கேள்வி:— கிறிஸ்தவ மதத்தைப்பற்றி இந்தியர்கள் என்ன நினைக்கிறார்கள்?

ஸ்வாமி:— அது மிகவும் நல்லதென்பதே. வேதாந்தம் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும். இந்தியாவிலே எங்களிடம் விசேஷக் கொள்கை யொன்று உள்ளது. எனக்கு ஒரு குழந்தை யிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். நான் அவனுக்கு எந்த மதத்தையும் சொல்லிக் கொடுக்கவேண்டாம். நான் அவனுக்கு உச்வாச நிச்வாச முறைகளை—மனத்தை ஏகாக்ரப்படுத்தும் அப்யாசத்தையும் ஒரு பிரார்த்தனை வாக்கியத்தையும்—அவனுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும்:— பிரார்த்தனை யென்றால், உங்களுடைய பொருளில் அன்று; ஆனால், "இந்த ஜகத்துக்குச் சிருஷ்டி கர்த்தாவாயுள்ள அவனை நான் தியானிக்கிறேன்; அவர் எனது மனத்துக்கொளியளிப்பாராக", என்னும் இது போன்ற ஒன்றாம். அம்மாதிரி அவன் படிப்பிக்கப் பெறு

வான். பின்னர் வெவ்வேறு சாஸ்திரிகளிடமும் ஆசாரியர்களிடமும் சிரவணம் செய்துகொண்டே போவான். தனக்கு மிகமிக ஏற்றவரென்று எவரை அவன் நினைக்கிருனே அவரை அவன் தெரிந்தெடுத்துக்கொள்ள, இந்த மனிதன் அவனுடைய குருவாவர், அவன் சிஷ்யனுவான். அவன் அந்த மனிதனை நோக்கிக் கூறுவான்: "தாங்கள் போதிக்கின்ற இந்த சாஸ்திர முறை மிகமிகச், சிறந்தது, ஆகையால் அவற்றை எனக்கு உபதேசியுங்கள்." எங்களுடைய மூலக் கொள்கை என்னவென்ருல், உன்னுடைய கோட்பாடு என்னுடையதாயிருக்க முடியாது; என்னுடையது உன்னுடையதா யிருக்க முடியாது; ஒவ்வொருவரும் தமது சொந்த மார்க்கத்திலே செல்லவேண்டும். எனது பெண் ஒரு மார்க்கமுடையவளா யிருக்கலாம். எனது புத்திரன் இன்னொன்றை உடைத்தா யிருக்கலாம். இன்னும், நான் வேமுென்றை உடைத்தா யிருக்கலாம். ஆகையால், ஒவ்வொருவருக்கும் ஒரு இஷ்டம் இருக்கிறது; நாம் அதை நமக்கே வைத்துக்கொள்கிறோம். அது எனக்கும் எனது குருவுக்கும் இடையில் உள்ளது. ஏனென்ருல், நாங்கள் ஒரு சண்டையை உண்டு பண்ணிக் கொள்ள விரும்புகிறதில்லே. அதைப் பிறருக்குச் சொல்வதனுல் எவருக்கும் அனுகூலமில்லே; ஏனென்ருல், ஒவ்வொருவரும் தமது சொந்த மார்க்கத்தைக் கண்டுகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையால், பொதுவான தத்துவ சாஸ்திரமும் பொதுவான முறைகளும்தான் எல்லோருக்கும் போதிக்கப்படலாம். திருஷ்

டாந்தமாக, ஒரு வேடிக்கை யுதாரணம் கொடுக்கிறேன், நான் ஒரு காலில் நின்றால் எனக்கு அநுகூலமா யிருக்கும். ஆனால், "ஒவ்வொருவரும் அப்படிச் செய்யவேண்டும்" என்று நான் சொன்னால், அது உனக்குப் பரிகாசமா யிருக்கும்; ஆனால் அது எனக்கு எற்றதா யிருக்கலாம். நான் துவைதியா யிருப்பதும், எனது மனைவி அத்வைதியா யிருப்பதும் மற்றும் சாத்தியமாம். எனது புத்திரர்களில் ஒருவன் ஜாதி சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கிற வரையில், கிறிஸ்துவை, அல்லது புத்தரை, அல்லது முகம்மதுவை பூஜிக்கலாம். அது அவனுடைய சொந்த இஷ்டம்.

கேள்வி :—ஹிந்துக்கள் எல்லோரும் ஜாதியை நம்புகிறார்களா?

ஸ்வாமி.—அவர்கள் நம்பத்தான் வேண்டியிருக்கிறது. அவர்கள் நம்பாமலிருக்கலாம். ஆனால், அவர்கள் கீழ்ப்படியத்தான் வேண்டியிருக்கிறது.

கேள்வி :—உச்வாசநிச்வாச முறைகளும் எகாக்ர அப்யாசங்களும் எல்லோராலும் அநுஷ்டிக்கப்படுகின்றனவா?

ஸ்வாமி :—ஆம். சிலரே தங்களுடைய மதத்தின் ஆவசியகங்களைத் திருப்தி செய்வதற்கு வேண்டிய அளவு அநுஷ்டிக்கிறார்கள். இந்தியாவிலேயுள்ள கோயில்கள் இங்குள்ள தேவாலயங்களைப் போன்றவையல்ல. அவையெல்லாம் நாளை மறைந்துவிடலாம், போய்விட்டனவே என்ற கவலை எற்படாது. கோயில், ஸ்வர்க்கம் செல்ல விரும்புகின்ற,

அல்லது புத்திரனை யடைய விரும்புகின்ற அல்லது அம்மாதிரி ஏதோ ஒன்றை விரும்புகின்ற மனிதனால் கட்டப்படுகிறது. ஆகையால், அவன் ஒரு பெரிய கோயில் கட்டி அங்குப் பூஜை செய்வதற்கு ஒரு சில பூஜாரிகளை நியமிக்கிறான் நான் அங்குச் செல்லவேண்டியதே யில்லை; ஏனென்றால், எனது உபாசனை யெல்லாம் வீட்டிலேயே யுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் பூஜையறையொன்று தனியாக வைக்கப் பட்டிருக்கின்றது. குழந்தை, உபதேசம் பெற்ற பின்னர், அது செய்யவேண்டிய முதலாவது கடமை யாதெனில், ஸ்நானம் செய்து, பின்னர் பூஜிப்பதாம்; அவனுடைய பூஜை யானது இந்தப் பிராணாயாமத்திலும் தியானத்திலும் ஒரு நாமத்தை ஜபிப்பதிலும் அடங்கியுள்ளது. இன்னொரு விஷயம் யாதெனில், சரீரத்தைநேராக நிறுத்திக்கொள்ளுதலாம். 'சரீரத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு மனத்துக்கு சக்தியிருக்கிறது' என்று நாங்கள் நம்புகிறோம். ஒருவன் இதைச் செய்து முடிந்த பின்னர், இன்னொருவன் வந்து அவனுடைய இடத்தில் உட்கார்கிறான்; ஒவ்வொருவனும் மௌனமாக அப்படிச் செய்கிறான். சில வேளைகளில் ஒரே அறையில் மூன்று அல்லது நான்கு பேர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒவ்வொருவனும் வெவ்வேறான முறையை உடைத்தாயிருக்கலாம். இந்த உபாசனை யொருநாளுக்குக் குறைந்தது இரண்டு முறை நடைபெறுகிறது.

கேள்வி:—தாங்கள் சொல்லுகிற இந்த ஏகத்துவ நிலை, இது ஒரு வெறும் லட்சியமா? அல்லது அனுபவத்தில் அடையப்படுவதா?

ஸ்வாமி:—அது அனுபவத்தில் அடையப்படுவதென்று நாங்கள் கூறுகிறோம். நாங்கள் அந்த நிலையை அனுபவத்தில் அடைகிறோமென்று நாங்கள் கூறுகிறோம். அது பேச்சில் மாத்திரம் இருந்தால், அதனால் எவ்வித பயனுமில்லை. வேதங்கள் மூன்று விஷயங்களைப் போதிக்கின்றன. இந்த ஆத்மா முதலில் சிரவணம் செய்யப்படவேண்டும், பின்னர் மனனம் செய்யப்படவேண்டும்; பின்னர் நிதித்தியாசனம் செய்யப்படவேண்டும். ஒரு மனிதன் அதை முதலில் கேட்டு, பின்னர் ஆராய்ந்து 'அது சரிதானா?' என்றுபார்க்கவேண்டும்; ஏனென்றால், அவன் அதை முட்டாள்தனமாக நம்பக்கூடாது; அறிந்து நம்ப வேண்டும். ஆராய்ந்து பார்த்த பின்னர், அவன் அதே சிந்தனையுடையவனாயிருந்து, அதை யனுபவத்தில் அடையவேண்டும். அதுதான் மதம் என்பது. நம்பிக்கை மதத்தினுடைய ஒரு பாகமாகாது. மதமென்பது அறிவுக்கதீதமான நிலைமை யென்று நாங்கள் கூறுகிறோம்.

கேள்வி:—நீங்கள் அந்த அறிவாதீதமான நிலைமையை எப்பொழுதேனும் அடைவதானால், அதைப்பற்றி ஏதேனும் கூற முடியுமா?

ஸ்வாமி:—முடியாது; ஆனால், எதன் பலன்களால் நாங்கள் தெரிந்துகொள்கிறோம். உறங்கச் செல்லும்பொழுது

முட்டாளாக விருந்தவன், உறக்கத்திலிருந்து வெளிவரும் பொழுது முட்டாளாகவே அல்லது அதனிலும் கேடுகெட்டவனுகவே வருகிருன். ஆனுல், இன்னெருவன் நிஷ்டை நிலைக்குள் செல்லுகிருன்; அவன் வெளியே வருகிற பொழுது, அவன் தத்துவ ஞானியாய், மகானுய், மகாத்மாவாய் இருக்கிருன். இவ்விரண்டு அவஸ்தைகளுக்குமுள்ள வித்யாசத்தை அது காண்பிக்கிறது.

கேள்வி:—சூட்சும சரீரம் என்று நீங்கள் எதைக் கூறுகிறீர்கள்?

ஸ்வாமி:—நாங்கள் லிங்க சரீரம் என்று கூறுவதுதான் சூட்சும சரீரம். இந்தச் சரீரம் மரித்துவிட்டால், அது எப்படி இன்னெரு சரீரம் எடுத்துக்கொள்ள முடியும்? ஜடமில்லாமல் சக்தி யிருக்க முடியாது. ஆகையால், சூட்சும ஜடத்தின் ஒரு அம்சம் எஞ்சி நிற்கிறது; அதன் மூலமாக அந்தரிந்திரியங்கள் இன்னெரு சரீரத்தை உண்டுபண்ணிக் கொள்கின்றன. ஏனெனில், ஒவ்வொருவனும் தமது சரீரத்தை யுண்டுபண்ணிக் கொள்கின்றனர்; சரீரத்தை யுண்டு பண்ணுவது மனம்தான். நான் மகாத்மாவாய்விட்டால், எனது மூளை மகாத்மாவினுடைய மூளையாகமாறுதலடைந்து விடுகிறது; "யோகியானவன் இந்த ஜன்மத்திலேயே தனது சரீரத்தை ஒரு ஈஸ்வர சரீரமாக மாற்றிக்கொள்ள முடியும்" என்று யோகிகள் கூறுகிருர்கள்.

யோகிகள் அநேக அற்புதமான விஷயங்களைக் காண்பிக்கிறார்கள். ஒரு அவுன்ஸ் அநுஷ்டானம் ஆயிரம் சாத்தல் கொள்கைக்குச் சமானமாம். நான் இது அல்லது அந்த விஷயம் செய்யப்படுவதைப் பார்க்காததினாலே, அது பொய்யென்று சொல்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. "அப்யாசத்தினால், மிகமிக ஆச்சரியமான, பலவிதமான சித்திகளை நீ அடைய முடியும்" என்று அவர்களுடைய நூல்கள் கூறுகின்றன; ஒழுங்கான அப்யாசத்தினால், சொற்ப காலத்திலே சிறு பலன்களை யடைந்துவிட முடியும். இந்த யோகிகள், சாஸ்திரங்க ளெல்லாவற்றிலும் கூறப்பட்டுள்ள மிகவும் ஆச்சர்யமான விஷயங்களை, சாஸ்திரீய முறையில் எடுத்து விரித்துரைக்கிறார்கள். "இந்தச் சித்திகளைப்பற்றிய உரைகள் ஒவ்வொரு ஜனசமூகத்திலும் எப்படி நுழைந்தது?" என்பதுதான் கேள்வி. அவையெல்லாம் பொய்யென்று கூறி, நியாயம் கேட்காத மனிதன் நியாயவாதி யாகமாட்டான். நீ அவற்றைப் பொய்யென்று ருசுப்படுத்த முடியுமானாலொழிய, அவற்றை மறுப்பதற்கு உனக்கு அதிகாரம் இல்லை. அவற்றுக்கு அஸ்திவாரமே யில்லையென்று நீ ருசுப்படுத்தவேண்டும்; அப்பொழுதுதான் நீ எழுந்திருந்து அவற்றை மறுப்பதற்கு உனக்கு அதிகாரம் உண்டு. ஆனால், நீ அப்படிச் செய்யவில்லை. ஆனால், "அவை சித்திகளல்ல" என்று யோகிகள் கூறுகிறார்கள்; இன்னும், அவர்கள் "அவற்றைச் செய்யமுடியும்" என்று உரிமை பாராட்டு

4

கிறார்கள். அநேக ஆச்சர்யமான விஷயங்கள் இன்று இந்தியாவிலே நடைபெற்று வருகின்றன. ஆனால், அவற்றுள் எதுவும் சித்திகளால் செய்யப்படுவதில்லை. அந்த விஷயத்தைப்பற்றி அநேக புத்தகங்கள் இருக்கின்றன. இன்னும், மனோதர்மசாஸ்திரமுகமாக ஒருவித சாஸ்திர ஆராய்ச்சியைத் தவிர, வேறெதுவுமே அந்த வழியில் செய்யப்படாவிட்டாலும், அந்தப் பெருமை யோகிகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.

கேள்வி:—யோகி காண்பிக்கக்கூடிய காட்சிகள் இன்னவையென்று தாங்கள் ஸ்தூலமாகச் சொல்ல முடியுமா?

ஸ்வாமி:—யோகியானவன், மற்றெந்த சாஸ்திரத்துக்கும் அளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையைத் தவிர, வந்து சோதனைசெய்து பார்ப்பதற்கு அவசியம் போதுமான நம்பிக்கையைத் தவிர, தனது சாஸ்திரத்தில் அதிக நம்பிக்கை வைக்கும்படி விரும்புகிறதில்லை. யோகியினுடைய லக்ஷியம் அபாரமானது. கீழ்த்தர விஷயங்கள் மனோ சக்தியினால் செய்யப்படமுடியு மென்பதை நான் பார்த்திருக்கிறேன்; ஆகையால், மிகமிக உயர்ந்த விஷயங்களும் செய்யப்பட முடியு மென்பதை நான் நம்பாமலிருப்பதற்கு நியாய மில்லை. யோகியினுடைய லக்ஷியமாவது, சர்வக்ஞத்துவத்தினாலும் சர்வ சக்தித்துவத்தினாலும் நித்திய சாந்தியையும் அன்பையும் அடையவேண்டியதே. கிருஷ்ண சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டு, பூமியில் விழுந்துவிட்ட ஒரு யோகியை நான் அறி

வேன். மாலையில் அவர் திரும்பவும் உயிர்பெற்றெழுந் தார். "என்ன நடந்தது" என்று கேட்டபொழுது, அவர் "எனது அன்பு நாதனிடமிருந்து ஒரு தூதன் வந்தான்" என்று சொன்னார். இந்த மனிதனிடமிருந்து பகைமையும் கோபமும் துவேஷமும்ஆகிய எல்லாம் எரிக்கப்பட்டுப்போய் விட்டன. அவர் பிரதி செய்யும்படி எதனாலும் அவரைத் தூண்ட முடியாது. அவர் எப்பொழுதும் அகண்ட அன்பா யிருக்கிறார். அவர் தமது அன்பு ஆகிறசக்தியில் சர்வ சக்தரா யிருக்கிறார். அவர்தான் உண்மையான யோகி. இவ்வித மாக, வெவ்வேறு விஷயங்களை வெளிப்படுத்துவது யதேச் சையாக நடைபெறுவதாம். அவன் அடைய விரும்புவது அது அன்று. "யோகியைத்தவிர மற்றெவ்வொரு மனித னும் அடிமையே" என்றுயோகி கூறுகிறான், அவன், ஆகா ரத்துக்கும், காற்றுக்கும், மனைவிக்கும், குழந்தைகளுக்கும், பணத்துக்கும், ஜனசமூகத்துக்கும், பெயருக்கும்,கீர்த்திக்கும் இன்னும் இவ்வுலகிலுள்ள ஓராயிரம் விஷயங்களுக்கும் அடி மையாயிருக்கிறான். இந்தப் பந்தங்களில் எதனாலும் அடக்கப் படாதிருக்கும் மனிதன் ஒருவனே உண்மையான மனிதன், உண்மையான்யோகி. "ஒரே மாதிரித்தன்மையில்உறுதியாய் நிலைபெற்றவர்களே இந்த ஜன்மத்தில் அந்யோந்ய சம்பந்த வாழ்க்கையை ஜயித்தவர்களாவார். ஈச்வரன் பரிசுத்தரா யும் எல்லோருக்கும் ஒரே மாதிரியாயும் இருக்கிறார். ஆகை யால், அத்தகையோர் ஈச்வரனில் இருப்பவர்களென்று சொல்லப்படுகிறார்கள்".

கேள்வி:—யோகிகள் ஜாதியை முக்கியமாகக் கருது கிறார்களா?

ஸ்வாமி:—இல்லை; ஜாதி யென்பது பக்குவ மடையாத மனங்களுக்கு ஒரு பயிற்சிப் பள்ளிக்கூடமேயாகும்.

கேள்வி:—இந்த அறிவாதீதக் கொள்கைக்கும் இந்தியாவின் உஷ்ணத்துக்கும் சம்பந்த மில்லையா?

ஸ்வாமி:—சம்பந்த மிருப்பதாக நான் நினைக்கவில்லை. ஏனென்றால், இந்தத் தத்துவஞானமெல்லாம், பெரும்பான்மை பனிக்கட்டிகள் உறைந்து கிடக்கும் தன்மையதாய்க் குளிர் மிகுந்த ஸ்திதியிலேயே, கடல் மட்டத்துக்குப் பதினையாயிரம் அடிக்கு மேலே விசாரணை செய்யப்பட்டனவாம்.

கேள்வி:—குளிர் மிகுந்த பிரதேசத்திலே ஜயம் பெறுவது சாத்தியமா?

ஸ்வாமி:—சாத்தியம்தான்; இவ் வுலகில் சாத்தியமான விஷயம் அது ஒன்றே. "நீ, உங்களில் ஒவ்வொருவரும் பிறப்பிலேயே வேதாந்தி" என்று நாங்கள் கூறுகிறோம். நீங்கள் வாழ்கின்ற ஒவ்வொரு நிமிஷத்திலும் ஒவ்வொன்றுடனும் உங்களுக்குள்ள ஒற்றுமையை நீங்கள் கூறிக்கொண்டே வருகிறீர்கள். உங்களுடைய ஹிருதயம் உலகை நோக்கிச் செல்லும் ஒவ்வொரு சமயத்திலும் நீங்கள் உண்மையான வேதாந்திகளாகவே யிருக்கிறீர்கள்; உங்களுக்கு அது தெரிகிறதில்லை, அவ்வளவுதான். ஏன் என்று தெரிந்துகொள்

ளாமல் நீங்கள் ஒழுக்கம் வாய்ந்தவர்களா யிருக்கிறீர்கள். யகுத்துப் பார்த்து, மனிதன் தெரிந்துகொண்டே ஒழுக்கம் வாய்ந்தவனு யிருக்குமாறு போதிக்கின்ற தத்துவ சாஸ்திரம் வேதாந்தமாகும். அதுவே சர்வ மதங்களினுடையவும் சார மாகும்.

கேள்வி:—எங்கள் மேனுட்டு ஜனங்களிடத்திலே எங் களைப் பலபட்டவர்களாகச் செய்கின்ற நியாயமற்ற முறை யொன்று இருக்கிறதென்றும், கீழ்நாட்டு ஜனங்கள் எங்களைப் பார்க்கிலும் அதிக அநுதாப முள்ளவர்களென்றும் நீங்கள் கூறுகிறீர்களா?

ஸ்வாமிகள்:—மேனுட்டு ஜனங்கள் எல்லா ஜீவராசிக ளிடத்தும் அதிக கொடியவர்களா யிருக்கிறுர்க ளென்றும், கீழ் நாட்டு ஜனங்கள் அதிகம் தயை யுள்ளவர்களாயிருக் கிறுர்களென்றும் நான் நினைக்கிறேன். ஆனுல், அது எதனு லென்றுல், உங்களுடைய நாகரிகம் மிகவும் சமீபகாலத்ததா யிருப்பதினுலேயே. ஒரு விஷயம் தயையின் வசமாதற்குக் காலம் செல்கிறது; உங்களிடம் அதிகம் சக்தி யிருக்கிறது; முக்கியமாக, மனத்தை யடக்கும் சக்தி யநுஷ்டிக்கப்படு கிறதேயில்லே. உங்களேச் சாந்தமுள்ளவர்களாகவும் நல்லவர்க ளாகவும் ஆக்குவதற்குக் கொஞ்சக்காலம் செல்லும். இந்த உணர்ச்சி இந்தியாவிலுள்ள ஒவ்வொரு துளி ரத்தத்திலும் துடித்துக்கொண்டிருக்கிறது. நான் ஜனங்களுக்கு ராஜீய விஷயத்தைப் போதிப்பதற்குக் கிராமங்களுக்குச் சென்றுல்,

அவர்கள் அறிந்துகொள்ளமாட்டார்கள்; ஆனால், நான் அவர்களுக்கு வேதாந்தத்தைப் போதிக்கச் சென்றால், அவர்கள் "ஸ்வாமி! இப்பொழுது நீங்கள் சொல்வதெல்லாம் சரி" என்று சொல்வார்கள். அந்த வைராக்கியம், "பற்றற்ற தன்மை," இன்றும் இந்தியாவில் எங்கும் இருக்கிறது. நாங்கள் இப்பொழுது மிகவும் வீழ்ந்த ஸ்திதியில் கிடக்கிறோம்; ஆனால், அரசர்கள் தங்கள் சிம்ஹாசனங்களை விட்டுவிட்டு, ஒன்றுமே யில்லாமல் தேசத்திலே சஞ்சாரம் செய்வார்கள்.

சில இடங்களிலே, சாதாரண கிராமப்பெண் தனது ராட்டினத்தைச் சுற்றும்பொழுது, "த்வைதத்தைப்பற்றி என்னிடம் பேசாதே; எனது ராட்டினம் 'ஸோஹம், ஸோஹம்'; 'நானே அவன், நானே அவன்' என்று கூறுகின்றது" என்று சொல்கிறாள். இந்த ஜனங்களிடம் சென்று பேசி, அவர்கள் அப்படிப் பேசிவிட்டு, அந்தக் கல்லின் முன்னால் வணங்கி நிற்பது ஏன்?" என்று கேள். "உனக்கு மதமென்றால் வெறும் கோட்பாடே" என்றும், "அவர்களுக்கு மதமென்றால் அநுபவம்" என்றும் அவர்கள் கூறுவார்கள். அவர்களில் ஒருத்தி கூறுவாள்: "இதெல்லாம் மறைந்துவிட்டபொழுதுதான் நான் வேதாந்தியாவேன்; நான் சத்தியத்தைப் பார்த்தபொழுதுதான் வேதாந்தியாவேன்; அதுவரையில் எனக்கும் அறிவீனனுக்கும் வித்யாச மில்லை. ஆகையால், நான் இந்தக் கல்லுகளை உபயோகப்படுத்திக்கொண்டும், கோயில்களுக்குப்

போய்க்கொண்டும் இருக்கிறேன்; ஸ்வானுபூதியடைவதற்கே இதெல்லாம் செய்துகொண்டிருக்கிறேன். நான் கேள்விப் பட்டிருக்கிறேன்; ஆனால், பிரத்தியட்சத்தில் பார்த்து அநு பவத்தில் அடைய விரும்புகிறேன்.'' "பேச்சில் வெவ்வேறு மாதிரிகள், சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள முறைகளை விரித்துரைப்பதில் வெவ்வேறு விதங்கள்—இவை வித்வான் களுடைய போகத்துக்கேயாம், முக்திக்கன்று.'' அந்த முக்திக்கு நம்மை யிட்டுச்செல்வது ஸ்வானுபூதியே.

கேள்வி.—ஜனங்களுக்குள் இந்த ஆத்மீக ஸ்வதந்திரம் வழங்கப்பட்டால், ஜாதி விஷயத்திலே செலுத்தப்படுகின்ற கவனத்துக்கு அது பொருத்தமா?

ஸ்வாமி:—பொருத்த மில்லையென்பது நிச்சயம். ஜாதி யிருக்கக்கூடாதென்று அவர்கள் கூறுகிறார்கள். ஜாதியில் இருக்கிறவர்கள்கூட, அது மிகவும் பரிபூர்ணமான ஸ்தா பனம் அல்லவென்றே கூறுகிறார்கள். ஆனால், நீங்கள் எங் களுக்கு இதனிலும் சிறந்ததாக இன்னொன்றைக் கண்டு பிடித்துக் கொடுத்தால், நாங்கள் இதை விட்டுவிடுவோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதற்குப் பதிலாக நீங்கள் எங்களுக்கு என்ன கொடுப்பீர்கள்? ஜாதி எங்கு இல்லை? உங்க ளுடைய ஜன சமூகத்தில் நீங்கள் ஜாதியை உண்டு பண்ணு தற்குக்காலமெல்லாம் கடும்முயற்சிசெய்துகொண்டிருக்கிறீர் கள். ஒரு மனிதனுக்கு ஒரு பை நிரம்பப் பணம் கிடைத்த வுடனே, அவன் "நான் நானூற்றில் ஒருவன்'' என்று கூறு

கிறுன். ஒரு நித்தியமான ஜாதியை உண்டுபண்ணுவதில் நாங்களே ஜயமடைந்திருக்கிறோம். இதர ஜன சமூகங்கள் கடும் முயற்சி செய்துகொண்டிருக்கின்றன; ஜயமடைய வில்லை. எங்களிடம் போதிய அளவு மூட நம்பிக்கைகளும் தீமைகளும் இருக்கின்றன. உங்களுடைய தேசத்திலிருந்து மூட நம்பிக்கைகளையும் தீமைகளையும் அகற்றிவிட்டால், அத ணுல் தேசம் சீர்திருந்துமா? ஜாதி யிருத்தலினுல்தான் முப் பது கோடி ஜனங்கள் உண்பதற்கு இன்னும் ஆகாரம் கண்டு கொள்ள முடிகிறது. அது குறையுற்ற ஸ்தாபனமே யென் பதில் சந்தேக மில்லை. ஆனுல், ஜாதி யிருந்திராவிட்டால், உங் களுக்குப் படிப்பதற்கு சமஸ்கிருத புத்தகங்களே யிரா. இந்த ஜாதி சுவர் உண்டு பண்ணிற்று; அந்தச்சுவரைச்சுற்றி எல்லா விதமான படையெடுப்புக்களும் புரண்டு அடித்து மோதின; ஆனுல், உடைப்பதற்கு அசாத்தியமென்று கண்டுகொண் டன. அந்த ஆவசியகம் இன்னும் போய்விடவில்லை. ஆகை யால், ஜாதி இன்னும் இருக்கிறது. இப்பொழுது எங்க ளிடம் உள்ள ஜாதி எழுநூறு வருஷங்களுக்கு முன்னிருந்த தன்று. ஒவ்வொரு அடியும் அதைப்பலப்படுத்தியிருக்கிறது. ஜயிக்கவேண்டுமென்ற எண்ணத்துடனே தனக்கு வெளியே ஒருபொழுதும் செல்லாத தேசம் இந்தியா ஒன்றேயென் பதை நீங்கள் அறிந்துகொள்கிறீர்களா? தன்னுடைய சந் ததியார் எவரும் (இதர தேசங்களை) ஜயிக்கப் போகக்கூடா தென்று அசோகன் என்ற பெரிய சக்கரவர்த்தி வற்புறுத்தி

ஞன். ஜனங்கள் எங்களுக்குப் போதகர்கள் அனுப்ப விரும்பினால், அவர்கள் அனுப்பட்டும். ஆனால், தீமை செய்யாதிருக்கட்டும். ஹிந்துக்களை ஜயிப்பதற்கு இந்த ஜனங்களெல்லோரும் ஏன் வரவேண்டும்? அவர்கள் (ஹிந்துக்கள்) எந்த ஜனசமூகத்துக்காவது ஏதேனும் தீமை செய்தார்களா? தங்களால் செய்ய முடிந்த சொற்ப நன்மையை அவர்கள் உலகுக்குச் செய்தார்கள். அவர்கள் சாஸ்திரம், தத்துவஞானம், மதம் இவற்றைப் போதித்து, பூமியிலுள்ள காட்டுமிராண்டி ஜாதிக்கூட்டங்களை நாகரிகப்படுத்தினார்கள். இதுதான் பிரதி-கொலையும் கொடுமையும் அவர்களை நம்பிக்கையற்ற போக்கிரிகளென்று கூப்பிடுவதுமாம். மேனாட்டு ஜனங்களாலே இந்தியாவைப்பற்றி எழுதப்பட்டுள்ள புத்தங்களைப் பாருங்கள். அங்குச் செல்லும் அநேக யாத்திரிகர் சொல்லும் கதைகளைக் கேளுங்கள்; எந்தத் தீமைகளுக்குப் பிரதியாக இந்த நிந்தனைகள் அவர்கள்மீது எறியப்படுகின்றன? இப்படியெல்லாம் அவர்கள் கூறுகிறார்கள்.

கேள்வி:—நாகரிகத்தைப்பற்றி வேதாந்தக் கொள்கையென்ன ?

ஸ்வாமி:—நீங்கள் தத்துவ சாஸ்திரிகள்; மனிதனுக்கும் மனிதனுக்கும் பணம்நிறைந்த ஒருபை வித்தியாசத்தையுண்டு பண்ணுகிறதென்று நீங்கள் நினைக்கிறதில்லை. இந்த யந்திரங்களினுடையவும் சாஸ்திரங்களினுடையவும் மதிப்புத்தான் என்ன? அவற்றால் ஒரே பயன்தான் உள்ளது. அவை

அறிவைப் பரப்புகின்றன. நீங்கள் ஆவசியகத்தை நிவிருத்திக்க வழி தேடவில்லை. ஆனால், அதை இன்னும் அதிகமாக்கி விட்டிருக்கிறீர்கள். யந்திரங்கள் தரித்திரத்தைப் போக்குகிறதில்லை. அவை, மனிதர் மேன்மேலும் கஷ்டப்படும்படியே செய்கின்றன. போட்டி இன்னும் பலமாகிறது. பிரகிருதிக்குத்தான் என்ன மதிப்புள்ளது? கம்பியினால் மின்சாரத்தை யனுப்புகின்ற ஒரு மனிதனுக்கு, நீ ஏன் சென்று ஒருஸ்தூபி கட்டுகிறாய்? அப்படிப்பிரகிருதி லட்சக்கணக்கான தடவை செய்கிறதில்லையா? ஒவ்வொன்றும் பிரகிருதியிலே முன்னமேயே யில்லையா? நீ அதை யடைவதனால் உனக்கு என்ன மதிப்பு? அது முன்னமேயே அங்கு உள்ளது. அதனால் உண்டாகும் ஒரே பயன் யாதெனில், அது இந்த அபிவிருத்தியை உண்டுபண்ணுகிறது. இந்த ஜகத்தானது ஜீவன் அப்யாசம் எடுத்துக்கொள்ளும் ஒரு சிலம்பப் பள்ளிக்கூடமேயாம். இந்த அப்யாசங்களெல்லாம் ஆனபின்னர், நாம் தேவர்களாகிறோம். ஆகையால், ஒவ்வொன்றினுடையவும் பயன் அது எவ்வளவு தூரம் ஈச்வரனுடைய வெளிப்பாடு என்பதினால் தீர்மானிக்கப்படவேண்டியிருக்கிறது. நாகரீகமென்பது மனிதனிடத்துள்ள அந்த ஈச்வரத்துவத்தின் வெளிப்பாடேயாம்.

கேள்வி:—புத்தர்களுக்கு ஜாதி நியதிகள் ஏதேனும் உண்டா?

ஸ்வாமி:—புத்தர்களுக்கு ஒருபொழுதும் அதிகம் ஜாதியிருந்ததில்லை. இந்தியாவில் புத்தர்கள் மிகவும் சிலரேயிருக்கிறார்கள். புத்தர் ஒரு ஜாதீயச் சீர்திருத்தக்காரர். ஆயினும், பௌத்ததேசங்களிலே ஜாதியை யுண்டுபண்ணுவதற்குப் பலமான முயற்சிகள் செய்யப்பட்டனவென்று நான் காண்கிறேன். அவை தவறிவிட்டன, அவ்வளவுதான். பௌத்தர்களுடைய ஜாதி உண்மையில் ஒன்றுமே யில்லை. ஆனால், அவர்கள் மனத்திலே அதைப்பற்றி கர்வமடைந்து கொள்கிறார்கள்.

புத்தர் வேதாந்தத்தைப் பிரகாசிக்கச் செய்யும் சந்யாசிகளுள் ஒருவர். இன்றும் அநேக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுவதுபோல, அவர் புதியதொரு வகுப்பை ஆரம்பித்தார். இப்பொழுது புத்தமதம் என்று சொல்லப்படுகின்ற கருத்துக்கள் அவருடையவையல்ல. அவை இன்னும் அதிக புராதனமானவை. அவர், கருத்துக்களுக்கு சக்தி யளித்த ஒரு மகா புருஷர். பௌத்தமதத்திலே விசேஷமாயுள்ள தத்துவமாவது, அதனுடைய சமுதாய தத்துவமாம். பிராஹ்மணர்களும் க்ஷத்திரியர்களுமே நமக்கு எப்பொழுதும் ஆசார்யர்களா யிருந்திருக்கிறார்கள்; உபநிஷத்துக்களில் பெரும்பான்மையும் க்ஷத்திரியர்களால் எழுதப்பட்டவையாம். வேதங்களிலே கர்மகாண்டம் பிராஹ்மணர்களிடமிருந்து வந்தது. இந்தியா முழுதிலும் நமது பெரிய ஆசார்யர்களுள் பெரும்பான்மையோரும் க்ஷத்திரியர்களாகவே யிருந்

திருக்கிறார்கள். தங்களுடைய போதனைகளில் சமரசமாகவே எப்பொழுதும் இருந்தார்கள். பிராஹ்மணதீர்க்கதர்சிகளோ, இருவரைத்தவிர, மற்றெல்லோரும், தனிப்பட்ட உரிமை பாராட்டுபவர்களாகவே யிருந்தார்கள். ஈச்வரனுடைய அவதார புருஷர்களென்று பூஜிக்கப்படுகின்ற ராமர், கிருஷ்ணர், புத்தர், இவர்கள் க்ஷத்திரியர்களே.

கேள்வி:—வகுப்புக்களும், சடங்குகளும், சாஸ்திரங்களும் ஸ்வானுபூதிக்கு அநுகூலங்களா?

ஸ்வாமி:—மனிதன் ஸ்வானுபவம் அடைகிறபொழுது, அவன் எல்லாவற்றையும் துறந்துவிடுகிறான். பலவிதமான வகுப்புக்களும் சடங்குகளும் புத்தகங்களும், அவை அந்த முடிவை யடைவதற்கு உபாயங்களா யிருக்கிறவரையில், எல்லாம் சரியே. ஆனால், அவை அதில் தவறிவிட்டால், நாம் அவற்றை மாற்றவேண்டும. "ஞானி, அஞ்ஞானியினுடைய நிலைமையை இகழக்கூடாது; ஞானி, அஞ்ஞானிகளுக்கு அவர்களுடைய சொந்த, விசேஷமான மார்க்கத்திலேயுள்ள நம்பிக்கையையும் கெடுக்கக்கூடாது; ஆனால், தகுந்த செய்கையினால் அவர்களை யிட்டுச்சென்று, தான் நிற்கிற இடத்துக்கு அவர்கள் வரும்படியான மார்க்கத்தை அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும்."

கேள்வி:—வியஷ்டிக் கொள்கையையும் சன்மார்க்கத்தையும் பொருத்தி வேதாந்தமானது எப்படி நியாயம் கூறுகிறது?

ஸ்வாமி:—இந்த உண்மையான வியஷ்டி அகண்டமே யாம். இந்தச் சகுணத்தன்மை மாயையினுல் ஏற்படுவது. அது தோற்றல்மாத்திரமாயுள்ளது; உண்மையில் அது எப்பொழுதும் அகண்டவஸ்துவா யிருக்கிறது. உண்மையில் உள்ளது ஒன்றே; ஆனுல், மாயையிலே அது அநேகமாகத் தோற்றுகின்றது. மாயையிலே இந்த வேற்றுமை யுண்டு. ஆயினும், இந்த மாயையில்கூட, ஒவ்வொரு ஜனசமூகத்தினுடையவும் எல்லா சன்மார்க்க சாஸ்திரங்களிலும் எல்லா ஒழுக்கத்திலும் வெளிப்படுத்தப்பட்டபடி ஏகத்துவத்தைத் திரும்ப அடைவதற்குள்ள வாசனையே எப்பொழுதும் இருக்கிறது. ஏனென்ருல், அது ஆத்மாவுக்கு அமைப்பிலேயே ஏற்பட்டதொரு ஆவசியகம். அது தனது ஏகத்துவத்தைக் கண்டுபிடித்தலாம்; இந்த ஒற்றுமையைக் கண்டுபிடிக்கச் செய்யும் இந்தக் கடும் முயற்சியே நாம் சன்மார்க்கமென்றும் ஒழுக்கமென்றும் கூறுவது. ஆகையால், நாம் அவற்றை யப்பியசிக்கவேண்டும்.

கேள்வி:—தனிப்பட்டவர்களுக்குள்ள சம்பந்தத்தைப் பற்றியே சன்மார்க்கத்தின் பெரும்பான்மையும் ஏற்பட்டிருக்கவில்லையா ?

ஸ்வாமி:—அவ்வளவுதான் அது. அகண்டவஸ்து மாயைக்குள்ளே வருகிறதில்லை.

கேள்வி:—வியஷ்டியே அகண்டமென்று தாங்கள் சொல்கிறீர்கள். வியஷ்டிக்கு அறிவு உண்டாவென்று நான் கேட்கவிருந்தேன்.

ஸ்வாமி:—வெளிப்பாட்டின் ஸ்திதி வியஷ்டியேயாம்; அந்த ஸ்திதியிலுள்ள ஒளிதான் நாம் அறிவு என்பது. ஆகையால், அகண்ட வஸ்துவின் ஒளிக்கு அறிவு என்ற இந்தப் பதத்தை உபயோகிப்பது சரியன்று; ஏனென்றால், அகண்ட நிலைமை அந்யோந்ய அறிவைக் கடந்தது.

கேள்வி.—அது அதில் அடங்கியதா ?

ஸ்வாமி:—ஆம் ; இந்தப் பொருளில் அடங்கியுள்ளது. ஒரு துண்டு தங்கமானது எல்லாவித நாணயங்களாகவும் மாற்றப்பட முடியும்போலத்தான் இதுவும். அந்த நிலைமை எல்லாவித அறிவாகவும் உடைக்கப்பட முடியும். அது அறிவாதீத நிலைமையாம்; பிரக்ஞை, பிரக்ஞையற்ற தன்மை, இரண்டும் அதிலே அடங்கியுள்ளது. அந்த நிலைமையையடைகின்ற மனிதனிடம் நாம் அறிவெனப்படுவதெல்லாம் இருக்கின்றது. அந்த அறிவாகிற பிரக்ஞையை அவன் அநுபவத்தில் அடைய விரும்புகிறபொழுது, அவன் ஒரு அடி கீழே போகவேண்டியிருக்கிறது. அறிவு என்பது ஒரு கீழ்ப்பட்ட நிலைமையே; மாயையிலேதான், நமக்கு அறிவு இருக்க முடியும்.

V

கேள்வி:—நாம் யாரைக் குரு என்று கூப்பிடக்கூடும்?

ஸ்வாமி:—உனது முற்காலத்தையும் பிற்காலத்தையும் கூறக்கூடியவர் எவரோ அவரோ உனது குருவாவர்.

கேள்வி:—மனிதனுக்கு பக்தி எப்படி யிருக்கமுடியும்?

ஸ்வாமி.—உனக்குள்ளே பக்தி யிருக்கிறது; காமினி—காஞ்சனமாகிற திரையே அதை மூடியிருக்கிறது; அது நீக்கப்பட்டவுடனே, பக்தி தானே வெளிப்படும்.

கேள்வி:—நாம் நம்மீதே சார்ந்து கொள்ளவேண்டுமென்ற மொழியின் உண்மையான அர்த்தம் என்ன ?

ஸ்வாமி:—இங்கு, ஆத்மாவென்பது நித்யாத்மாவாகும். ஆனால், ஜீவாத்மா உண்மையில் பிரமையினுள்பட்ட பரமாத்மாவேயாகையால், அநித்யவஸ்துவைச் சார்ந்திருத்தலும் மெல்ல மெல்ல சரியான லட்சியத்துக்கே இட்டுச் செல்லலாம்.

கேள்வி:—ஒன்றே உள்ள உண்மைப்பொருளானால், ஒவ்வொரு நிமிஷத்திலும் எல்லோராலும் பார்க்கப்படுகின்ற இந்தத் துவைதம் எப்படிக் கிளம்பிற்று ?

ஸ்வாமி:—பார்வை யொருபொழுதும் துவைதமாயில்லை. துவைதத்தை யுண்டுபண்ணுவது பார்வையைத்தெரியப்படுத்தும் அறிவேயாம். பார்வை துவைதமாயிருந்தால்,

ஞேயமானது ஞாதாவினின்றும் வேருயிருக்க வேண்டும்; ஞாதாவும் ஞேயத்தினின்றும் வேரு யிருக்கவேண்டும்.

கேள்வி:—சமரசமான குணுபிவிருத்தி எப்படி நன்கு அடைய முடியும்?

ஸ்வாமி:—குணம் அபிவிருத்தி யடைந்துள்ள ஜனங்களுடன் சகவாசம் செய்வதனுல்.

கேள்வி:—வேதங்கள் விஷயத்திலே நமது மனப்பான்மை எப்படி யிருக்கவேண்டும்?

ஸ்வாமி;—வேதங்கள், அதாவது, அவற்றிலே யுக்திக்குப் பொருந்தியிருக்கின்ற பாகங்கள் மாத்திரம் பிரமாணங்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். புராணங்கள் போன்ற இதர சாஸ்திரங்கள், அவை வேதங்களுக்கு விரோதமாகச் செல்லாதவரையில், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவைகளே. உலகிலே, எந்தப் பாகத்திலேனும், வேதங்களுக்குப் பின்னர் உண்டான, மதவிஷயமான கொள்கைகளெல்லாம், வேதங்களிலிருந்து உண்டானவையாம்.

கேள்வி:—காலத்தை நான்கு யுகங்களாக வகுத்திருப்பது வானசாஸ்திரக் கணக்குப்படியா? அல்லது, இப்படியென்று சொல்ல முடியாத கணக்குப்படியா?

ஸ்வாமி :—வேதங்களிலே அத்தகைய வகுப்புக்களைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. புராண காலங்களிலே ஏற்பட்ட முரட்டுக் கொள்கைகளாம் அவை.

கேள்வி :—கருத்துக்கும் பதத்துக்கும் உள்ள சம்பந்தம் அவசியமானதும் மாறுதலற்றதுமா? அல்லது, யதேச்சையா யுண்டானதும் ஒரு முறையை யனுசரித்ததுமா?

ஸ்வாமி :—விஷயம் மிகவும் தர்க்ககரமானதாம். அவசியமான ஒரு சம்பந்தம் இருக்கிறதுபோலத் தோன்றுகிறது; ஆனால், பாஷையின் வேறுபாட்டிலிருந்து தோன்றுகிறபடி கண்டிப்பான சம்பந்தமில்லை. நாம் இன்னும் கண்டு பிடிக்க முடியாமலிருக்கும் சில சூட்சும சம்பந்தமும் இருக்கலாம்.

கேள்வி :—இந்தியாவினுள்ளே வேலை செய்வதில் பின்பற்றப்படவேண்டிய கொள்கை யாதாயிருக்கவேண்டும்?

ஸ்வாமி :—எல்லாவற்றுக்கும் முதலில், மனிதர் அனுபவ முள்ளவர்களாகவும், சரீரபல முள்ளவர்களாகவும் இருக்கப் பயிற்றுவிக்கப்படவேண்டும். அத்தகைய ஸிம்ஹங்களில் ஒரு பன்னிரண்டு பேர் உலகை ஜயிப்பார்கள்; லக்ஷக்கணக்கான ஆடுகளால் அப்படிச் செய்ய முடியாது. இரண்டாவது, சகுன லட்சியம் எவ்வளவு பெரிதாயினும் அதைப் பின்பற்றும்படி மனிதர் போதிக்கப்படக் கூடாது.

5

கேள்வி:—இந்தியாவைப் புநருத்தாரணம் செய்யும் வேலையில் ஸ்ரீ ராமகிருஷ்ணசங்கம் எவ்வாறு ஈடுபடும்?

ஸ்வாமி :—இந்தச் சங்கத்திலிருந்து உலகை ஞானத்தினுல் முழுகடிக்கவல்ல ஒழுக்கம் சிறந்த மனிதர்கள் வெளியே செல்வார்கள். வேறு வழிகளிலும் புநர் உத்தாரணம் இதைப் பின் தொடரும். இவ்விதமாக, பிராஹ்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் உண்டு பண்ணப்படுவார்கள். சூத்திர ஜாதி இனிமேல் இராது. அவர்களுடைய வேலை யந்திரத்தினுல் செய்யப்படும். இந்தியாவுக்கு இப்பொழுது தேவையாயுள்ளது க்ஷத்திரிய சக்தி.

கேள்வி :— மனுஷ்ய ஜன்மம் எடுத்த பின்னர், கீழ்த்தரப்பட்ட ஜன்மங்கள் எடுப்பதும் சாத்தியமா ?

ஸ்வாமி :— ஆம். புநர் ஜன்மம் கர்மத்தைச் சார்ந்திருக்கிறது. மிருகத் தன்மையினது போன்ற கர்மத்தை யொருவன் குவித்துக் கொள்வானுனுல், அவன் அந்த ஜன்மத்துக்கு இழுக்கப்புடுவான்.

கேள்வி :— குண்டலினி உண்மையில் ஸ்தூல சரீரத்தில் உள்ளதா ?

ஸ்வாமி :—"யோகியினிடத்துள்ள தாமரைகள் என்று சொல்லப்படுபவைகள் மனுஷ்ய சரீரத்தில் உண்மையில் இல்லை" என்றும், ஆனுல், "யோக சக்திகளினுலே அவை மனிதனுள்ளே சிருஷ்டிக்கப்படுகின்றன" என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம்.

கேள்வி :— மனிதன் விக்ரகாராதனையின் மூலமாக முக்தி யடைய முடியுமா ?

ஸ்வாமி :— விக்ரகாராதனை நேர்முகத்தில் முக்தியை அளிக்காது. அதுவும் ஒருவிதத்தில் காரண மாகலாம்; வழியில் அநுகூல மாகலாம். விக்ரகாராதனையைக் கண்டிக்கக் கூடாது; ஏனென்றால், அது அநேகருக்கு மனிதனைப் பரிபூர்ண மாக்கவல்ல அத்வைதாநுபூதிக்கு மனத்தைத் தயார் பண்ணுகிறது.

கேள்வி :— ஒழுக்கத்துக்கு நமக்கு மிகமிக்க உயர்ந்த லக்ஷியம் யாது?

ஸ்வாமி ;— தியாகமே.

கேள்வி :— புத்தமதமானது எப்படிக் கெடுதல் குணங்களை விட்டுவிட்டுப் போனது ?

ஸ்வாமி :— பௌத்தர்கள் இந்தியாவிலே ஒவ்வொருவரையும் சந்நியாசியாக, அல்லது சந்யாசினியாக ஆக்க முயற்சித்தார்கள். நாம் ஒவ்வொருவரிட மிருந்தும் அப்படி எதிர்பார்க்க முடியாது. இதனால் சந்யாசிகளும் சந்யாசினிகளும் மெல்ல மெல்ல நழுவ ஆரம்பித்தார்கள். இன்னும், மதத்தின் பெயரால் திபேத்தியர்களுடையவும் இதர காட்டு மிராண்டு ஜாதியாருடையவும் வழக்கங்களை யவர்கள் பின்பற்றியதினாலும் உண்டாயிற்று. அவர்கள் அந்த இடங்களிலே பிரசாரகம் செய்யச் சென்றார்கள். அவர்களுடைய

ஊழல்களைச் சேர்த்துக்கொண்டு, பின்னர் இந்தியாவினுள் அவற்றை நுழைத்தார்கள்.

கேள்வி :— மாயை ஆதியந்தம் அற்றதா ?

ஸ்வாமி :— மாயை சமஷ்டியாக எடுத்தால், இருமுக மாகவும் நித்தியமானதாம்; ஆனால், வியஷ்டியாக எடுத்தால் அது அநித்தியமானதாம்.

கேள்வி :— பிரஹ்மமும் மாயையும் ஒரே சமயத்தில் அறியப்பட முடியாது. ஒன்றிலிருந்து மற்றது கிளம் பிற்று என்று இவற்றினுடைய அகண்டத் தன்மை எப்படி நிரூபிக்கப்பட முடியும் ?

ஸ்வாமி :— அது ஸ்வானுபூதியினாலேயே நிரூபிக்கப் பட முடியும். மனிதன் பிரஹ்மவஸ்துவை ஸ்வாநுபவத்தி லடைகிறபொழுது, அவனுக்கு மாயை கிடைக்காது ; எப் படி யென்றால், ரஜ்ஜுவினுடைய உண்மைத் தன்மை தெரிந்துவிட்டால், சர்ப்பம் என்ற பிரமை நீங்கிவிடுகிறது போல.

கேள்வி :—மாயை யென்பது என்ன ?

ஸ்வாமி :—ஒரே வஸ்துதான் உண்டு. அதை ஜட மென்றோ, அல்லது சக்தியென்றோ, எப் பெயரிட்டு வேண்டு மானாலும் கூப்பிடுங்கள். ஒன்றை மற்றதினின்றும் விலக்கி நினைப்பது கஷ்டமாம்; அல்லது அசாத்தியமாம். இது தான் மாயை, அல்லது அஞ்ஞானம்.

கேள்வி :—முக்தியென்றால் என்ன?

ஸ்வாமி :—முக்தியென்றால் பரிபூர்ண விடுதலை—நன்மையும் தீமையுமாகிற பந்தங்களிலிருந்து விடுதலை. பொற்சங்கிலியும் இருப்புச் சங்கிலிபோல ஒரு சங்கிலியே. காலில் தைத்துள்ள ஒரு முள்ளைப் பிடுங்குவதற்கு இன்னொரு முள் வேண்டியிருக்கிறதென்றும், முள் எடுத்தாய்விட்டால் இரண்டும் எறியப்பட்டு விடுகின்றனவென்றும் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம். அதுபோலவே, தீய வாசனைகள் நல்ல வாசனைகளினால் எதிர்க்கப்படவேண்டும். ஆனால், அதன் பின்னர் நல்ல வாசனைகளும் ஜயிக்கப்படவேண்டும்.

கேள்வி :—ஈச்வர கிருபையில்லாமல் முக்தி கிடைக்குமா?

ஸ்வாமி :—முக்திக்கும் ஈச்வரனுக்கும் சம்பந்தமில்லை முக்தி முன்னமேயே உள்ளது.

கேள்வி :—நம்மில் உள்ள ஆத்மா: சரீரம் முதலியவற்றிலிருந்து உண்டாகவில்லையென்பதற்குப் பிரமாணமென்ன?

ஸ்வாமி :—“அகம்” ‘அநக’த்தைப்போலவே சரீரம், மனம் முதலியவற்றிலிருந்து உற்பத்தியானதே. உண்மையான ஆத்மா உள்ளது என்பதற்கு ஒரே பிரமாணம் யாதென்றால், ஸ்வானுபூதியே.

கேள்வி :—யார் உண்மையான ஞானி? யார் உண்மையான பக்தன்?

ஸ்வாமி :—எவனுடைய ஹிருதயத்தினுள்ளே அன்பு மிகமிக ஆழ்ந்து இருக்கிறதோ, அதே சமயத்தில் எவனொருவன் தனது பகிர்முகமான சம்பந்தங்களில் அத்வைதத்தை அனுபவத்தில் தரிசிக்கிருனோ அவனே உண்மையான ஞானி. எவன் பரமாத்மாவுடன் தனது ஜீவாத்மாவும் ஒன்றென்று அநுபவத்தில் அறிந்துகொண்டு, இவ்விதமாக, உள்ளே உண்மையான ஞானமுடையவனுய் எல்லோருக்கும் இரங்கி, எல்லோரையும் நேசிக்கிருனோ, அவனே உண்மையான பக்தன். ஞானம், பக்தி இவையிரண்டில், ஒன்றை யாதரித்து மற்றதை தூஷிக்கிறவன் ஞானியாயும் இருக்கமுடியாது, பக்தனுயு மிருக்கமுடியாது; ஆனுல், அவன் ஒரு திருடனும் மோசக்காரனுமாம்.

கேள்வி :—மனிதன் என் ஈச்வரனுக்குத் தொண்டு செய்யவேண்டும்?

ஸ்வாமி :— ஈச்வரன் என்று ஒன்று இருக்கிறதென்று நீ ஒருதரம் ஒப்புக்கொண்டுவிட்டால், அவருக்குத் தொண்டு செய்வதற்கு எண்ணற்ற சந்தர்ப்பங்கள் உனக்குக் கிடைக்கின்றன. ஈச்வர சேவை யென்ருல், சாஸ்திரப் பிரமாணங்களெல்லாவற்றின்படிக்கும், ஸ்மரணமேயாம். ஈச்வரன் இருக்கிருரென்று நீ நம்பினுல், உனது

வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும், நீ அவரைப்பற்றி ஞாபகப்படுத்தப்படுவாய்.

கேள்வி :—மாயாவாதமானது அத்வைத வாதத்திலிருந்து வேறானதா ?

ஸ்வாமி :—இல்லை. அவை ஒன்றேபாம். மாயாவாதத்தைத் தவிர, அத்வைத வாதத்துக்கு வேறு நியாயமே யில்லை.

கேள்வி :—அகண்ட வஸ்துவாகிற ஈச்வரன் மனித வடிவத்தில் கட்டுப்படுவது எப்படி சாத்தியம் ?

ஸ்வாமி :—ஈச்வரன் அகண்டமானவர் என்பது உண்மைதான்; ஆனால், நீ தெரிந்துகொள்கின்ற பொருளில் அன்று. பெரிது என்ற ஜடப்பொருளுடன் நீ அகண்டம் என்ற கொள்கையைக் குழப்பிக்கொண்டிருக்கிறாய். 'ஈச்வரன் மனிதவடிவ மெடுக்க முடியாது' என்று நீ கூறுகிறபொழுது, ஒரு சிறிய சுற்றளவுக்குள் மிகமிகப் பெரிய வடிவத்தை நுழைத்து அடக்கிவைக்க முடியாதென்று நீ தெரிந்துகொண்டிருக்கிறாய். ஈச்வரனுடைய அகண்டத் தன்மை தனித்த ஆத்ம வஸ்துவினுடைய எல்லையற்ற தன்மையைக் குறிப்பிடுகிறது; ஆகையால், மனுஷ்ய வடிவத்தில் அது வெளியாவதினால் கொஞ்சமும் பாதிக்கப்படுகிறதில்லை.

கேள்வி :—சிலர், "முதலில் சித்தனாய்விடு; பின்னர் தான் நீ கர்மத்துக்குப் பாத்தியதை யுடையவனாகிறாய்"

என்று சொல்கிறார்கள்; ஆனால், வேறு சிலர், "மனிதன் ஆதியிலிருந்தே பிறருக்காக உழைக்கவேண்டும்" என்று சொல்கிறார்கள். இந்தக் கொள்கைகளை எப்படி ஒற்றுமைப் படுத்த முடியும் ?

ஸ்வாமிகள்:—நீ ஒன்றை மற்றதுடன் குழப்புகிறாய். கர்மமென்றால் மனுஷ்யவர்க்கத்துக்குஊழியம் அல்லது பிரசாரகம் என்று பொருள். உண்மையான பிரசாரகத்தில், சித்த புருஷனுக்குத் தவிர, வேறு எவருக்குமே பாத்தியதை யில்லை யென்பதில் சந்தேக மில்லை. ஆனால், ஸேவை செய்வதற்கு எல்லோருக்கும் பாத்தியதை யுண்டு ; அது மாத்திரமன்று; ஆனால், ஒவ்வொருவனும் பிறரிடமிருந்து ஸேவையை ஏற்றுக்கொண்டிருக்கும் வரையில், பிறருக்கு ஸேவை செய்வதற்குக் கடமைப்பட்டவனாகிறான்.

VI

கேள்வி :—நல்லது, ஸ்வாமி! மேனாட்டிலே தங்களுக்கு எத்தனை சிஷ்யர்கள் இருக்கிறார்கள்?

ஸ்வாமி :—அநேகர்.

கேள்வி :—இரண்டு அல்லது மூவாயிரம் இருக்குமா ?

ஸ்வாமி :—அதனிலும் அதிகமாக இருக்கலாம்.

கேள்வி :—அவர்க ளெல்லோரும் தங்களால் மந்திரோபதேசம் செய்யப்பட்டிருக்கிறார்களா?

ஸ்வாமி :—ஆம்.

கேள்வி :—பிரணவத்தை யுச்சரிபதற்கு அவர்களுக்குத் தாங்கள் அநுமதி கொடுத்தீர்களா ?

ஸ்வாமி :—ஆம்.

கேள்வி :—மகராஜ் ! எப்படி அனுமதி கொடுத்தீர்கள்? சூத்திரர்களுக்குப் பிரணவத்துக்கு அதிகாரம் இல்லை யென்றும், பிராஹ்மணர்களைத் தவிர வேறெவருக்குமே பிரணவம் உச்சரிப்பதற்கு அதிகாரம் இல்லை யென்றும் சொல்கிறார்களே. இன்னும் மேனாட்டினர் மிலேச்சர்கள், சூத்ரர்கள் கூட அல்லரே.

ஸ்வாமி :— என்னிடம் உபதேசம் பெற்றுள்ளவர்கள் பிராஹ்மணர்க ளல்லரென்று உனக்கு எப்படித் தெரியும்?

கேள்வி :— யவனர்களுடையவும மிலேச்சர்களுடையவும் தேசங்களிலே, இந்தியாவுக்கு வெளியே தங்களுக்குப் பிராஹ்மணர்கள் எப்படிக் கிடைக்க முடியும்?

ஸ்வாமி :— எனது சிஷ்யர்க ளெல்லோரும் பிராஹ்மணர்களே. பிராஹ்மணர்களைத் தவிர, வேறெவருக்கும் பிரணவத்துக்கு அதிகாரம் கிடையாதென்று சொல்லும் வார்த்தைகளின் உண்மையை நான் நன்றாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், பிராஹ்மணனுடைய புத்திரன் எப்பொழுதும் பிராஹ்மணனா யிருக்க வேண்டிய அவசிய மில்லை; அவன் பிராஹ்மணனா யிருக்கலாமாயினும், அவன் பிராஹ்

மணுகாமலும் இருக்கலாம். "பாக்—பஜாரிலுள்ள அகோர சக்ரவர்த்தியின் மருமகன் சக்கிலியனுகி, தான் புகுந்து கொண்ட ஜாதியின் இழி தொழில்களையெல்லாம் உண்மையில் செய்வது வழக்கம் என்று நீ கேள்விப்பட்டதில்லையா? அவன் பிராஹ்மணனுடைய புத்திர னல்லனு?

பிராஹ்மண ஜாதியும், பிராஹ்மண்ய குணங்களும் வேறு விஷயங்களாம். இந்தியாவிலே ஒருவன் தன்னுடைய ஜாதியினுல் பிராஹ்மணனெனக் கருதப்படுகிருன். ஆனுல், மேனுட்டிலே, ஒருவன் தனது பிராஹ்மண்ய குணங்களால் அப்படி யறியப்பட வேண்டும். சத்துவம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணங்கள் இருக்கின்றன போல, மனிதனை பிராஹ்மணனென்றும், க்ஷத்திரியனென்றும், வைசியனென்றும், சூத்ரனென்றும் காண்பிக்கின்ற குணங்கள் உண்டு. பிராஹ்மணன் அல்லது க்ஷத்திரியனுயுள்ள குணங்கள் தேசத்திலிருந்து அழிந்துபோய்க்கொண்டிருக்கின்றன. ஆனுல், மேனுட்டிலே அவர்கள் இப்பொழுது க்ஷத்திரியத் தன்மையை அடைந்திருக்கிருர்கள்; அதிலிருந்து அடுத்தபடி பிராஹ்மணத் தன்மை; அதற்கேற்ற லக்ஷணமுடையவர்களும் அநேகர் இருக்கிருர்கள்.

கேள்வி:— அப்படியானுல், இயற்கையிலே சாத்வீகர்களாயுள்ளவர்களை நீங்கள் பிராஹ்மணர்கள் என்று சொல்கிறீர்கள்?

ஸ்வாமி :— ஆம். சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களில் ஏதேனும் ஒன்று ஒவ்வொரு மனிதனிடத்தும் ஏற்றத் தாழ்வா யிருப்பது போல, பிராஹ்மணன், க்ஷத்திரியன், வைசியன், அல்லது சூத்ரன் இவர்களுக்கு வேண்டிய குணங்கள் ஒவ்வொரு மனிதனுள்ளும் ஏற்றத் தாழ்வாக இருக்கின்றன. ஆனால், சில சமயங்களில் இந்தக் குணங்களில் ஏதேனும் ஒன்று பலவித அளவுகளில் அவனிடத்தில் பிரதானமாகக் கிளம்பி, அப்படியே வெளிப்படுகின்றது. திருஷ்டாந்தமாக, ஒரு மனிதனை அவனுடைய வெவ்வேறு தொழில்களில் எடுத்துக்கொள்வோம்; அவன் இன்னொருவனுக்குச் சம்பளத்துக்காக வேலை செய்கிறபொழுது, அவன் சூத்ரத் தன்மையில் இருக்கிறான்; அவன், தானே, லாபத்தை யுத்தேசித்து ஏதாவது வியாபாரம் நடத்துகிறபொழுது அவன் வைசியனாகிறான்; அவன் தப்பிதங்களைத் திருத்துவதற்குப் போர் புரிகிறபொழுது; க்ஷத்திரியனுடைய குணங்கள் அவனிடத்திலே வெளிப்படுகின்றன; அவன் ஈச்வரனைத் தியானிக்கிறபொழுது, அல்லது அவரைப்பற்றிய சம்பாஷணையிலே காலத்தைக் கழிக்கிறபொழுது, அவன் பிராஹ்மணனாகிறான். ஒருவன் ஒரு ஜாதியிலிருந்து வேறு ஜாதிக்கு மாறுதலடைவது சாத்தியமாதல் இயற்கையே. இல்லையேல், விச்வாமித்ரர் எப்படி பிராஹ்மணரானார்? பரசுராமர் எப்படி க்ஷத்திரியரானார்?

கேள்வி:—தாங்கள் சொல்வது மிகவும் சரியாகத் தோன்றுகிறது; ஆனால், அப்படியானால், நமது பண்டிதர்களும் குல குருக்களும் அதே மாதிரி எங்களுக்கு ஏன் போதிக்கிறதில்லை?

ஸ்வாமி:—நமது தேசத்திலேயுள்ள பெருங் கெடுதல்களுள் அது ஒன்று. ஆனால், இப்பொழுது அந்த விஷயம் இருக்கட்டும்.

இப்பொழுது ஸ்வாமிகள் மேனாட்டாருடைய தீவிரதர வைராக்கிய லக்ஷணத்தையும், அவர்கள் மதாநுஷ்டானத்தில் இறங்கிவிட்டால் அவர்களுக்குள்ள சிரத்தையையும்பற்றிப் புகழ்ந்து பேசினார்.

சிஷ்யன்:—மகராஜ்! உண்மைதான். அவர்கள் மதாநுஷ்டானம் செய்ய ஆரம்பித்துவிட்டால், அவர்களுடைய மனோசக்திகளும் வெகுசீக்கிரத்திலே அபிவிருத்தியடைகின்றனவென்று நான் கேட்டிருக்கிறேன். நான்கு மாதங்களே யநுஷ்டிக்கப்பட்ட சாதனங்களின் மூலமாக ஒருவருக்கு ஆத்ம சக்திகள் அதிகம் அபிவிருத்தி யடைந்தன வென்று கூறி அவர் தமது குருவாகிய ஸ்வாமி சாரதாநந்தருக்கு எழுதியதொரு கடிதத்தை நான் பார்த்தேன்.

ஸ்வாமி :—இப்பொழுது தெரிகிறதா ? இப்பொழுது, மேனாட்டிலே பிராஹ்மணர்கள் இருக்கிறார்களா? இல்லையா. என்பது உனக்குத் தெரிகிறது? இங்கும் பிராஹ்மணர்கள் இருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் தங்களுடைய பயங்கர

மான கொடுமையினால் தேசத்தை யழியும் ஸ்திதிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதன் பலனாக, அவர்களிடம் இயற்கையாயுள்ளது மெல்லமெல்ல மறைந்து போய்க் கொண்டிருக்கிறது. குரு, சிஷ்யனுக்கு ஒரு மந்திரத்தை உபதேசிக்கிறார். ஆனால், அது இப்பொழுது அவருக்கு ஒரு வியாபாரம் ஆய்விட்டது. இன்னும், இக்காலத்தில் குருவுக்கும் சிஷ்யனுக்கும் உள்ள சம்பந்தம் என்ன ஆச்சரியமாயிருக்கிறது. ஒருவேளை குருவுக்கு வீட்டிலே சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லை. அவனுடைய மனைவி அவரிடம் சமாசாரத்தைத் தெரிவித்து, "நாதா! தயவு செய்து தங்களுடைய சிஷ்யர்களிடம் மறுபடியும் செல்லுங்கள்! தாங்கள் நாள் முழுதும் சூதாடினால், அது நம்மைப் பசியிலிருந்து ரக்ஷிக்குமா?" என்று கூறுகிறாள். பிராஹ்மணன் மறுமொழியாக, "நல்லது, நாளைக் காலையில் எனக்கு ஞாபகப் படுத்து! என்னுடைய சிஷ்யனாகிய இன்னானுக்கு இப்பொழுது அதிர்ஷ்டம் அடிக்கிறதென்று கேள்விப்படுகிறேன்; இன்னும் நான் நெடுங்காலமாய் அவனிடம் செல்லவில்லை," என்று கூறுகின்றான். வங்காளத்திலே உங்களுடைய குலகுரு முறை வந்திருக்கும் ஸ்திதி இது தான்! மேனாட்டிலே வைதீகக் கடுமை இன்னும் அவ்வளவு கேவலத்தன்மை யடையவில்லை; மொத்தமாகப் பார்த்தால், அது உங்களுடையதைப் பார்க்கிலும் மேம்பட்டதே.

——:(o):——

VII

ஒருநாள் ஸ்வாமிகள் குரு கோவிந்த ஸிங்கைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபொழுது, ஒரு சிஷ்யன் "ஸ்வாமி! குரு கோவிந்தர் தமது மதத்தின் எல்லைக்குள் ஹிந்துக்களையும் முகம்மதியர்களையும் ஒற்றுமைப்படுத்தி இருவரையும் ஒரே நோக்கத்தினிடத்து இட்டுச் செல்ல முடிந்தது மிகவும் ஆச்சர்யமான விஷயமே," என்று கூறினான்.

ஸ்வாமி:—பொதுவான நன்மையாம் ஒரு பந்தம் இருந்தாலொழிய, மனிதர்களை யொருபொழுதும் ஒற்றுமைப் படுத்த முடியாது. அவர்களுடைய நன்மைகள் ஒன்றாயிருந்தாலொழிய, கூட்டங்கள், சங்கங்கள், பிரசங்கங்கள் இவற்றை மாத்திரம் நடத்துவதினால், நீ யொருபொழுதும் ஜனங்களை யொற்றுமைப்படுத்த முடியாது. குரு கோவிந்தர், தமது காலத்திலிருந்த மனிதர்கள், அவர்கள் ஹிந்துக்களாயிருந்தாலும் சரி, முஸன்மான்களாயிருந்தாலும் சரி, அநியாயமும் அக்கிரமும் மிகுந்த ஒரு அரசாங்கத்தின் கீழ் வசித்து வந்தார்கள் என்பதை எங்கும் தெரியப் படுத்தினார். அது பொது நலமெதையும் உண்டு பண்ணவில்லை; அவர் அதைப் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டினார். அவ்வளவுதான். ஆகையால், ஹிந்துக்களும் முஸல்மான்களும் அவரைப் பின்பற்றினார்கள். அவர் சக்தியைப் பெரிதும் உபாசித்துவந்தார். ஆம், இந்திய சரித்திரத்

திலே, இத்தகைய திருஷ்டாந்தம் உண்மையில் மிகவும் அருமைதான்.

பின்னர்ச் சிறிது நேரத்தில் பேச்சு வேறு விஷயத்துக்கு மாறிவிட்டது.

ஸ்வாமிகள் :—மனத்தை ஓரளவு ஏகாக்ரப்படுத்தினால், அற்புத சக்திகளை யடைவது சாத்தியமே. (சிஷ்யரை நோக்கி) நல்லது; பிறருடைய நினைப்பைத் தெரிந்துகொள்ளும் முறையை நீ கற்றுக்கொள்ள விரும்புகிறாயா ?

சிஷ்யன் :—ஸ்வாமி! அதனால் எனக்கு என்ன பயன்?

ஸ்வாமி :—என்! நீ பிறருடைய மனத்தில் நிகழும் நினைப்புக்களை யறிய வல்லவனாவாய்.

சிஷ்யன் :—நான் பிரஹ்ம ஞானம் அடைவதற்கு அது அனுகூலமா யிருக்குமா ?

ஸ்வாமி :—அணுவளவும் அனுகூலமா யிராது.

சிஷ்யன் :—அப்படியானால், அந்த சாஸ்திரத்தை நான் கற்றுக்கொள்ளவேண்டிய அவசிய மில்லை. ஆனால், ஸ்வாமி! அத்தகைய மனோசக்திகளின் வெளிப்பாட்டைப்பற்றித் தாங்களே நேரில் கண்டுள்ளவற்றைப்பற்றிக் கேட்க நான் மிகுந்த ஆவலுடையவனாயிருக்கிறேன்.

ஸ்வாமி :—ஒரு சமயம் நான் ஹிமோத்கிரியிலே யாத்திரை செய்துகொண்டிருந்த பொழுது

ஒருநாள் இரவு, மலை ஜனங்கள் நிறைந்த ஒரு கிராமத்தில் நான் தங்கவேண்டி வந்தது. அஸ்தமித்துச் சிறிது நேரம் கழிந்த பின்னர் அந்தக் கிராமத்திலே உடுக்குகள் அடிக்கின்ற சப்தத்தைக் கேட்டு, நான் அது என்னவென்று விசாரிக்க, அந்தக் கிராமத்தில் ஒருவனுக்குப் பிசாசு பிடித்திருப்பதாகத் தெரியவந்தது. நான் தங்கியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரன் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதற் கிணங்கியும், எனக்கே உண்டான ஆசையைத் திருப்தி செய்துகொள்ளும் பொருட்டும், உண்மையில் விஷயம் என்னவென்று பார்ப்பதற்கு நாங்கள் சென்றோம். அந்த இடத்துக்குப் போனவுடனே, ஒரு பெருங் கூட்டம் ஜனங்கள் இருக்கக் கண்டோம். நீண்ட, புதர்போன்ற தாடியை உடைய ஒரு பெரிய மனிதன் எனக்குக் காண்பிக்கப்பட்டான். அந்த மனிதனுக்குத்தான் பிசாசு பிடித்திருக்கிறதென்று என்னிடம் சொல்லப்பட்டது. அந்த மனிதனுக்கருகிலே, நெருப்பில் ஒரு கோடாரி காய்ச்சப்பட்டுக்கொண்டிருப்பதை நான் பார்த்தேன். சிறிது நேரத்துக்குப் பின்னர், பழுக்கக் காய்ந்த அது எடுக்கப்பட்டு, அவனுடைய சரீரத்தின் பல பாகங்களிலும் அவனுடைய ரோமத்திலும் வைக்கப்பட்டதைப் பார்த்தேன்; ஆனால், என்ன ஆச்சரியம்! பழுக்கக் காய்ந்த கோடரியினால் சூடிழுக்கப் பெற்ற அவனுடைய சரீரத்தின் எந்தப் பாகமும் அல்லது ரோமமும் எரிக்கக் காணப்பட வில்லை; அவனுடைய முகத்திலே நோவினு

னுடைய அடையாளமே யில்லை! நான் ஆச்சரியத்தினால் மௌனமுற்று அப்படியே நின்றுவிட்டேன். இதற்குள்ளாக, அந்தக் கிராமத்துத் தலைவன் என்னிடம் வந்து, "மகராஜ்! ஜீவகாருண்ய மேலீட்டால், இந்த மனிதனைப் பிடித்திருக்கும் பிசாசை யோட்டுங்கள்!" என்று கூறினான். நான் ஒரு தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டதாக உணர்ந்தேன். ஏதேனும் செய்யவேண்டுமென்று தூண்டப்பட்டு, அந்தப் பிசாசு பிடித்த மனிதனருகில் செல்லவேண்டி வந்தது. அங்குப் போனதும், 'அந்தக் கோடரியை நன்றாகப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும்' என்று பலமானதொரு ஆசை உண்டாயிற்று; ஆனால், நான் அதைத் தொட்டதுதான் தாமதம். அந்த வஸ்துவானது கறுப்பு நிறமடையும் அளவு குளிர்ச்சி பெற்றுவிட்டதாயினும், எனது விரல்கள் சுடுபட்டன; மனத்தின் அமைதி கெட்டது; கோடரிக் காட்சியைப்பற்றி நான் கொண்ட கொள்கைகளெல்லாம் எனது மனத்திலிருந்து ஓட்டமெடுத்தன; ஆயினும், எரிச்சல் பொறுக்க முடியாதிருந்தபோதிலும், நான் அந்த மனிதனுடைய தலையில் எனது கையை வைத்துச் சிறிது நேரம் ஜபம் செய்தேன். 10 அல்லது 12 நிமிஷங்களில் அந்த மனிதன் புத்தி சுவாதீனமடைந்ததைப் பார்க்க, ஆச்சரியமாயிருந்தது. அப்பொழுது ஆ! கிராமத்தார் என்னிடம் காட்டிய மரியாதைக்கு ஓரளவுமுண்டோ? நான் ஒரு ஆச்சரியமான புருஷனெனக் கருதப்

பட்டேன். ஆனால், ஆயினும், அந்த விஷயம் முழுதுக்கும் எனக்குத் தலையும் தெரியவில்லை, காலும் தெரியவில்லை. ஆகையால், ஒரு வார்த்தையும் சொல்லாமல், நான் இறங்கி யிருந்த வீட்டுக்காரனுடன் அவனுடைய குடிசைக்குத் திரும்பி வந்தேன். சுமார் நடு நிசி நான் படுக்கச் சென் றேன். ஆனால், கையிலே நெருப்புச் சுட்ட நோவு ஒரு பக்கம், அந்த விஷயத்தை ஆய்ந்தறிய முடியாத குழப்ப மொரு பக்கம்; நான் அன்றிரவு உறங்கவே முடியவில்லை. உயிருட னுள்ள மனுஷ்ய சதையைச் சுடுவதற்கு பழுக்கக் காய்ந்த கோடரியால் முடியாது போனதை நினைத்து, "ஏ, ஹோரேஷியோ! உனது தத்துவ சாஸ்திரத்தில் கனவினால் கூட காண முடியாத அநேக விஷயங்கள் வானத்திலும் பூமி யிலும் உள்ளன" என்ற வாக்கியம் அடிக்கடி ஞாபகத்துக்கு வந்தது.

சிஷ்யன் :—ஆனால், ஸ்வாமி! இப்பொழுதாவது அது எப்படி யென்று சொல்ல முடியுமா ?

ஸ்வாமி :—முடியாது. இப்பொழுது பேசிக்கொண் டிருக்கையில் அந்த விஷயம் ஞாபகத்துக்கு வந்தது; ஆகையால், நான் அதை உன்னிடம் சொன்னேன். ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தப் பிரகிருதியாதீத சக்திகளை இகழ்ந்து கூறுவது வழக்கம்; மனமானது இந்தச் சக்திகளை வெளிப்படுத்துவதிலே திருப்பப்பட்டுவிட்டால், மனிதன்

உத்கிருஷ்டமான உண்மைப்பொருளை யடைய முடியா தென்பது அவருடைய உபதேசம். கிருகஸ்தர்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. சாதுக்களிலும் நூற்றுக்குத் தொண்ணூறு பெயர்கள் இந்தச் சக்திகளை உபாசிப்பவர்களாகவே காணப்படுகிறார்க ளென்னும்படி, மனுஷ்ய மனமானது அவ்வளவு பலஹீனமா யிருக்கிறது. மேனாட்டிலே ஜனங்கள் இத்தகைய சத்திகளைப் பார்ப்பார்களானால், மெய்மறந்துபோய்விடுவார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கருணையினால், "இந்தச் சக்திகள் உண்மையான ஞானநுபூதிக்கு இடையூறுகளாம்" என்று சொல்லி, அவற்றின் தீமையை நாம் நன்கு அறியும்படி செய்திருக்கிறா ராதலினாலே, அவற்றின் உண்மையான மதிப்பில் அவற்றைக் கருதுவதற்கு நாம் வல்லவர்களாயிருக்கிறோம். அந்தக் காரணத்தினாலேயே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் குழந்தைகள் அவற்றினிடத்துக் கவலை செலுத்துகிறதில்லை யென்பது உனக்குத் தெரியாதா ?

இந்தச் சமயத்திலே ஸ்வாமி யோகாநந்தர் பின் வருமாறு கூறினார் :—"நல்லது, சென்னையிலே தாங்கள் அந்த மந்திரவாதியைச் சந்தித்த சந்தர்ப்பத்தைப்பற்றிய விஷயத்தை ஏன் தாங்கள் நமது பாங்காலு (இவர் ஸ்வாமிகளின் பிரிய சிஷ்யர்களில் ஒருவர்) க்குச் சொல்லவில்லை ?

ஸ்வாமிகள் :—ஒரு சமயத்தில் பாபு மன்மத நாதருடைய வீட்டில் நான் தங்கியிருந்தபொழுது, ஒரு

நாள் இரவு, எனது தாய் இறந்து விட்டதாகக் கனவு கண்டேன். எனது மனம் மிகவும் சஞ்சலம் அடைந்தது. வீட்டிலுள்ள எவருக்குமே கடிதம் எழுதவில்லையென்று சொல்ல வேண்டியதில்லை; ஏனென்றால், அந் நாட்களில் நமது மடத்துக்குக்கூட நான் கடிதம் எழுதும் வழக்கமில்லை. மன்மதநாதரிடம் இந்தக் கனவைத் தெரிவிக்கவே, அவர் அந்த விஷயத்தைப்பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளுமாறு, கல்கத்தாவுக்குஒருதந்தியனுப்பினர். ஏனென்றால், ஒரு பக்கத்தில், இந்தக் கனவு எனது மனத்தைக் கலக்கி விட்டது; மறு பக்கத்திலே, நமது சென்னை நண்பர்கள் சகல ஏற்பாடுகளையும் தயார் செய்துகொண்டு, உடனே நான் அமெரிக்காவுக்குப் புறப்படவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். எனது தாயைப்பற்றிய சமாச்சாரம் ஏதேனும் தெரிவதற்கு முன், புறப்படுவதற்கு நான் மனமில்லாதவனாயிருந்தேன். ஆகையால், எனது மனத்தின் இந்த நிலைமையைத் தெரிந்துகொண்ட மன்மதர், பட்டணத்துக்குச் சிறிது தூரத்திலே பிசாசுகளை யடக்கியாளும் சக்தியுடையவனாய், மனிதனுடைய முற்கால பிற்காலத்தைச் சொல்லக் கூடியவனாய் ஒருவன் இருக்கிறானென்றும், அவனிடம்போய்க்கேட்கலாமென்றும் கூறினர். ஆகையால், மன்மதருடைய வேண்டுகோளுக் கிணங்கியும், எனது மனக்கவலையை நீக்கிக்கொள்ளும்பொருட்டும், நான் இந்த மனிதனிடம் செல்ல ஒப்புக்கொண்டேன். நாங்கள்

நான்கு பெயர்கள்—மன்மதரும், அளசிங்கரும், நானும் இன்னொருவரும்—கொஞ்ச தூரம் ரெயிலிலும் கொஞ்ச தூரம் கால் நடையிலுமாகச் சென்று—அந்த இடம் போய்ச் சேர்ந்தோம். நாங்கள் அங்குப் பார்த்தது என்னவென்றால், கோர ரூபத்துடனே, கூன் விழுந்து, கன்னங்கரே லென்று ஒரு மனிதன் ஸ்மசானத்தி னருகே யுட்கார்ந்துகொண் டிருந்தான். அவனுடன் இருந்தவர்கள், "இவன்தான் பைசாசங்களை யடக்கி யாளும் சக்தி வாய்ந்தவன்" என்று சென்னைப்பாஷையில் ஏதோ சொன்னார்கள். முதலில் அந்த மனிதன் எங்களைப்பற்றிக் கவனிக்கவேயில்லை. பின்னர் நாங் கள் அந்த இடத்திலிருந்து புறப்படவிருந்த தருணத்தில், அவன் எங்களைக் கொஞ்சம் காத்திருக்கும்படி வேண்டிக் கொண்டான். நமது அளசிங்கர் துவிபாஷி வேலை வகித்து, எங்களுக்கு அந்த வேண்டுகோளைத் தெரியப்படுத்தினார். பின்னர், அவன் ஒரு எழுதுகோ லெடுத்து, ஏதோ வடிவங் களை எழுத ஆரம்பித்தான். உடனே அவன் தன் மனத்தை ஏகாக்ரப்படுத்தி யடங்கியிருக்கக் கண்டேன். பின்னர், அவன் எனது பெயர், எனது பாரம்பரை, எனது முன்னோர் களின் வம்சபாரம்பரையின் சரித்திரம் இவற்றைச் சொல்ல ஆரம்பித்தான்; இன்னும், எனது சஞ்சாரங்களி லெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணர் கூடவே யிருந்து வருகிறாரென்று சொல்லி, எனது தாயாரைப்பற்றி நல்ல சமாச்சாரத்தை யும் கூறினான். மதத்தைப் போதிப்பதற்கு நான் வெகு

சீக்கிரத்தில் தூரதேசங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கு மென்றும் சொன்னான். இவ்விதமாக, எனது தாயைப்பற்றி நல்ல சமாச்சாரம் கேட்டுக்கொண்டு, நாங்கள் எல்லோரும் திரும்பவும் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தோம் ; வந்து சேர்ந்த பின்னர், அங்கே, எனது தாய் சௌக்கியமாயிருக் கிறதாகக் கல்கத்தாவிலிருந்து தந்தி கிடைத்தது.

ஸ்வாமிகள் யோகாநந்த ஸ்வாமியை நோக்கி, "அந்த மனிதன் சொன்ன ஒவ்வொன்றும் அணுவளவும் பிசகாமல் அப்படியே நடைபெற்றது" என்று சொன்னார்.

ஸ்வாமி யோகாநந்தர் மறுமொழியாக, "அதற்கு முன் னால் நீங்கள் இவற்றை நம்புவதில்லை யாதலினால், இந்த அநு பவம் தங்களுக்கு அவசியமாயிருந்தது," என்று கூறினார்.

ஸ்வாமி:—நல்லது. நான் பிரத்தியட்சப் பிரமாணத்தின் மேலல்லாது, எதையும் நம்புவதற்கு முட்டாள் அல்லன். மாயையாம் இந்தப்பிரதேசத்திலே வந்த பின்னர், ஓ, இந்த பெரிய ஜாலவித்தையாகிய பிரபஞ்சத்திலே எத்தனை ஜால ரகஸ்யங்களை நான் பார்த்திருக்கிறேன் ! மாயை ; அதெல் லாம் மாயை ! ஆ! ஆ! இன்று இவ்வளவு நேரம் என்ன அற்பப்பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிறோம்! இடைவிடாது பைசாசங்களைப்பற்றி நினைப்பதினால், மனிதர் பைசாசங் களே யாய்விடுகிறார்கள்! ஆனால், எவனொருவன் இரவும் பகலும், தெரிந்தோ அல்லது தெரியாமலோ " நான் நித்தி யன், பரிசுத்தன், முக்தன், ஸ்வயம்ஜோதியாத்மா"—என்று

சொல்லிக்கொண்டிருக்கிறானோ,—அவன் உண்மையில் பிரஹ்ம திருஷ்டா ஆகிவிடுகிறான்.

ஸ்வாமிகள் இப்படிச் சொல்லிவிட்டு, பிரியத்துடனே சிஷ்யன் முகமாகத் திரும்பி, "அந்த அற்ப முட்டாள்தன மெல்லாம் உனது மனத்திலே நுழைய விடாதே. எப்பொழுதும் உண்மையையும் உண்மையல்லாததையும் விவேகத்தினால் விசாரணை செய்து பார்த்துக்கொள்! ஆத்மானுபூதி யடைதற்குள்ள முயற்சியிலேயே உனது கவனம் முழுதும் செல்லட்டும்! இந்த ஆத்மஞானத்தினும் உயர்ந்தது ஒன்றுமே யில்லை; மற்றதெல்லாம் மாயையே; வெறும் செப்படி வித்தையே. ஆத்மா வொன்றே மாறுதலற்ற உண்மைப் பொருள். இதை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன்; அதனால்தான் நான் அதை உங்கள் எல்லோருக்கும் உபதேசிக்க முயல்கிறேன்.—இரண்டற்ற பிரஹ்ம வஸ்து ஒன்றே யுள்ளது; அநேகம் என்பது இல்லவேயில்லை

VIII

ஸ்வாமி:—சந்யாசத்தினுடைய உண்மையான நோக்கம் யாதெனில், "பரமோத்க்ருஷ்டமான முக்தியும் லோகோபகாரமுமேயாம். சந்யாச மில்லாமல் எவரும் உண்மையில் பிரஹ்ம ஞானியாக முடியாது"—இதுதான் வேதங்களும் வேதாந்தமும் பறையறைவது. "நாம் உலக வாழ்க்கையும் வாழ்வோம், பிரஹ்ம ஞானிகளாயு மிருப்

போம்'' என்று சொல்லுகிறவர்களுடைய வார்த்தைகளைக் கேட்காதீர்கள். சிற்றின்ப நாட்டமுடைய வேஷதாரிகள் முகஸ்துதியாகச் சொல்லிக்கொள்ளும் ஆறுதல் வார்த்தை யாம் அது. உலக போகங்களிடத்து அணுவளவேனும் இச்சையுள்ளவன், அற்பமேனும் ஆசையுள்ளவன், நீங்கள் நடக்கப் போகின்ற மார்க்கத்தைப்பற்றி நினைத்தால் பயந்து நடுங்கிவிடுவான். ஆகையால், தனக்கு ஒருவித ஆறுதல் அளித்துக்கொள்வதற்காக, அவன் போகத்தையும் தியாகத்தையும் ஒற்றுமைப்படுத்துவதென்ற அந்த அசாத்தியமான கொள்கையைப்பிரசாரகம் பண்ணுகிறான். அதெல்லாம் பித்தர்களுடைய உளறல்கள்; மனமுடைந்தவர்களின் மாயா வார்த்தைகள்; சாஸ்திரங்களுக்கு விரோதமான சோம்பேறிக் கொள்கைகள்; வேதங்களுக்கு விரோதமானவை. தியாக மில்லையேல் முக்தி யில்லை; தியாக மில்லாமல், ஈச்வரனிடத்துப் பரமோத்கிருஷ்டமான பக்தியை அடைய முடியாது. தியாகமே பதம்,—"நாந்ய பந்தா''—"வேறு வழி யில்லை.'' "ஆசையை நோக்கமாக உடைய எல்லாக் கர்மங்களையும் விட்டுவிடுவதே சந்யாசம்'' என்று பெரியோர்கள் அறிகிறார்கள்.

உலகக்கவலைகளாம் பந்தங்களினின்றும்நிவிருத்தித்துக் கொள்ளாமல் எவரும் முக்தி யடைகிறதில்லை. ஒருவர் உலக வாழ்க்கை வாழ்கிறார் என்ற விஷயமே, எதோ ஒரு ஆசைக்கு அவர் அடிமையாகி, அதனுடன் சேர்த்துக் கட்

டப்பட்டிருக்கிறார் என்பதை ருசுப்படுத்துகிறது. இல்லை யேல், அந்த வாழ்க்கையை அவர் ஏன் பற்றிக்கொள்ள வேண்டும்? அவர் காமத்துக்கு அல்லது காஞ்சனத்துக்கு, அந்தஸ்துக்கு அல்லது கீர்த்திக்கு, வித்தைக்கு அல்லது பாண்டித்யத்துக்கு அடிமையாயிருக்கிறார். இந்தப் பந்தத்தி லிருந்து நிவிருத்தித்துக்கொண்ட பின்னர், மனிதன் முக்தியாகிற மார்க்கத்திலே செல்ல முடியும். ஜனங்கள் எவ்வளவு உரக்க வேண்டுமானாலும் விவாதித்துக்கொள் ளட்டும்; இந்தப் பந்தங்களெல்லாம் விட்டுவிடப்பட்டா லொழிய, சந்யாச வாழ்க்கை யெடுத்துக் கொள்ளப்பட்டா லொழிய, எவருக்கும் ரக்ஷை கிடையாதென்று, பிரஹ்ம ஞானம் அடைதல் அசாத்திய மென்று, உள்ள நிச்சய ஞானம் எனக்கு இருக்கிறது.

சிஷ்யன்:—ஸ்வாமி! வெறுமே சந்யாச மெடுத்துக் கொண்டால் மாத்திரம், அது மனிதனை லக்ஷியத்தினிடம் இட்டுச் செல்லும் என்று தாங்கள் கூறுகிறீர்களா?

ஸ்வாமி:—லக்ஷியம் அடைவது, அல்லது அடையாது போய்விடுவது, இது அன்று இப்பொழுது நம்முன் உள்ள விஷயம். ஆனால், இந்தச் சம்சார சக்கரத்திலிருந்து நீ வெளியே வராதவரையில், ஆசையாகிற அடிமைத்தனம் உதறப்படாமலிருக்கும் வரையில், அதுவரையில் நீ பக்தி யையும் அடைய முடியாது, முக்தியையும் அடைய முடி யாது. பிரஹ்ம ஞானிக்கு, பிரகிருதியதீத சக்திகளோ

ஆதுரம் - நோய்

அல்லது செல்வமோ வெறும் அற்பங்களேயாம்.

சிஷ்யன் :—ஸ்வாமி ! சந்யாசத்துக்சென்று பிரத்தியேக காலமிருக்கிறதா? இன்னும் அதில் வெவ்வேறு விதங்களும் உண்டா ?

ஸ்வாமி :—சந்யாசவாழ்க்கைக்கென்று பிரத்தியேகமான காலம் இல்லை. சுருதி கூறுகிறது :—"தியாகபுத்தியுண்டான நிமிஷத்திலேயே, நீ சந்யாச மெடுத்துக் கொள்ள வேண்டும்." யோக வாசிஷ்டமும் பின் வருமாறு கூறுகிறது: ஜீவிதம் க்ஷணபங்குரமாயும் நிச்சய மல்லாததாயும் இருக்கிறதினாலே உனது வாலிபத்திலேயே நீ பக்தியில் சிரத்தை கொள்ளவேண்டும். ஏனென்றால், 'சரீரம் எப்பொழுது விழுந்துவிடலாம்' என்பது எவருக்குத் தெரியும்?" சாஸ்திரங்கள் நான்கு வித சந்யாசங்களைப்பற்றிக் கூறுவதாகக் காணப்படுகின்றன: (1) வித்வத் சந்யாசம், (2) விவிதிஷா சந்யாசம், (3) மர்க்கட சந்யாசம், (4) ஆதுர சந்யாசம். திடீரென்று உண்மையான தியாக எழுச்சி யுண்டாகி, அதன் பலனாக ஏற்படும் சந்யாசத்தின் மூலமாக உலகைத் துறந்து விடுதல், முந்திய ஜன்மத்திலிருந்தே அபிவிருத்தி யடைந்து வந்துள்ள பலமான சம்ஸ்காரங்கள் இருந்தாலொழிய ஒரு நாளும் சம்பவியாத ஒரு விஷயமாம். இதுதான் வித்வத் சந்யாச மெனப்படுவது. விவிதிஷா சந்யாச மென்பதென்னவென்றால் சாஸ்திர ஆராய்ச்சியின் மூலமாகவும் அநுஷ்டானத்தின் மூலமாகவும் ஆத்மஞானத்தை யடையவேண்டு

மென்று தீவிரதர இச்சைகொண்டு, ஸ்வாநுபவி யொருவ ரிடம் சென்று, அவரிடமிருந்து, அந்த முயற்சிகளுக்காகத் தன்னைத் தியஜித்துக்கொண்டு சந்யாசம் எடுத்துக்கொள்ளுத லாம். மர்க்கட சந்யாசமாவது யாதெனில், பந்துவி னுடைய மரணம் போன்ற உலகத்தின் அடிகளில் சில வற்றால், உலகுக்கு வெளியே தூரத்தப்பட்டு, சந்யாசம் எடுத்துக்கொள்வதாம்; இந்த விஷயத்திலே தியாக புத்தி நெடுநாட்கள் இருக்கிறதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதைப் பற்றி "இம்மாதிரி தியாகத்துடன், மனிதன் உள் நாட்டுக்கு ஓடி, அங்கே ஒரு நல்ல உத்தியோகம் அடையும்படி நேரிடு கிறது; பின்னர், கடைசியாகத் தனது மனைவியைத் தன் னிடம் வரவழைத்துக்கொள்ள, அல்லது புதிதாக ஒருத்தியை மனைவியாகக் கொள்ள ஏற்பாடு செய்துகொள்ளுகிறான்" என்று கூறுவது வழக்கம். கடைசியாக, இனி பிழைக்க மாட்டானென்று கைவிடப்பட்டு, மரணப்படுக்கையில் படுத் துக்கொண்டிருப்பவனுக்கு சாஸ்திரங்கள் இன்னொருவித சந்யாசத்தை விதிக்கின்றன. ஏனென்றால், அப்பொழுது, அவன் மரிப்பானானால், அவன் மிகமிகப் பரிசுத்தமான விர்த மெடுத்துக் கொண்டு மரிப்பவனாகிறான்; அவனுடைய அடுத்த ஜன்மத்திலே அதன் புண்ணியம் அவனுக்கு உண் டாகும். அவன் பிழைத்துக்கொண்டால், அவன் மறுபடி யும் தனது பழைய வாழ்க்கைக்குச்செல்லமாட்டான்; ஆனால், பிரஹ்மஞானத்தை யடைவதற்குச் சிறந்த பிரயத்தனங்கள்

செய்துகொண்டு தனது மிகுதிக் காலத்தைக் கழிப்பான். ஸ்வாமி சிவாநந்தர் உனது மாமனுக்கு இம்மாதிரி சந்யாசம் அளித்தார். ஐயோ! பாபம்! அவர் இறந்துவிட்டார்; ஆனால், அந்த உபதேசத்தினலே அவர் இன்னும் உயர்ந்த தொரு, புதிய ஜன்ம மடைவார். கடைசியாக, சந்யாசத்தின் மூலமாகவன்றி, ஆத்மஞான மடைவதற்கு வேறு வழி யில்லே.

சிஷ்யன் :—அப்படியானல், ஸ்வாமி! கிரகஸ்தர்க ளுடைய கதி என்ன ?

ஸ்வாமி :—ஏன், சத்கர்மமாம் புண்யத்தினலே, அவர் கள் தங்களுடைய, ஏதேனு மொரு, இனிமேல் வரப் போகிற ஜன்மத்தில், இந்தத் தியாகம் அடைவார்கள், இந் தத் தியாகம் உண்டாய்விட்டால், எல்லாத் துன்பங்களும் ஒழிந்துவிடும்; இனிமேல் அதிகம் தாமத மில்லாமல் அவன் ஜனனமரணமாகிற இந்த ரகஸ்யத்தைக் கடந்து விடுகின்றான். ஒரு சிலர், ஒன்று அல்லது இரண்டு பேர், திருஷ்டாந்தமாக, நமக்குள் நாகமஹாஷயரைப்போல, கிருகஸ்ததர்மத்தை உண்மையாகப் பூர்த்தி செய்து மிகமிக உத்கிருஷ்டமான முக்தியை அடையக் காணப்படலாம்.

சிஷ்யன் :—ஸ்வாமி! உபநிஷத்துக்கள் முதலியவை கள்கூடத் தியாகத்தையும் சந்யாசத்தையும்பற்றித் தெளிவா கக் கூறவில்லேயே.

ஸ்வாமி :—நீ என்ன பைத்தியக்காரனைப்போலப் பேசுகிறாய்? தியாகந்தானே உபநிஷத்துக்களின் ஆத்மாவாயுள்ளது. விவேக விசாரணையினாலுண்டான ஞானமே உபநிஷத் அறிவின் அத்தியந்த நோக்கம். ஆயினும், புத்தருடைய காலம் முதற்கொண்டுதான் சந்யாசக் கொள்கையும், புலன்களாலாய போகத்தை விட்டுவிடுதலாம் தியாகமும் இந்தியா முழுதிலும் அதிகநன்றாகப் போதிக்கப்பட்டனவென்பதே எனது நம்பிக்கை. அப்பொழுதுமுதல்தான் தியாகம் மதவாழ்க்கையின் மிகமிக உத்திருஷ்டமான நோக்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. ஹிந்துமதமானது, புத்தருடைய இந்தத் தியாக உணர்ச்சியைத் தனக்குள்ளேயே கிரகித்துக்கொண்டது. இவ் வுலகில், புத்தர் போன்று, அத்தகைய தியாக புத்தியுடைய பெரியோர் பிறந்ததே யில்லை.

சிஷ்யன்:—ஸ்வாமி! அப்படியானால், புத்தர் பிறப்பதற்கு முன், இந்தத் தேசத்திலே தியாக உணர்ச்சியேயில்லை யென்றும், சந்யாசிகளே கிடையாதென்றும் தாங்கள் கூறுகிறீர்களா?

ஸ்வாமி :—அப்படிச் சொல்லுகிறது யார்? சந்யாசஸ்தாபனம் இருந்தது; ஆனால், பொது ஜனங்கள் அதை வாழ்க்கையின் லக்ஷியமாக ஒப்புக்கொள்ளவில்லை; அது விஷயமாக அவ்வளவு உண்மை யுணர்ச்சி யில்லை; ஆத்ம விசாரணையிலே அவ்வளவு உறுதி யில்லை. ஆகையால், புத்தர்

அநேக யோகிகளிடத்தும் சாதுக்களிடத்தும் சென்ற பொழுது கூட, அவர் நாடிய அமைதியை எங்கும் அடைய வில்லை. பின்னர், உத்கிருஷ்டோத்கிருஷ்டத்தை யநுபவத்தில் கொண்டுவருதற்காக அவர் தமது சொந்த முயற்சியையே கடைப்பிடித்து, "இந்த இடத்திலே எனது சரீரம் வாடி வதங்கிப் போகட்டும்," என்பது போன்ற கீர்த்தி வாய்ந்த வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு ஒரு இடத்தில் உட்கார்ந்து, புத்தரான பின்னரே அங்கிருந்து எழுந்திருந்தார். இப்பொழுது இந்தியாவிலே சந்யாசிகளால் வசிக்கப்பெற்று வரும் அநேக மடங்களெல்லாம் ஒரு காலத்தில் பௌத்த மதத்தின் வச மிருந்தவையாம். ஹிந்துக்கள் இப்பொழுது அவற்றைத் தங்களுடைய மாதிரியில் திருத்திக்கொண்டு, தங்களுக்குச் சொந்த மாக்கிக்கொண்டு விட்டார்கள்; அவ்வளவு தான். உண்மையாகச் சொல்லப்போனால், சந்யாச ஸ்தாபனமானது புத்தர் முதலே ஆரம்பித்தது. இந்த ஸ்தாபனத்தின் மரித்த எறும்புகளுக்குள் உயிர் ஊதியவர் அவரே.

ஸ்வாமி ராமகிருஷ்ணாநந்தர்:—ஆனால், புத்தர் பிறப்பதற்கு முன்னமேயே நான்கு ஆச்ரமங்களும் இந்தியாவில் இருந்தன வென்பதற்குப் பூர்வீக தர்ம சாஸ்திரங்களும் புராணங்களும் நல்ல பிரமாணமா யிருக்கின்றன.

ஸ்வாமி:—புராணங்களிற் பெரும்பான்மையும் மநு தர்மசாஸ்திரங்களும் மற்றும், மகா பாரதத்தில் மிகுதியும்

கூடச் சமீப காலத்திய கிரந்தங்களேயாம். பகவான் புத்தர் அதெல்லாவற்றுக்கும் முந்தியவர்.

ஸ்வாமி ராமகிருஷ்ணாநந்தர்:—அப்படி வைத்துக்கொண்டால், புத்தமதத்தைப்பற்றிய விவாதங்கள் வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும், தர்மசாஸ்திரங்களிலும், புராணங்களிலும் மற்றும் காணப்படும். ஆனால், அத்தகைய விவாதங்கள் இந்தப் புராதன கிரந்தங்களிலே காணப்படாததினால், புத்தர் அவற்றுக்கெல்லாம் முந்தியவர் என்று எப்படித் தாங்கள் சொல்லமுடியும்? ஒரு சில பழைய புராணங்களிலே, புத்தக் கொள்கையின் விவரங்கள் ஒருவாறு அளிக்கப்பட்டிருக்கின்றன வென்பது உண்மைதான்; ஆனால், இவற்றிலிருந்து, தர்ம சாஸ்திரங்களும் புராணங்களும் போன்ற ஹிந்துக்களுடைய சாஸ்திரங்கள் சமீபகாலத்தவை யென்று முடிவு படுத்திவிட முடியாது.

ஸ்வாமி :—சரித்திரத்தைப் படித்துப்பாருங்கள்! ஹிந்துமதம் புத்தருடைய கொள்கைக ளெல்லாவற்றையும் கிரகித்துக்கொண்டதினாலேயே அவ்வளவு பெருமை பொருந்தியதாயிருக்கிறதென்பதை நீங்கள் காண்பீர்கள்.

ஸ்வாமி ராமகிருஷ்ணாநந்தர்:—புத்தர் தமது ஜீவிதத்தில் தியாகம், பற்றற்ற தன்மை இவைபோன்ற கொள்கைகளை நன்றாக அனுஷ்டித்து, உத்தமமான ஹிந்து

எண்ணங்களுக்கு மறுபடியும் உயிர் கொடுத்தார்; அவ்வளவுதான் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஸ்வாமி :—ஆனால், இந்த விஷயம் நிரூபிக்கப்பட முடியாது. ஏனெனில், புத்தர் பிறப்பதற்கு முன், சரித்திர விஷயமே நமக்குக் கிடைக்கிறதில்லை. சரித்திரத்தை மாத்திரம் நாம் பிரமாணமாக எடுத்துக்கொள்வதானால், பூர்வீக காலத்து மிகுந்த அந்தகாரத்தின் மத்தியில் புத்தர் ஒருவரே ஞான ஒளி வீசும் வடிவமாகப் பிரகாசிக்கிறாரென்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

மறுபடியும் சன்யாசத்தைப்பற்றிப் பேச்சு ஆரம்பித்தது.

ஸ்வாமி :—சந்யாசத்தின் ஆரம்பம் எங்கிருந்தாலும் சரி, மனுஷ்ய ஜீவியத்தின் லக்ஷியம் இந்தத் தியாக விரதத்தையெடுத்துக்கொண்டு, பிரஹ்மஞானி யாவதேயாம். பரமோத்தேசம் சந்யாசாச்ரமத்தில் புகுவதாம். தியாக உணர்ச்சியானால் உலக வாழ்க்கையை உதறி யெறிந்தவர்களே உண்மையில் பாக்கியவான்கள்.

சிஷ்யன் :—ஆனால், ஸ்வாமி! தேசத்திலே சஞ்சரிக்கும் சந்யாசிகள் அதிகப்பட்டுவிட்டதினால், லௌகிக அபிவிருத்தியில் அதிகம் கெடுதல் விளைந்துவிட்டதென்று அநேக ஜனங்கள் இக்காலத்திலே அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தச் சந்யாசிகள் தங்களுடைய காலக்ஷேபத்துக்கு

கிருகஸ்தர்களின்மீது சார்ந்துகொண்டு சோம்பேறித்தன மாகச் சுற்றித்திரிகிறார்களென்றும், ஜாதிய சமுதாய அபி விருத்திக்கு இவர்களால் எவ்வித பிரயோசனமு மில்லை யென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஸ்வாமி:—ஆம்; லௌகீக அபிவிருத்தி யென்றால் என்ன வென்பதை நீ முதலில் விளக்கிக் காட்டுவாயா?

சிஷ்யன்:—கல்வியினால் வாழ்க்கையின் ஆவசியகங் களைச் சம்பாதித்தும்; சாஸ்திரத்தினாலே வியாபாரம், கைத் தொழில், போக்குவரவுகள் ஆகிய இவையும், மற்றும் இவை போன்ற விஷயங்களை ஜீவிதத்தில் அபிவிருத்தி செய்தும், மேனாட்டினர் செய்துகொண்டிருப்பதுபோலச் செய்வதே.

ஸ்வாமி:—ஆனால், உண்மையான ரஜோகுணம் மனித னிடத்தில் எழுப்பப்படாமற் போனால், இவை யெல்லாம் செய்யப்பட முடியுமா? நான் இந்தியா முழுதும் சஞ்சரித் தும், எங்கும் இந்த ரஜோகுணம் வெளிப்பட்டிருப்பதைக் காணவில்லை. எல்லாம் தமஸ்! தமஸ்!! பொது ஜனங்கள் தமஸில் ஆழ்ந்து கிடக்கிறார்கள்; சந்யாசிகளுக்குள்ளே தான் இந்த ரஜோ குணத்தையும் சத்துவ குணத்தையும் நான் பார்க்க முடிந்தது. இந்த ஜனங்கள் தேசத்தினுடைய முதுகெலும்புபோன் றிருக்கிறார்கள். உண்மையான சந் யாசி கிருகஸ்தர்களுக்கு ஆசார்யனும். அவர்களிடமிருந்து கிடைத்த அறிவினாலும் போதனையினாலுமே, பூர்வகாலத்துக்

7

கிருகஸ்தர்கள் ஜீவித யுத்தங்களிலே அநேக முறை வெற்றி பெற்ருர்கள். கிருகஸ்தர்கள் சாதுக்களுக்கு அவர்களுடைய விலை மதிப்பற்ற போதனைகளுக்குப் பதிலாகத்தான் ஆகாரமும் ஆடையும் அளிக்கிருர்கள். இந்தியாவில் அத்தகைய பரஸ்பரம் மாற்றிக்கொள்ளுதல் இல்லாதிருந்தால், அதன் ஜனங்கள் இதற்குள்ளாக அமெரிக்க இந்தியர்களைப் போல அழிந்து போயிருப்பார்கள். கிருகஸ்தர்கள் இன்னும் சாதுக்களுக்குக் கொஞ்சம் ஆகாரம் கொடுத்து வருவதினுல் தான், அபிவிருத்தியாகிற மார்க்கத்திலே காலை இன்னும் நன்ருக ஊன்றி வைத்துக்கொண்டிருக்கிருர்கள். சந்யாசிகள் சோம்பேறிக ளல்லர். அவர்கள் தான் உண்மையில் சுறுசுறுப்புக்கெல்லாம் ஊற்றுஸ்தானமா யிருப்பவர்கள். கிருகஸ்தர்கள் சாதுக்களின் ஜீவிதங்களிலே சிறந்த கொள்கைகள் அனுஷ்டிக்கப்படுவதைக் கண்டு, அவர்களிடமிருந்து அத்தகைய சிறந்த கொள்கைகளை ஏற்றுக்கொள்கிருர்கள். இதனுல்தான் அவர்கள் கர்மபூமியி லிருந்துகொண்டு இதுவரையில் தங்கள் ஜீவிதப் போராட்டத்தை நடத்தி வந்திருக்கிருர்கள். பரிசுத்த சாதுக்களுடைய திருஷ்டாந்தம் ஜீவிதத்தில் பரிசுத்த எண்ணங்களை யனுஷ்டிக்கும்படி செய்கின்றது, வேலையினிடத்து உண்மையான சக்தியை உண்டுபண்ணுகின்றது. சந்யாசிகள், தங்களுடைய வாழ்க்கையிலே, ஈச்வரன் பொருட்டும் உலகநன்மையின் பொருட்டும் எல்லாவற்றையும் தியஜிப்பதாகிய மிகமிகச் சிரேஷ்டமான கொள்கை

யை அநுஷ்டித்து, சிறந்த கார்யங்கள் எல்லாவற்றிலும் கிருகஸ்தர்களுக்கு உணர்ச்சியை உண்டு பண்ணுகிறார்கள்; இதற்குப் பதிலாகக் கிருகஸ்தர்கள் சில கவளங்கள் ஆகாரம் கொடுக்கிறார்கள். அந்த ஆகாரத்தை யுண்டுபண்ணிக் கொள்வதற்குள்ள குணமும் சக்தியும், சர்வசங்க பரித்தியாகிகளாகிய சந்யாசிகளினுடைய ஆசி வசனங்களும் நல் விருப்பங்களும் காரணமாக, ஜனங்களிடத்திலே அபிவிருத்தி யடைகிறது. ஜனங்கள் இன்னும் ஆழ்ந்து கிடக்கும் விஷயங்களை அறியத் தவறி, சந்யாச ஸ்தாபனத்தையே குறை கூறுகிறார்கள். இதர தேசங்களில் எப்படி யிருந்தாலும் சரி, இந்தப் பூமியிலே கிருகஸ்தர்களுடைய ஜீவிதமாகிற படகு மூழ்கிப்போய் விடுகிறதில்லை; ஏனென்றால், சந்யாசிகள் அதன் சுங்கானில் இருக்கிறார்கள்.

சிஷ்யன் :—ஆனால், ஸ்வாமி! ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று உண்மையான சிரத்தையுடையவர்களாக எத்தனைச் சந்யாசிகள்காணப்படலாம்.

ஸ்வாமி :—ஆ! ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீராமகிருஷ்ணரைப்போல ஒரு பெரிய சந்யாசி வந்தால் போதும்! அவர் வந்து ஆயிரம் வருஷங்களுக்கு ஜனங்கள் அவர் வைத்து விட்டுப் போகிற எண்ணங்களினாலும் லக்ஷியங்களினாலும் தங்களைத் தாங்களே நடத்திக்கொண்டுபோக முடியும். இந்த சந்யாச ஸ்தாபனம் தேசத்தில் இருக்கிறதினாலேயே அவரைப் போன்ற பெரியோர் இங்குப் பிறக்கிறார்கள். ஜீவித

ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலுமே அநேகமாகக் குறைகள் இருக்கின்றன. ஆனால், எத்தனைக் குற்ற முள்ளதாயினும் இந்தச்சிறந்த ஸ்தாபனமானது ஜீவிதத்தின்மற்றெல்லா ஸ்தாபனங்களைப்பார்க்கிலும் சிறந்து விளங்குவதற்குக் காரணம் யாது? காரணம் என்னவென்றால், உண்மையான சந்யாசிகள் தங்களுடைய சொந்த முக்தியையும் தியஜித்துவிட்டு உலகுக்கு நன்மை செய்வதற்காகவே உயிர் வாழ்கிறார்கள். அத்தகைய சிறந்த ஸ்தாபனத்தினிடத்தில் நீ நன்றி பாராட்டாமற் போனால், சீச்சீ! சீச்சீ!!

"பெஹுஜன ஹிதாய, பெஹுஜன சுகாய" சந்யாசி பிறக்கின்றான். சந்யாசம் வகித்தும் தனது லக்ஷியத்தை மறப்பவனுடைய வாழ்க்கை யெல்லாம் உண்மையில் வீணானதேயாம். உண்மையில் சந்யாசியானவன் இந்த உலகினுள்ளே பிறர் பொருட்டுத் தன்னுடைய ஜீவிதத்தைத் தியஜிக்கவும், மனிதர்களுடைய விசனகரமான அழுகையை நிறுத்தவும், விதவையினுடைய கண்ணீரைத் துடைக்கவும், புத்திர சோகத்தினால் வருந்தும் தாய்க்குச் சாந்தி யளிக்கவுமே பிறக்கிறான்; அறிவில்லாத ஜனங்களுக்கு உயிர் வாழ்வதற்கு வேண்டிய முறைகளைத் தயாரித்துக் கொடுக்கவும், ஞானோபதேசங்களைப் பரப்பி எல்லோருக்கும் லௌகீகத்திலும் வைதிகத்திலும் க்ஷேமத்தை யுண்டுபண்ணவும், ஞான வொளியை வீசிப் பிரஹ்மவஸ்துவாகிற உறங்குகின்ற சிம்ஹத்தை எழுப்பிவிடவுமே பிறக்கிறான். நாம் வாழ்வது

நமது முக்தியின் பொருட்டும் உலகின் நன்மையின் பொருட்டுமேயாம். ஆகையால், என் சோம்பேறிகளா யுட்கார்ந்திருக்கிறீர்கள்! எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! கிளம்புங்கள்! பிறரையும் எழுப்புங்கள்! நீங்கள் செல்லும் முன், மனுஷ்ய ஜன்மப் பிரயோசனத்தை யடைந்துவிடுங்கள்!

IX

ஒரு சமயத்தில் ரிக்வேதத்தைப்பற்றி ஸ்ரீசயனாசாரியார் எழுதியுள்ள வியாக்யானத்தை யெடுத்துத் தமது சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, மாக்ஸ் முல்லரின் ரிக்வேத ஆங்கில மொழிபெயர்ப்புப் புத்தகமும் அடிக்கடி பார்க்கப்பட்டு வந்தது.

ஸ்வாமி:—நல்லது, ஸ்ரீ சயனரே வேதங்களுக்குத் தாம் எழுதியுள்ள வியாக்யானத்தை மறுபடியும் உயிர்ப்பிப்பதற்காக மாக்ஸ் முல்லராகப் பிறந்திருக்கிறாரென்று நான் கருதுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா! இந்த எண்ணம் எனக்கு நெடுநாட்களாக இருந்து வருகிறது. நான் மாக்ஸ் முல்லரைப் பார்த்தபின்னர்,இந்த எண்ணம் என் மனத்திலே ஸ்திரப்பட்டுவிட்டது. இந்தத் தேசத்திலேகூட, வேதங்களிலும் வேதாந்தத்திலும் அவ்வளவு ஸ்திரமாக நிலைபெற்று, இடைவிடாத முயற்சி செய்து வரும் இத்தகைய ஒரு வித்வானைத் தாங்கள் காண முடியாது. இஃதெல்லாவற்றுக்கும் மேலே, ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில், என்ன ஆழ்ந்த,

அளவுக்கு மிஞ்சிய மதிப்பு! அவர் ஈச்வராவதாரமென்று அவர் நம்புகிருரென்று நீங்கள் அறிவீர்களா? நான் அவருடைய விருந்தினனு யிருந்தபொழுது, எனக்கு எவ்வளவு உபசாரணை ! அந்த வயோதிகரையும் அவருடைய மனைவியாரையும் நான் பார்த்தபொழுது, இன்னெரு வசிஷ்டரும் அருந்ததியும் போல அவர்கள் கிருகவாழ்க்கை வாழ்ந்து வந்தார்களென்று எனக்குத் தோன்றிற்று. என்னை விட்டுப் பிரிந்தபொழுது, அந்தக் கிழவருடைய கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

சிஷ்யன் :—ஆனுல், ஸ்வாமி! சயனரே மாக்ஸ்முல்லரா யிருந்தால், புண்ணிய பூமியாம் இந்தியாவிலே பிறக்காமல், மிலேச்சராக என் பிறந்தார்?

ஸ்வாமி :—நான் ஆர்யன், மற்றவன் மிலேச்சன் என்ற உணர்ச்சியும் வித்யாசமும் அஞ்ஞானத்தினு லுண்டாகிறது. ஆனுல், ஜானத்தின் ஜோதி வடிவமாக வேதங்களுக்கு வியாக்யான கர்த்தாவாயுள்ளவர்—அவருக்கு வர்ணுச்ரமமும் ஜாதி பேதங்களும் எது? அவருக்கு அவை முழுதும் பொருளற்றவையேயாம். மனுஷ்ய வர்க்கத்துக்கு நன்மை செய்யவேண்டுமென்று எங்கெல்லாம் அவர் பிரியப்படுகிருரோ அங்கெல்லாம் அவர் மனுஷ்யப் பிறவி யெடுக்க முடியும். முக்கியமாக வித்தை, ஐச்வர்யம் இரண்டிலும் சிறந்த பூமியிலே அவர் பிறப்பதற்கு இஷ்டப்படாவிட்டால், அத்தகைய அபாரமான புத்தகங்

களைப் பிரிசுரிப்பதற்கு வேண்டிய பெருஞ் செலவுத்தொகை களை எங்கு அவர் பெற முடியும்? ரிக்வேதத்தைப் பிரசுரிப்ப தற்குக் கிழக்கிந்திய சங்கத்தார் ஒன்பது லக்ஷம் ரூபா கொடுத்தார்களென்று நீ கேள்விப்பட்டதில்லையா? இந்தப் பணமும் போதாததாயிருந்தது. வைதிக பண்டிதர்கள் நூற்றுக் கணக்காக மாதச் சம்பளத்தில் இந்தத் தேசத்தில் நியமிக்கப்பட வேண்டிவந்தது. இந்தக் காலத்திலே, இங்கே இந்தத் தேசத்திலே, அறிவை யடைவதற்கு அவ்வளவு மிகுந்த ஆசையையும், அறிவின்பொருட்டும் கல்வியின்பொருட்டும் அவ்வளவு பெருந்தொகை செலவழிக்கப் படுவதையும் எவராவது பார்த்ததுண்டா? மாக்ஸ் முல்லரே தமது முகவுரையில் அதை யெழுதியிருக்கிறார். இருபது வருஷங்கள் வரையில் கையெழுத்துப் பிரதிகளையே தயார்செய்து வந்ததாக அவர் எழுதியிருக்கிறார். பின்னர், அச்சிடும் வேலைக்கு இன்னும் ஒரு இருபது வருஷங்கள் பிடித்தன! சாதாரண மனிதன் ஒரே பிரசுரத்துக்காகத் தனது வாழ்நாளில் நாற்பத்தைந்து வருஷம் பாடுபடுவது சாத்தியமான காரியமன்று. அதைப்பற்றி ஆலோசித்துப் பாருங்கள்! அவர் சயனரே யென்று நான் சொல்வது வெறும் சோம்பேறிக் கற்பனையா?

பின்னர், ஸ்வாமிகள் வேதங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்.

ஸ்வாமி :—வேதம் என்றால் நித்திய உண்மைகளின் சமஷ்டி யென்று பொருள். வேத காலத்து ரிஷிகள் இந்த உண்மைகளை அநுபவத்தில் அறிந்தார்கள்; அவை ஐம்புல னதீத தர்சிகளாலேயே அநுபவத்தி லறியப்படக் கூடும்; நம்போன்ற சாதாரண ஜனங்களால் அறியப்பட முடியாது. அதனால்தான் வேதங்களிலே 'ரிஷி' என்ற பதத்துக்கு 'மந்திர சத்தியதர்சி' என்று பொருள் இருக்கிறது; ரிஷி யென்றால் கழுத்துக்குக் கீழே தொங்கும் பூணூல் போட்டுக்கொண்டிருக்கும் எந்தப் பிராஹ்மணனும் ஆகமாட்டான். வேதமானது சப்த ஸ்வபாவமானது, அல்லது கருத்து ஸ்வபாவமானது. சமுதாயமானது ஜாதிகளாக வகுக்கப் பட்டது பின்னர்தான் நடைபெற்றது. வேதமானது கருத்துக்களின் சமஷ்டியே யாகும். சப்தம் என்பது, அந்தப் பதத்துக்குள்ள பழைய வேதப்பொருளின் பிரகாரம் சூட்சும மான எண்ணமாம்; அது பின்னர் ஸ்தூல வடிவெடுத்துக் கொண்டு, தன்னைத் தானே வெளிப்படுத்திக்கொள்கிறது. ஆகையால், சிருஷ்டி பிரளய மடைகிறபடியினால், பிற்காலத் திய சிருஷ்டியின் சூட்சும விதைகள் வேதத்திலே உள் அடங்கியுள்ளது. ஆதலால், புராணங்களிலே, முதலாவது ஈச்வராவதாரமாகிய மீனவதாரத்திலே வேதமானது முதலில் வெளிப்பட்டதென்பதைக் காண்கிறோம். இந்த அவ தாரத்திலே வேதமானது முதலில் வெளிப்படவே, மற்றச் சிருஷ்டி வெளிப்பாடுகளும் பின் தொடர்ந்தன. வேறு

வார்த்தைகளில் சொன்னால், வேதத்திலுள்ள கருத்துக்கள் அல்லது சப்தங்களிலிருந்தே சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களெல்லாம் ஸ்தூல வடிவமடைய ஆரம்பித்தன. ஏனென்றால், சப்தத்திலே அல்லது கருத்திலே, எல்லா ஸ்தூல வஸ்துக்களுக்கும் சூட்சும வடிவங்கள் உண்டு. சிருஷ்டியானது ஒரே மாதிரிதான் முந்திய கல்பங்களிலும் நடைபெற்று வந்தது. வேதங்களிலுள்ள சந்தியா மந்திரத்தில் இதைப் பார்க்கிறீர்கள். "சூர்யன், சந்திரன், பூமி, ஆகாயம், வானம், மேலுலகங்கள் ஆகிய எல்லாவற்றையும், சிருஷ்டி கர்த்தா முந்திய கல்பங்களில் போலவே ஒரே மாதிரியிலும் முறையிலும் சிருஷ்டித்தார்." உங்களுக்குத் தெரிகிறதா?

சிஷ்யன் :—ஆனால், ஸ்வாமி! பிரத்தியட்சத்தில் ஸ்தூலப்பொருள் இல்லாதபொழுது, சப்தம் அல்லது கருத்து எப்படி உபயோகப்படுத்தப்படமுடியும்? எதற்காக உபயோகப்படுத்துவது? எப்படி நாமங்கள் இடுவது?

ஸ்வாமி :—ஆம், எடுத்தவுடனே கஷ்டம் போலத் தோன்றுவது அதுதான். ஆனால், இதை யோசித்துப் பார். இந்த ஜாடி துகள் துகளாக உடைந்துபோவதாகவைத்துக் கொள்வோம்; ஜாடி என்ற கருத்தே யில்லாமற் போய்விடுகிறதா? இல்லை. ஏனென்றால், ஜாடியானது ஸ்தூல கார்யமாகும். ஆனால் "ஜாடி" என்ற கருத்து சூட்சுமாவஸ்தையாகும், அல்லது ஜாடியின் சப்தாவஸ்தையாகும். அதே மாதிரி, ஒவ்வொரு வஸ்துவினுடையவும் சப்தாவஸ்தையே

அதனுடைய சூட்சுமாவஸ்தையாம்; நாம் எந்த விதத்திலாவது பார்க்கின்ற, கேட்கின்ற, ஸ்பர்சிக்கின்ற அல்லது கருதுகின்ற வஸ்துக்கள் சூட்சும அல்லது சப்த அவஸ்தையில் வஸ்துக்களின் ஸ்தூல வெளிப்பாடுகளேயாம், காரியத்தையும் அதன் காரணத்தையும் நாம் கூறுவதுபோல. சிருஷ்டி முழுதுமே அழிக்கப்பட்ட பொழுதும், ஜகத்தினுடைய அறிவாக, அல்லது எல்லா ஸ்தூலப் பொருள்களினுடையவும்சூட்சுமஉண்மையாகச்சப்தமானது பிரஹ்மவஸ்துவிலே காரண வடிவத்தில் உள்ளது. சிருஷ்டி வெளிப்படும்பொழுது காரண வடிவத்திலிருக்கும் வஸ்துக்களின் இந்தச் சமஷ்டியானது சலிக்கின்றது; இது எல்லாவற்றுக்கும் ஆதாரபூதமா யிருத்தலினாலே, ஓம் என்ற மூல சப்தம் தன்னிலிருந்து தானே உண்டாகின்றது. பின்னர் அந்தக் காரண சமஷ்டியிலிருந்து, முதலில் ஒவ்வொரு வஸ்துவினுடையவும் சூட்சும விக்ரகம் அல்லது சப்தவடிவமும் பின்னர் அதனுடைய ஸ்தூல வெளிப்பாடும் வெளிவருகின்றன. இப்பொழுது காரண சப்தம், அல்லது பிரபஞ்சப் பிரக்ஞை பிரஹ்ம வஸ்துவா யிருக்கிறது; அதுதான் வேதம். இது தான் சயனருடைய கருத்து. இப்பொழுது உனக்குத் தெரிகிறதா ?

சிஷ்யன் :—தெரியவில்லை, ஸ்வாமி! நான் தெளிவாக அதை யறிந்துகொள்ள முடியவில்லை.

ஸ்வாமி :—நல்லது. ஜகத்திலேயுள்ள ஜாடிகளெல்லாம் உடைக்கப்பட்டுவிட்டபொழுதிலும், "ஜாடி" என்ற கருத்து அல்லது சப்தம் இருந்துகொண்டுதான் இருக்குமென்பதை நீ அறிகிறுயென்று நான் நினைக்கிறேன். அது போலவே, ஜகத்தானது அழிக்கப்பட்டுவிடுமோனுல்,—ஜகத் ஆக்கப்படுகின்ற வஸ்துக்களெல்லாம் துகள்துகளாக நுறுங்கப்பட்டுப் போகுமானுல் என்று கூறுகிறேன்—அறிவிலே அவற்றையெல்லாம் குறிப்பிடுகின்ற கருத்துக்கள் அல்லது சப்தங்கள் ஏன் இருந்துகொண்டிருக்கக் கூடாது? தகுந்த காலத்திலே இரண்டாவது சிருஷ்டியொன்று ஏன் உண்டாகலாமென்று வைத்துக்கொள்ளக்கூடாது?

சிஷ்யன்:—ஆனுல், ஸ்வாமி! ஒருவன் "ஜாடி", "ஜாடி" என்று கூவிக்கொண்டிருப்பானுனுல், அது எவ்வித ஜாடியும் உண்டாவதற்குக் காரணமாயிராது!

ஸ்வாமி:–முடியாது. நீயாவது நானுவது அப்படிக் கூவினுல்,ஒன்றும் உண்டாகாது; ஆனுல்,சிருஷ்டி நிச்சயங்களிலே பரிபூர்ணமான பிரஹ்மவஸ்துவில் அதனுடைய கருத்துக் கிளம்பினுல், ஜாடி வெளிப்படத்தான் வேண்டும். தர்மாநுஷ்டான சாதகர்களே அசாத்திய மெனப்படும் கார்யங்களை மனுேசக்தியினுல் செய்வதை நாம் பார்க்கும்பொழுது, பரிபூர்ண சிருஷ்டி யியற்றும் மனத்தையுடைய பிரஹ்மவஸ்துவைப்பற்றி என்ன சொல்வது? சிருஷ்டி சமயத்தில், பிரஹ்மவஸ்து சப்தமாக வெளிப்படுகிறது; பின்னர் நாதம் அல்

லது ஓங்கார வடிவத்தை யடைகின்றது. அடுத்த படியாக முந்திய கல்பங்களில் பலவிதமாக இருந்த, பூ, புவஹ, ஸ்வஹ, பசு, மனிதன் முதலிய பிரத்தியேக சப்தங்கள் அல்லது கருத்துக்கள் அந்த ஓங்காரத்திலிருந்து வெளிவர ஆரம்பிக்கின்றன. இந்தக் கருத்துக்கள் பரிபூரண சங்கற்ப சக்தியையுடைய பிரஹ்ம வஸ்துவினிடத்திலே தோன்றிய வுடனே, அதற்குச் சரியாயுள்ள ஸ்தூல வஸ்துக்களும் தோன்றுகின்றன; மெல்ல மெல்ல, வேற்றுமைப்பட்ட ஜகத்தானது வெளிப்படுகிறது. எப்படி சிருஷ்டியின் உற்பத்தி சப்தமேயாயிருக்கிறது என்பதுஇப்பொழுது உனக்குத் தெரிகிறதா?

சிஷ்யன் :—ஆம், எனக்கு இப்பொழுது கொஞ்சம் புலனுகிறது; ஆனல், மனத்தில் தெளிவாக அறிவு ஏற்படவில்லை,

ஸ்வாமி :— நல்லது; தெளிவான அறிவு, அந்தர்முகாநுபூதி யுண்டாவது அற்ப விஷயமன்று. எனது புத்ரா! மனமானது பிரஹ்ம வஸ்துவினிடத்திலே லயமடையும் பொருட்டுச் செல்லும்பொழுது, அது கடைசியாக நிர்விகற்ப ஸ்திதியை அடைவதற்கு இந்தப் படிகளை யெல்லாம் ஒன்றன் பின் ஒன்ருகக் கடந்து செல்கிறது. சமாதி யடையும் முறையிலே, முதலாவது ஜகத்தானது ஒரே கூட்டம் கருத்துக்களாகத் தோன்றுகின்றன. பின்னர், முழுதும் ஒரே பிரஹ்மாண்டமான ஓங்காரத்தில் ஐக்கியப்பட்டு விடுகிறது. பின்னர் அதுவும் கரைந்துவிடுகிறது ; அதுவும் சத்துக்கும்

அசத்துக்கும் இடையே யிருப்பதாகத் தோன்றுகிறது. நித்திய நாதத்தினுடைய அநுபவம் அதுவே. பின்னர் மனமானது பிரஹ்ம வஸ்துவின் உண்மைத் தன்மையிலே லயமடைந்துவிடுகிறது; அப்பொழுது அது நாச மடைந்துவிடுகிறது! எல்லாம் சாந்தியே!

அவதார புருஷர்கள் போன்ற பெரியோர், சமாதியிலிருந்து "நான்," "எனது" என்னும் பிரதேசத்துக்குத் திரும்பி வருகிறபொழுது, முதலில் அப்பிரத்தியட்சமான நாதத்தை யநுபவிக்கிறார்கள்; அது மெல்ல மெல்லத் தெளிவாக வரைந்து, ஓங்காரமாகத் தோன்றுகிறது; பின்னர் ஓங்காரத்திலிருந்து ஜகத்தினுடைய சூட்சும வடிவமானது ஒரு கூட்டம் கருத்துக்கள் போல அனுபவ மாகிறது; கடைசியாக, ஜடப் பிரபஞ்சம் பார்வையில் ஏற்படுகிறது. ஆனால், சாதாரண சாதகர்கள் மிகுந்த அப்பியாசத்தினாலே எப்படியோ நாதத்துக் கப்பால் சென்றுவிடுகிறார்கள். அவர்கள், பிரத்தியட்சப் பிரஹ்மானுபூதியை யொருதரம் அடைந்துவிட்டால், அவர்கள் மறுபடியும் ஜடப் பார்வையாம் கீழ் பூமிக்குத் திரும்பி வர முடியாது. அவர்கள் "பாலில் நீர் போல" பிரஹ்மவஸ்துவிலே கரைந்துவிடுகிறார்கள்.

சப்தங்கள் மறுபடியும் வேத சப்தங்களென்றும், சாதாரண மனுஷ்ய வழக்கத்திலுள்ளவை யென்றும் இரண்டுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நான் இந்த நிலைமையை

"சப்த சக்திப் பிரகாசிகா" என்ற நியாய கிரந்தத்தில் கண்டேன். அங்கே, விவாதங்கள் சந்தேகமில்லாமல் பெரும் ஆராய்ச்சிச் சக்தியைக் குறிக்கின்றன. ஆனால், ஓ! பதப் பிரயோகங்கள் மூளையைக் குழப்பிவிடுகின்றன!

(பின்னர் கிரீசச் சந்திரரை நோக்கி) கிரீசச் சந்திரரே! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? நல்லது, நீங்கள் இதையெல்லாம் படித்ததில்லை; நீங்கள் இந்தக் கடவுளையும் அந்தக் கடவுளையும் பூஜித்துக்கொண்டு, காலத்தைக் கழிக்கிறீர்கள். இல்லையா?

கிரீசர் :— சகோதர! நான் என்ன படிக்கட்டும்? அதெல்லாம் ஆராய்ந்து பார்ப்பதற்கு எனக்கு நேரமுமில்லை, அறிவும் போதாது. ஆனால், இப்பொழுது, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கிருபையால், உங்களுடைய வேதங்களிடத்தும் வேதாந்தத்தினிடத்தும் நான் விடைபெற்று, அப்பால் அதீதத்திலே ஒரு குதி குதித்துவிடுவேன்! அவர் உங்களையிந்த ஆராய்ச்சிகளின் மூலமாகவெல்லாம் இட்டுச் செல்கிறார்; ஏனென்றால், நீங்கள் அநேக கார்யங்கள் செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆனால், எங்களுக்கு அவையெல்லாம் தேவையில்லை.

நல்லது, நான் சொல்வதைத் தயவுசெய்து கேளுங்கள்! வேதங்களிலும் வேதாந்தத்திலும் நீங்கள் ஏராளமாகப் படித்திருக்கிறீர்கள். ஆனால், தேசத்திலேயுள்ள இந்த

மிகுந்த துன்பங்களிலிருந்து, இந்த, விசனம் நிறைந்த அழு கைகளிலிருந்து, இந்தப்பட்டினியிலிருந்து, இந்த வியபசாரக் குற்றங்களிலிருந்தெல்லாம், இன்னும் அநேக பயங்கரமான பாபங்களிருந்து நாங்கள் எவ்விதத்திலும் விடுபடுவதற்கு மார்க்கத்தை அவற்றில் எங்கேனும் கண்டதுண்டா? சொல் லுங்கள்.

கிரிசர் இப்படிச் சொல்லிவிட்டு, தேசத்தினுடைய துக்க கரமான நிலைமையை மேலும் மேலும் விவரித்துக்கொண்டே போனார்; ஸ்வாமிகள் அவற்றைக் கேட்க முடியாதவராய், அவ்விடத்தினின்றும் எழுந்து, வெளியே போயிருந்து விட்டுச் சிறிது நேரம் கழித்துத் திரும்பிவந்தார்.

ஸ்வாமி :— நல்லது. நீங்கள் இப்பொழுது என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள்?

சிஷ்யன் :— ஸ்வாமி! நாங்கள் வேதங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்; இன்னும் ஆச்சர்யம் என்ன வென்றால், நமது கிரிசர் இந்தக் கிரந்தங்களைப் படித்ததில்லை; ஆனால், அத்தியந்த உண்மைகளை வெகு தெளிவாகக் கிரகித் திருக்கிறார்.

ஸ்வாமி :— குருவினிடத்து உண்மையான பக்தியுள்ள வன் எவனோ அவனுக்கு உண்மைகளெல்லாம் தாமாகவே வெளிப்படுகின்றன; அவன் படிக்கவே வேண்டியதில்லை. ஆனால், அத்தகைய பக்தியும் சிரத்தையும் இவ் வுலகில் மிக

வும் அரிதாம். இங்குள்ள நமது நண்பாளவு அவற்றை யுடையவர்கள் சாஸ்திரங்களைப் படிக்கவேண்டியதே யில்லை. அவரைப்போல் உண்மையாக அல்லாமல் போலியாக வேஷம் போடுகிறவன் தன்னுடைய அழிவையே தான் தேடிக் கொண்டவனாவான். எப்பொழுதும் அவனுடைய புத்திமதி யைப் பின் பற்றலாம்; ஆனால், அவனுடைய வழிகளை யொரு பொழுதும் பின்பற்றக் கூடாது.

சிஷ்யன் :— ஆம், ஸ்வாமி!

ஸ்வாமி :— ஆம் என்று சொன்னால் மாத்திரம் போதாது; நான் கூறுகிறேன், வார்த்தைகளைத் தெளிவாகக் கிரகித்துக்கொள்! கூறப்படும் ஒவ்வொன்றும் சரியென்று முட்டாளைப்போலத் தலையையாட்டிவிடாதே! எதையாவது நான் சொன்னால் கூட, குருட்டுத்தனமாக நம்பிவிடாதே! முதலில், தெளிவாகக் கிரகித்துக்கொள்! பின்னர் ஏற்றுக் கொள்! ஸ்ரீராமகிருஷ்ணர் தமது ஒவ்வொரு வார்த்தை யையும் நான் தெளிவாகத் தெரிந்துகொண்ட பின்னரே நான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று எப்பொழுதும் வற் புறுத்துவது வழக்கம். சுருதி, யுக்தி, அனுபவத்தை யொத்து, நீ உனது மார்க்கத்திலேயே செல்வாய். இவ்வித மாக இடைவிடா விசாரணையினாலே புத்தி தெளிவடையும். அப்பொழுதுதான் பிரஹ்மவஸ்து அதில் பிரதிபலிக்கும். உனக்குத் தெரிகிறதா?

சிஷ்யன் :— ஆம், ஸ்வாமி! நான் அறிகிறேன். ஆனால், மூளையானது வெவ்வேறு மனிதர்களுடைய வெவ்வேறு நோக்கங்களினாலே குழப்ப மடைகிறது. "இந்தப் படிப்பினாலெல்லாம் நீ என்ன செய்யப்போகிறாய்?" என்று இந்த நிமிஷத்திலேதான் கிரீசர் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார். பின்னர், தாங்கள் வந்து "நீ படிக்கின்ற, கேட்கின்றவற்றைப்பற்றி விசாரணை செய்" என்று சொல்கிறீர்கள். ஆகையால், நான் என்னதான் செய்வது?

ஸ்வாமி :— அவர் சொன்னதும் நான் சொன்னதும் இரண்டும் உண்மைதான். ஒரே வித்யாசம் என்னவென்றால், இருவர் சொன்னதும் வெவ்வேறு நிலைமைகளிலிருந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆத்மீக வாழ்க்கையில், "ஊமையன் ருசித்த அமிருதபானம்போல" யுக்தி வாதங்களெல்லாம் அடங்கிநிற்கும்படியான படியொன்று உண்டு. இன்னொரு வித ஆத்மீக வாழ்க்கை யுண்டு. அதில் சாஸ்திரப் படிப்பினாலும் ஆராய்ச்சியினாலும் போதனையினாலும் மனிதன் உண்மையை அடையவேண்டி யிருக்கிறது. நீ படிப்பின் மூலமாகவும் விசாரணையின் மூலமாகவும் செல்ல வேண்டும்; அதுதான் நீஸ்வானுபவம் அடைதற்கு மார்க்கம். தெரிகிறதா?

ஸ்வாமி (சதாநந்தரை நோக்கி):— கிரீசர் இப்பொழுது வர்ணித்துக்கொண்டிருந்த நமது தேசத்துத் துக்ககரமான

நிலைமையைக் கேட்டு, எனது ஹிருதயம் மிகுந்த வருத்த மடைந்திருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா? நல்லது! நமது தேசத்துக்காக நீ ஏதேனும் செய்ய முடியுமா?

சதாநந்தர் .— மகராஜ்! தாங்கள் கட்டளை யிடுங்கள், தங்களுடைய அடிமை தயாராயிருக்கிறான்.

ஸ்வாமி :— முதலில், ஒரு சிறிய அளவில், ஒரு துக்க நிவிர்த்தி சாலை யாரம்பிப்பாய்! அங்கே எளியவர்களும் கஷ்ட முறுபவர்களும் நிவிருத்தி பெறவேண்டும்; வியாதியஸ்தர் கள் பராமரிக்கப்பட வேண்டும். ஆதரிப்பதற்கு எவரும் இல்லாது அநாதையா யிருக்கும் ஜனங்கள் ஜாதி நிற பேத மில்லாமல், நிவிர்த்தி யளிக்கப்பட்டு, தொண்டு செய்யப்பட வேண்டும். தெரிகிறதா?

சதானந்தர் :—ஸ்வாமி! ஆக்ஞைப்படியே நடப்பேன்.

ஸ்வாமி :— ஜீவராசிகளுக்குத் தொண்டு புரிவதைப் பார்க்கிலும் சிறந்த தர்மம் கிடையாது, இந்தத் தர்மம் உண்மை யுணர்ச்சியுடன் அநுஷ்டிக்கப்படுமானால், முக்தி யானது உள்ளங்கை நெல்லிக்கனிபோல உண்டாகிறது.

ஸ்ரீஸ்வாமி விவேகாநந்தர் அத்வைத சம்பாஷணைகள்

முற்றுப்பெற்றன.

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.